# இந்து பக்த சிரோமணிகள் சரித்திரம்

## இரண்டாம் பகுதி

16 AUG 1924

இது

மதுராபுரியில் இந்து மாதர் ஐக்கிய சங்கத்துக்
காரியதரிசியாயிருந்த

ஆ. வேதவல்லி அம்மாளவர்கள்
இயற்றியது.

பிரசுரகர்த்தர்:
ஏ. எஸ். மணி அண்டு கம்பெனியார்,
14, சாம்பையர் தெரு,
ஜார்ஜ்டவுன், சென்னை

1924

W2C
N24

விலை { பகுதி—1. அணா 8.
பகுதி—2. அணா 8.

# Tales of Hindu Saints

## (IN TAMIL)

16 AUG 1924

BY

A. VATHAVALLI AMMAL,
*Formerly Secretary of the Hindu Ladies' United Club, Madura.*

77414

MADRAS:
**A. S. MONEY & Co.,**
*14, SAMBIER STREET, GEORGETOWN.*

1924

opyright]

Part I—As. 8.
Part II—As. 8.

38946

# விளம்பரம்.

---

இந்தப் புத்தகம் விற்கும் இடங்கள் :—

(1) சென்னை : ஏ. எஸ். மணி அண்டு கம்பெனி, நெ. 14, சாம்பையர் வீதி.

(2) சென்னை : ராஜாராஜேஸ்வரிவிலாஸ் புக்டிபோ, மைலாப்பூர்.

(3) திருச்சி : டி. எம். வி. பிள்ளை அண்டு கம்பெனி, தெப்பக்குளம்.

(4) கும்பகோணம் : டி. கே. சுப்பிரமணியம் அண்டு ஸன்ஸ், டாபர் ஸ்கொயர்.

(5) மதுரை : சிதம்பர முதலியார் அண்டு கம்பெனி, புதுமண்டபம்.

(6) மதுரை : கோபால கிருஷ்ண கோனார் அண்டு கம்பெனி, புதுமண்டபம்.

(7) தூத்துக்குடி : சூஸைபிள்ளை, சென்சேவியர் புக்டிபோ.

(8) திருநெல்வேலி : எஸ் நாராயணன் அண்டு கம்பெனி, திருநெல்வேலி வாராவதி.

(9) திருநெல்வேலி : எஸ். முத்தையாபிள்ளை, திருநெல்வேலி வாராவதி.

(10) பாளயம்கோட்டை : ஸி. எம். எஸ். புக் டிபோ, பாளயம்கோட்டை.

---

ஸ்ரீ

## சென்னைப் புரசைபாக்கம் ஹூதரன்மிஷன் பேட்ரிஷியஸ் கலாசாலைத் தமிழ்ப் புலவர், திருவாளர், மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் எழுதுகிறார் : 18—5—'24.

நான் ஸ்ரீமதி. வேதவல்லியம்மாளவர்களியற்றிய 'இந்து பக்த சிரோமணிகள் சரித்திரம்' என்னும் நூலினைப்படித்துப் பார்த்தேன். இந்நூலினுட் படிக்கப் படிக்கப் பக்திச் சுவை விளைக்கும். 'பக்தவிஜயம்', 'பக்தலீலாமிர்தம்', 'பெரியபுராணம்', 'ஆழ்வார்கள் சரித்திரம்', என்னு மினியநூல்களிற் கூறப்பட்டுள்ள உண்மை யன்பர்களுடைய சரித்திரங்கள், இனியதும் எளியதும் கதலிபாகமானதுமாகிய தமிழ் வசன நடையில், ஆடவர், பெண்டிர், சிறுவர், சிறுமியர் ஆகிய பலரும் படித்து அன்பின் பெருமையை யுன்னியுன்னி யுள்ளங்குளிருமாறு சுருக்கி எழுதப்பட்டிருக்கின்றன. ஆதலின் இந்நூல் உயர்கலாசாலைகளிற் கல்விபயிலும் இளமாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் உபபாடபுத்தகமாக அமைக்கப்படின் 'சிறுமையிற் கல்வி சிலையிலெழுத்து' என்னும் ஔவை மூதாட்டியின் திருவாக்குக் கிணங்க அவர்களுக்குப் பக்தித்துறையில் பெரும்பயனளிக்கு மென்பதி லையமின்று. இதனையியற்றித் தமிழுலகிற்குத் தந்துதவிய ஸ்ரீமதி. வேவதல்லி அம்மையவர்கள் தமது நன்முயற்சியால் இதுபோன்ற நன்னூல் இன்னும் பல இயற்றி வெளியிட்டு, மாணவர் குழாத்தை மகிழ்வுறச் செய்யுமாறு எல்லாம் வல்ல இறைவர் அவ்வம்மைக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்தருள் புரிவாராக.

---

வேலு மயிலும் துணை.

## வித்துவான், ம-ள-ள-ஸ்ரீ,

## மயிலை சோமசுந்தர முதலியார் அவர்கள்

## எழுதியது: 24—4—'24.

---

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

எண்டிசையும் புகழ்மணக்க இருந்தபெருந்
தமிழணங்கென் றிரும்பூ தெய்திப்
பண்டிசைத்தா ருயர்வாண ரம்மொழியைப்
பொன்னேபோற் பரிவி னாய்ந்தே
மண்டிசையின் டொளிர்வேத வல்லித்தாய்
மாணவர்க்கு மற்றையோர்க்கும்
தொண்டிசைக்குந் தொன்னூலன் றளித்தனரா
தெஞ்ஞான்றுந் துலங்க மாதோ.

---

## சென்னை பச்சையப்பன் கலாசாலை, தமிழாசிரியர், திருவாளர், மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் எழுதுகிறார்:

**24—5—1924.**

'இந்து பக்த சிரோமணிகள் சரித்திரம்' என்னும் உரை நூலை யான் கண்ணுற்றேன். அதன் ஆசிரியர் ஸ்ரீமதி. வேதவல்லி அம்மை அவர்கள் நன்முயற்சி தமிழர் எவராலும் பாராட்டற் பாலது. புத்தகத்தின் பொருட்கூறுபாடு, நமது நாட்டிற்குப் பெரிதும் பொருத்தமுடையதே. வடநாட்டிலும் தென்னாட்டிலும் அவ்வக்காலங்களில் தோன்றிய அரும் பெருஞ் செயலையுடைய பெரியோர் பலரது அன்பின் திறம், இனிய எளிய நடையில், பண்டித பாமர ரஞ்சகமாக அம்மையாரால் எழுதப்பட்டிருப்பது எனக்குப் பெரு மகிழ்வை ஊட்டுகிறது. பழைய வரலாறுகள் புதிய முறையில் காலத்துக் கிசையும் வண்ணம் எழுதப்படுதல் இக்காலத்துக்கு இன்றியமையாது வேண்டப்படுவதேயாம். தமிழ் மொழியில் உரை நூல்கள் இல்லையென்னுங் குறை இந்நூலாசிரியரைப் பின்பற்றி, ஏனைச் சகோதரிமாரும் முற்படுவாராயின் விரைவில் நீங்கும் என்பது திண்ணம். இவ்வம்மையார் இனியும் இதுபோன்ற நல்ல நூல்களை எழுதித் தமிழகத்துக்கு உதவிபுரிவாராக.

## திருவள்ளூர் வெஸ்லியன் மிஷன் உயர்தர பாடசாலைத் தமிழ்த் தலைமைப் பண்டிதர், திருவாளர், சேலை. சகாதேவ முதலியார் அவர்கள் எழுதுகிறார் :

**24—5—'24.**

'இந்து பக்த சிரோமணிகள் சரித்திரம்' என்னும் நூலைப் படித்துப் பார்த்தேன். எழுதப்படிக்கத் தெரியாத எண்ணிறந்த ஆண்மக்கள் துன்றிக்கிடக்கும் இத்தென்னிந்திய நாட்டின்கண் ஆங்காங்குப் பெண்கள் பள்ளிக்கேகிப் படித்துத் தேறி நாவல்கள் முதலியன ஆவலாய் எழுதித் தமிழ் நாட்டைத் தழைக்கச் செய்கின்றார்களாயினும், பக்தியை யூட்டும் பழைய சரிதங்களை ஆண் பெண் மக்கட்கு மிக்குப் பயன் படும்படி முதன்முதல் ஆக்கி அளித்த பெண்மணி ஸ்ரீமதி. வேதவல்லி அம்மையே என்பேன். இத்தகைய அரிய முயற்சியில் அதிகார ஸ்தானங்களிலுள்ள ஆண்மக்கள் நம்மம்மையாரைத் தங்களாலியன்ற உதவி புரிந்து ஊக்கி யுழைக்கச் செய்வார்களாக. இவ்வாறே ஏனைய பெண்மணிகளும் கல்வியில் வெவ்வேறு துறைகளிற் புக்கு நம்மிந்திய நாட்டை முந்திய நாடாக்குவார்களென்று எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகின்றேன். ஸ்ரீமதி. வேதவல்லி அம்மையார் இயற்றியுள்ள இவ்விந்து பக்த சிரோமணிகள் சரித்திரங்கள் இனிய தெளிய நடையில் இலக்கணப் பிழையின்றி எழுதப்பட்டிருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது; என்னெனின் ஆண்மக்கள் சிலர் எழுதி வெளியிட்டிருக்கும் நூல்களில் யான் எழுத்துப் பிழைகளையும் இலக்கணவழுக்களையும் கண்டு மனம் நொந்திருக்கின்றேன். இந்நூலாசிரியராகிய நம்மம்மையார் இது போன்று இன்னும் பல நூல்களை இயற்றித் தம்மையொத்த தங்கை தமக்கைமார்களைக் கல்வியில் தழைக்கவைப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

---

பெரம்பூர் கலவல கண்ணன் செட்டியார் உயர்கலாசாலைத் தமிழ்ப் புலவர், திருவாளர், வே. த. அருச்சுன முதலியார் அவர்கள் எழுதுகிறார் : 27—5—'24.

---

ஸ்ரீமதி. வேதவல்லியம்மா ளவர்களியற்றிய "இந்து பக்த சிரோமணிகள் சரித்திரம்," என்னும் இப்புத்தகம், கருப்பஞ் சாற்றால் திரட்டிய சருக்கரை கட்டியாமென, பக்தவிஜயம், பக்தலீலாமிர்தம், ஆழ்வார்கள் சரிதை, பெரியபுராணம் முதலிய நூற்களில் விளங்கும் மெய்யன் புடைய பக்தர்களின் சரித்திரங்களிலிருந்து தொகுக்கப்பட்டு ளது. இதனையான் முற்றும் படித்துப் பார்த்தேன். இது கற் பார், கேட்பார் யாவரையும் பக்தித்துறையில் மூழ்குவிக்கு மென்பதிற் சிறிதும் ஐயமின்று. ஆண், பெண் ஆகிய இரு பாலரும் எளிதில் முத்திக் கேதுவாகிய பக்தியின் பெருமை யை யறியுமாறு இஃது இனிய தமிழ் வசன நடையில் செம்பாகமாக எழுதப்பட்டிருக்கின்றது. இஃது ஒவ்வொரு கலாசாலை மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் இன்றியமை யாத தென்பது எனது கொள்கை. இத்தகைய பக்தி யையும் சத்தியத்தையும் விளக்கும் நூற்கள் பல தமிழுலகுக் கவசிய மாதலின், இவ்வம்மையார் இன்னும் பல புத்தகங்கள் எழுதித் தமிழுலகுக் களிக்கப் பலத்தையும் ஊக்கத்தையும் ஆயுளையும் இவருக்குக் கொடுத்தருளும்படி கருணாகரக் கடவுளைப் பிரார்த்திக்கின்றனன்.

---

## தமிழ்ப்புலவர்,
## ம-௱-௱-ஸ்ரீ மணி. திருஞானசம்பந்த முதலியார் அவர்கள் எழுதிய அபிப்பிராயம் :

26—5—'24.

ஸ்ரீமதி. வேதவல்லியம்மையார் இயற்றிய இவ்வரிய புத்தகத்தைக்கண்டு பெருமகிழ்ச்சி பூத்தேன். இதன்கண் ஞானபானுக்களாகத் துலங்கிய பலமெய்யன்பர்களது திவ்விய சரிதைகளும், நல்லொழுக்கம் போதிக்கவல்ல பல அறிவுடையாரது அரிய சரிதைகளும் முறை பிறழாது அழகிய இன்பநடையில் கற்றோர், கல்லாதார், ஆடவர், மகளிர் அனைவரும் படித்து மகிழுமாறு வரையப்பட்டுள்ளன. இவ்வம்மையார் கல்வித்துறையிற் செலுத்தும் விருப்பமும், ஊக்கமும், நன்முயற்சியும் ஏனைச் சகோதரிகளாற் பெரிதும் பாராட்டப்படும் என்பதில் ஐயமின்று. பலசகோதரிகள் சிறந்த கல்விஞானம் பெற்றுப்பல அரிய புத்தகங்கள் வசனநடையில் எழுதுதற்கு இவ்வம்மையார் ஒரு சிறந்த வழிகாட்டியாக இருத்தல் பெரிதும் விரும்பத்தக்கது. தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இப்புத்தகத்தை வாங்கி வாசித்தல் அத்தியாவசியமாகும்.

பிரம்பூர் கலவல கண்ணன் செட்டியார், உயர்கலாசாலைத் தமிழ்ப் புலவர், திருவாளர், மங்கலம் குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதுகிறார்.—

27—5—24.

'இந்து பக்த சிரோமணிகள் சரித்திரம்' என்னும் பெயரமைந்த புத்தகத்தைக் கண்ணுற்றேன். இது பக்தியென்னுங் கடலில் திளைத்து முத்தி யென்னும் கரையைச் சேர்ந்த பக்தர்தம் பெருமையைத் தெள்ளிய நடையால் உள்ளங்களிக்க ஊட்டுகிறது. இதனால் இது தற்காலத்துக்கல்விமுறையில் ஆழ்ந்து முன்னோர்வழியை ஒருசிறிதும் உணராது மயக்குண்டு கிடக்கும் மாணவர் இருபாலர்க்கும் பெரிதும் பயன் படுமென்பது எனது கொள்கை.

———

# முன்னுரை.

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

எனத் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் திருவாய் மலர்ந்தருளியதனால் மக்களுக்குக் கல்வி இன்றியமையாததென்பது இனிதுணரப்படும். உயிர்க்கின்பம் பயக்கத்தகுந்த இத்தகைய கல்வியைக் கற்றற்குக் கருவியாகவுள்ள நூற்றொகை இருவகைப்படும். அவைதாம் உலகநூல், ஞானநூல் என்பன. அவற்றுள் உலகநூல் இம்மையிலும், ஞானநூல் அம்மையிலும் நன்மை பயப்பனவாம். ஞானம் மக்களுக்கு இறைவனையடையும் வழியைக்காட்டும். ஆதலின் மக்களுக்கு அதனினுஞ் சிறந்த பொருள் பிறிதொன்றில்லை. பெரியோர—இடைவிடாது இறைவனிடத்திலேயே அன்புசெலுத்திப் பேரின்ப மெய்திய பெரியோர்—பிறத்தற்குரிய பெருநலம் வாய்ந்தது நம்மிந்தியநாடாகும். அப்பெரியோர்களது சரித்திரத்தை யறிந்து அதன்படி யொழுகுதலே மக்களது கடமையாம். இதைக்கருதியே யான் இச்சிறு நூலினை எழுதிமுடித்தேன்.

இந்நூலினுட் காணப்படும் சரித்திரங்கள், மகிபதி என்னும் பெயரிய இந்து முனிவர் இயற்றிய 'பக்த விஜயம்', 'பக்தலீலாமிர்தம்' என்னும் நூல்களினின்றும் எடுத்தெழுதப்பட்டன. மகிபதி என்பார் இற்றைக்குச் சற்றேறக்குறைய இருநூற்றைம்பது ஆண்டுகட்கு முன் பம்பாய் இராஜதானியில், ஆமதாபாத்து ஜில்லாவிலுள்ள ஒருகிராமத்தில் வசித்தவர். இவர் இயற்றிய இக்காவியங்கள் பலமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. நான் இவற்றை வாசித்து

இவற்றில் காணப்படும் சரிதைகளைச் "சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்" என்னும் அழகு கெடாதபடியும் முதனூலின் இயற்கையமைப்பு மாறுதபடியும் செந்தமிழ் மொழியில் எளிய நடையில் எழுதியுள்ளேன். மேற்கூறிய சரிதைகளுடன் பெரியபுராணம், ஆழ்வார்கள் சரித்திரம் ஆகிய பிறநூல்களினின்றும் சில சரித்திரங்களை எடுத்துச் சுருக்கி யெழுதிச் சேர்த்துள்ளேன்.

இச்சிறுநூல் பெரியோரால் எழுதப்பட்ட மூல காவியங்களை விளக்குவதற்கு ஒரு சிறுகருவியாகும் என்பது எனது கொள்கை. இதன்கண் காணப்படும் சரிதங்கள் பலவும் சிறுவர்கட்கும், சிறுமிகட்கும் நற்போதனை செய்வனவாயும், ஞானத்தை அளிப்பனவாயும் இருத்தலால் அவர்கள் அவற்றைக் களிப்புடன் வாசிப்பதுமன்றிப் பாஷ ஞானத்தையும் இலகுவில் அடைவார்களென்பது துணிவு.

"குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்தார் தங்கள் கடன்."

சென்னை,
20-5-'24.

ஆ. வே.

# பொருளடக்கம்.

பகுதி—1. பக்கம்.


| | | |
|---|---|---|
| 1 | நாஹரி | 1 |
| 2 | ஜோகா பரமானந்தர் | 4 |
| 3 | புண்டரீகன் | 7 |
| 4 | கபீர்தாசர் | 12 |
| 5 | சக்குபாய் | 17 |
| 6 | கபீர்தாசரும் கமால்தாசரும் | 21 |
| 7 | சோகா மேளர் | 25 |
| 8 | கபீர்தாசரும் இராமானந்தரும் | 27 |
| 9 | பலகுபுகார் | 33 |
| 10 | குவாராபாய் | 35 |
| 11 | கேசவஸ்வாமி | 38 |
| 12 | திரிலோகர் | 41 |
| 13 | கோமாயி | 44 |
| 14 | லதீப்ஷா | 47 |
| 15 | நரவாஹனர் | 49 |
| 16 | ஹரிபானர் | 51 |
| 17 | சாங்தோபாபா | 54 |
| 18 | புரந்தரதாசர் | 60 |
| 19 | நிளோபா | 64 |
| 20 | இராயசிங்கு | 67 |
| 21 | பஹிரம்பட்டரும் நாகநாதரும் | 70 |
| 22 | இராமராஜர் | 75 |
| 23 | ஜனஜசாவந்தர் | 76 |
| 24 | ஓகராசு | 79 |
| 25 | சாத்வீகராஜன் | 81 |
| 26 | பிரம்மசாரி | 84 |
| 27 | சேனாவிதர் | 87 |

| | | பக்கம். |
|---|---|---|
| 28 | ஸ்ரீதரர் | .... 92 |
| 29 | ஜம்புதாசர் சரித்திரம் | .... 93 |
| 30 | சாந்த பிரம்மணி | .... 95 |
| 31(a) | பிம்பராஜ–ு | 101(a) |
| 32(a) | மீராபாய் | 103(a) |
| 33(a) | பீபாஜி அரசனும் புலியும் | 108(a) |
| 34(a) | காஜிமகம்மது | 112(a) |
| 35(a) | ராகாகுயவர் | 114(a) |


பகுதி —2.


| | | |
|---|---|---|
| 31 | குணவதிபாய் | .... 101 |
| 32 | நாமதேவர் | .... 103 |
| 33 | போதலர் | .... 108 |
| 34 | ஜசுவந்தர் | .... 110 |
| 35 | நாமதேவரும் ஞானதேவரும் | .... 111 |
| 36 | ஜயபாலன் | .... 117 |
| 37 | நாமதேவரும் பிராமணர்களும் | .... 120 |
| 38 | கமலாகரர் | .... 125 |
| 39 | நாமதேவரும் பொற்கல்லும் | .... 128 |
| 40 | சஜ்ஜனக சாருகர் | .... 130 |
| 41 | கோராகுயவர் | .... 134 |
| 42 | மஹாஜனர் | .... 141 |
| 43 | நாமதேவரும் விசோபாகேசரும் | .... 144 |
| 44 | முற்கலபட்டர் | .... 151 |
| 45 | பரிசவேதி பகவத் | .... 154 |
| 46 | மண்டலீகன் | .... 159 |
| 47 | பானுதாசர் | .... 161 |
| 48 | லாடுபாவா | .... 166 |
| 49 | கானோபாத்திரை | .... 168 |
| 50 | இராமாபாயி | .... 173 |
| 51 | உரோஹிதாசர் | .... 175 |

## சிவபக்தர்கள்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1 | அப்பூதியடிகளுயனர் | 1 |
| 2 | குங்கிலியக்கலய நாயனர் | 3 |
| 3 | அமர்நீதி நாயனர் | 5 |
| 4 | சிறுதொண்ட நாயனர் | 7 |
| 5 | மூர்த்தி நாயனர் | 11 |
| 6 | காரைக்கா லம்மையார் | 13 |
| 7 | கண்ணப்ப நாயனர் | 16 |
| 8 | திருநாவுக்கரசு நாயனர் | 22 |
| 9 | சுந்தரமூர்த்தி நாயனர் | 27 |
| 10 | திருநீலகண்ட நாயனர் | 31 |
| 11 | திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் | 34 |
| 12 | எறிபத்த நாயனர் | 38 |


---

## வைஷ்ணவ ஆழ்வார்கள்.


| | | |
|---|---|---|
| 1 | தொண்டரடிப்பொடி யாழ்வார் | 41 |
| 2 | குலசேகராழ்வார் | 44 |
| 3 | திருப்பாணுழ்வார் | 47 |
| 4 | திருமங்கையாழ்வார் | 49 |
| 5 | ஆண்டாள் | 53 |
| 6 | பெரியாழ்வார் | 55 |
| 7 | திருமழிசையாழ்வார் | 57 |
| 8 | நம்மாழ்வார் | 60 |


---

வணங்கி "ஹே! சீதாரமணு! ஆபத்திலுள்ளோரைக் காப்பாற்றும் தீனதயாளுவே! இத்தருணம் எங்களைக் காப்பற்ற வேண்டும்," எனப் பலவாறு துதித்துக்கண்களில் நீர் ததும்ப நின்றனர். ஸ்ரீராமர் அவர் பக்திக்கிணங்கி, "தபதியில் வரும் வெள்ளத்தை நிறுத்தி ஆஞ்சநேயர் உங்களைக் காப்பாற்றுவார். மாருதியின் விக்கிரகத்தை வெள்ளத்திற் கெதிராகக் கரையோரத்தில் வைப்பாயாக," என்று கூறினர். ஜகவந்தர் அவ்வாறே நதி தீரத்தில் மாருதி மூர்த்தியை ஸ்தாபனம் செய்தார். அப்போது ஆஞ்சநேயர் வீராவேசத்துடன் கிளம்பிப் பிரவாகத்தை வாயினற் பருகினர். உடனே வெள்ளம் குறைந்து, ஜனங்களுடைய பயமும் ஒழிந்தது. கிராமத்தார்கள், பக்தருடைய திருவடிகளில் விழுந்து, அவரது மகிமையைக்கண்டு, பரமானந்த மடைந்திருந்தனர்.

சிலநாட்களுக்குப் பின்னர், அவ்வூரிலுள்ள சில துர்ஜனர்கள், "செம்பினுற் செய்யப்பட்ட விக்கிரகம் ஜலத்தைப் பருகுமா? ஆற்றில் வெள்ளம் அதிகரிப்பதும், குறைவதும் சகஜம். விக்கிரகம் ஜலத்தைக் குடித்து விட்ட தென்பது பொய். இதுவரையில் விக்கிரகம் அவ்வாறு செய்ததாகக் காணப்படவில்லை," என்று கூறி இருந்தனர். ஸ்ரீராமர், அப்போது ஆஞ்சநேய விக்கிரகத்தின் நாபியிலிருந்து, ஜலம் பெருகி ஓடும்படி செய்தார். பல நாட்கள் வரையில் ஜலம் ஓடிக்கொண்டிருப்பதைக் கண்ட அந்தத் துர்ஜனர்கள் ஜகவந்தருடைய பாதங்களில் வீழ்ந்து, சிறந்த பக்தரானுர்கள். இன்றும் அவ்வூரில் ஆஞ்சநேயருடைய விக்கிரகம் பிரசித்தி பெற்றிருக்கிறது.

———

## 35. நாமதேவரும் ஞானதேவரும்.

நாமதேவருடைய கீர்த்தி உலகமெங்கும் பரவ, அது ஞானதேவருடைய செவிக்கு மெட்டியது. அவர் ஆலந்தியிலிருந்து, நாமதேவரைப் பார்க்கும் பொருட்டுப் பண்டரிபுரத்திற்குப் பிரயாணப் பட்டு வந்தார். ஞானதேவர் தன்னைப் பார்க்க வந்திருக்கின்றாரென்று அறிந்ததும், நாமதேவர் அவரை எதிர் நோக்கிச் சென்று, பக்த சிரோன்மணியாகிய அவருடைய கால்களில் வீழ்ந்து நமஸ்கரித்தார். ஞானதேவர், நாமதேவரை எழுப்பி, மார்போடணைத்து, ஆலிங்கனம் செய்து, ஹஸ்திநபுரத்திற்குத் தம்முடன் யாத்திரை வரும்படி கேட்டார். நாமதேவர் பாண்டுரங்கனிடம் சென்று விடைபெற்றனர். பிறகு அதிக கவலையுடன் அவர் பண்டரிபுரத்தை விட்டு நீங்கி, ஞானதேவருடன் வடதிசையை நோக்கிச் சென்றார்.

அவர்கள் ஹஸ்திநபுரத்திற் கருகாமையில் வந்த வுடனே நாமதேவர் கிருஷ்ணனைப் புகழ்ந்து, கீர்த்தனைகள் பாட ஆரம்பித்தார். அவர் பாடிக்கொண்டே போகையில், அநேக ஜனங்கள், அவருடன் சேர்ந்துபாட ஆரம்பிக்க, பாட்டினுடைய சப்தம் அதிகரித்து, அவ்வூர் அரசன் அரண்மனைக் கெட்டியது. அந்த அரசன் வேறொரு சமயத்தைச் சேர்ந்தவன். அவன் அப்பாட்டின் ஓசையைக் கேட்டுக் கோபங்கொண்டு நாமதேவரைப் பிடித்து வரும்படி ஆட்களை அனுப்பினன். அவர்கள் அவரைப் பிடித்து, அரச சமுகத்தில் கொண்டு போய் நிறுத்தினதும், அவ்வரசன் தன் வாளை உருவி அருகில் நின்ற ஒரு பசுவினுடைய தலையை ஒரே வெட்டில் துண்டித்து நாமதேவரை நோக்கி, "நீர் இந்தப்

பசுவைப் பிழைக்கச் செய்வீராகில் நான் நீர் தொழும் கண்ணனை நம்புவேன். நீர் அவ்விதம் செய்யாவிடில் உம் தெய்வம் உண்மையானதல்ல வென்று எண்ணி இப்பசுவைக் கொன்றது போல் என் கையாலேயே உம்மையும் கொன்றுவிடுவேன்," என்முன். நாமதேவர், "அரசே! அப்படியே செய்கிறேன். ஆனல் நான்கு நாள் அவகாசம் வேண்டும்," என்ருர். அக் கொடுங்கோல் மன்னன், அதற்குச் சம்மதித்து, "நான் உமக்கு நான்கு நாள் தவணை தருகிறேன்; நீர் அந்தக் காலத்திற்குள் பசுவை எழுப்பாவிடில் நான் கூறியபடி செய்துவிடுவேன்," என்று கூறித் தன் அரண்மனைக்குப் போய்விட்டான்.

தூதர்கள், நாமதேவர் அப்பசுவிற்கு உயிர் கொடுத்து அதை எழுப்புமாறு அவரைப் பசுவினருகில் உட்கார வைத்துக் காவலிருந்தார்கள். நாமதேவரைப் பின் தொடர்ந்து வந்த ஜனங்கள், வெட்டுப் பூச்சிகள் பயிரை அழிப்பதைக் கண்டு விசனமுறும் குடியானவன் போலவும், பாடும்போது தொண்டை கட்டிக் கொண்டு கஷ்டப்படும் பாடகன் போலவும், புதையல் தேடிச்சென்றவன் பூதத்தைக் கண்டு வருத்தமடைவது போலவும் துயரக்கடலில் ஆழ்ந்து, அவரவர்கள் வீட்டிற்குச் சென்ருர்கள்.

நாமதேவர், இறந்த பசுவின் அருகில் உட்கார்ந்து, அதன் தலையைத் தூக்கித் தம் மடிமேல் வைத்து, இரவும் பகலும் கிருஷ்ணனைத் தியானித்துக் கொண்டே இருந்தார். மூன்று நாள் வரையில் கண்ணபிரான் கவனிக்கவே யில்லை. ஹஸ்தினபுரத்து ஜனங்கள், நாமதேவர் இரவு முழுதும் கிருஷ்ணனுடைய உதவியைக்கோரிப் பாடும் பாடல்களைக் கேட்க அங்கு வந்திருந்தனர். பொழுதுவிடிந்ததும் அவர்கள், குளிர்காலம் நெருங்கியதும் மேகங்கள் மறைந்து போவது போலவும், சூரியன் உதயமானவுடன் விளக்குப்

பூச்சிகள் ஒளித்துக்கொள்வது போலவும், சண்டையில் அரசன் இறந்ததும் சேனைகள் கலைந்தோடுவது போலவும் தத்தம் இருட்பிடத்திற்குச் சென்றார்கள். நாலாம் நாள் நெருங்கியதும் நாமதேவர் மிகவும் துயருற்றார். அவர், "கண்ணபிரானே! கடைக்கண் வைக்கலாகாதா! இன்று நான் இறக்கப்போகிறேனே!" என்று கதறினார். அவர் இவ்வாறு கூறியதும் கண்ணபிரான், அவர் முன் வந்து நின்றார். அதே தருணத்தில் பசுவும் உயிர் பெற்று எழுந்து நின்றது. நாமதேவர், கிருஷ்ணபிரானைப் பார்த்து, "ஸ்வாமி! இது வரையில் தாமதஞ் செய்ததேனோ?" என்று கேட்டார். கிருஷ்ணபிரான், "தப்பு என்னுடையதல்ல; உன்னுடையதே. நான்கு நாட்களில் பசுவை உயிர் பிழைக்கச் செய்கிறேனென்று சொன்னாய்; நான்கு நிமிஷத்தில் எழுப்புகிறேன் என்று சொல்லியிருந்தால் நான் உடனே உன் உதவிக்கு வந்திருப்பேன்," என்று கூறி மறைந்தருளினார்.

அவர் போனதும் தூதர்கள், பசு உயிர்பெற்று எழுந்து உலாவுவதைக் கண்டார்கள். அவர்கள், உடனே விரைந்தோடி, அக்கொடிய அரசனிடம் அதைக் கூறினார்கள். அவனும் அவ்விடத்திற்கு விரைந்து வந்து பார்த்தான். அவன், கிருஷ்ணபிரான் நாமதேவருக்காகச் செய்த மாய்கையைக் கண்டு, அப்பக்தருடைய பாதங்களில் வீழ்ந்து, நமஸ்கரித்துத் தான் செய்த அபராதத்தை மன்னிக்கும்படி வேண்டினான். பிறகு நாமதேவரும், ஞானதேவரும் அவர்களிஷ்டப்படி போகலாமென்று உத்தரவு கொடுத்தான்.

ஹஸ்தினபுரத்தைவிட்டு நீங்கியபின், அவர்கள் அநேக ஸ்தலங்களுக்கு யாத்திரை சென்று, புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசித்துச் சென்றனர். அவர்கள், பண்டரிபுரத்திற்குத் திரும்பிப் போய்ப் பிறகு மார்வாடி தேசத்திற்குச் சென்

றனர். வழி அதிக தூரமாயிருந்தமையாலும், வெய்யில் அதிக மாயிருந்தமையாலும் இருவரும் களைப்புற்றுத் தாகத்தால் வருந்தினர். அங்கே அவர்கள் ஒரு கிணற்றைக் கண்டார்கள். அதன் வாய் மிகவும் குறுகியிருந்தது; ஜலம் அதிக ஆழத்தி லிருந்தமையால் அவர்கள் தாகத்தைத் தணித்துக் கொள் வது அசாத்தியமாயிருந்தது. ஞானதேவருக்குத் தேகத் தைச் சுருக்கிக் கொள்ளும் சக்தி உண்டு. அவர், உடனே சிறியவராகிக் குறுகிய அக்கிணற்றுக்குள் புகுந்து, தாகந் தெளியத் தண்ணீர் குடித்துப் போன வழியே திரும்பி வெளியேறினர். ஞானதேவர், நாமதேவருக்கும் கொஞ்சம் ஜலம் கொண்டு வருவதாகச் சொன்னர். நாம தேவர், அதற் குச் சம்மதியாமல், ஸ்ரீகிருஷ்ண பகவான் தம் உதவிக்கு வர வேண்டுமென்று விரும்பினர். அப்போது கண்ணபிரான், ருக்குமணி சமேதராய்ப் பண்டரிபுரத்தில் வீற்றிருந்தார். திடீரென அவர் இடது கையில் நமையெடுத்தது; இடது கண் இரப்பைகள் அடித்துக் கொண்டன. அவர், ருக்குமணி, யிடம், "நாமதேவனுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கிறது. அவனுக்கு என் உதவி வேண்டும்போ லிருக்கிறது," என்று கூறினர். நாமதேவரும் கிருஷ்ணனைத் தியானித்து, "கிருஷ் ணு! உதவி செய்யவாரும், இல்லாவிடில் நான் தாகத்தால் இறப்பேன்," என்று பிரார்த்தித்தார். கிருஷ்ணபிரான், அப் பிரார்த்தனையைக் கேட்டு, உடனே மார்வாடி தேசத்திற்கு மனோவேகமாய் விரைந்து சென்ருர். உடனே கிணற்றில் ஜலம் உயரக்கிளம்பி வழிந்து நின்றது. நாமதேவர், தாகத் தைத் தணித்துத் தமக்காகக் கிருஷ்ணபகவான் செய்த மாய் கையைக் கண்டு சந்தோஷங்கொண்டார்.

ஞானதேவரும் நாமதேவரும் மார்வாடி தேசத்தி லிருந்து அநேக திவ்விய தேசங்களுக்கு யாத்திரை சென்று,

கடைசியில் சிவபிரானுக்கு மிகச் சிறந்ததும், இரண்டாவது கைலாயமென்று சொல்லப்படுவதும் ஆகிய அவுண்டா நாகநாத மென்னும் புண்ணிய க்ஷேத்திரத்திற்கு வந்தார்கள். அங்கே நாமதேவர், முதலில் சிவபிரான்மீது பல கீர்த்தனைகள் பாடிப் பிறகு கண்ணபிரானைக் குறித்துப் பாடினார். அர்ச்சகர்கள், இதைக் கேட்டுக் கோபமுற்று, அவரையும் அவருடனிருந்தவர்களையும் கோயிலுக்குப் பின்புறம் போகும்படி ஆக்ஞாபித்தனர். அவர்கள், நாமதேவரை நோக்கி, "ஐயா! சிவபிரானுக்குக் கீர்த்தனைகளைப் பாடி ஆடுவதில் பிரியமில்லை. நீர் இவ்வாறு ஆரவாரம் செய்து ஆடுவதற்குப் பண்டரிபுரத்திற்குப் போம்," என்று கூறினார்கள். இதைக் கேட்டு நாமதேவர், அவர்களைப் பார்த்து, "நீங்கள் சொல்லுவது சரியல்ல. சிவபிரானுக்கும் கண்ணனுக்கும் ஒருவித வித்தியாசமும் கிடையாது. இவர்கள் இருவரும், சர்க்கரையும் அதன் இனிப்பும் போலவும், ஊற்றும் அதன் ஜலமும் போலவும், விளக்கும் அதன் வெளிச்சமும் போலவும், மேகமும் மழையும் போலவும், நகையும் அதன் பிரகாசமும் போலவும் பிரியமாயிருக்கின்றனர்," என்று சொன்னார்.

இவ்வார்த்தைகளைக் கேட்டு அப்பிராமணர்கள், அதிக கோபங் கொண்டு, அவரையும் அவருடன் இருந்தவர்களையும் வெறுப்புடன் கோயிலுக்குப் பின்புறமாகப் போகும்படி செய்தனர். நாமதேவருடனிருந்தவர்கள், தோற்றுப் போன அரசனை விட்டு ஓடும் சேனைகளைப்போல் ஒவ்வொருவராய் அவரை விட்டுப் பிரிந்து போயினர். நாமதேவர் மாத்திரம், அதிக கவலை கொண்டு, கண்ணனைத் துதி செய்தார். "ஹே! கிருஷ்ணா! கஜேந்திரனைக் காப்பாற்றினவரே! திரௌபதையின் மானம் காத்தவரே! தாங்கள் இக்கொடியார்கள் என்னைக் கேலி செய்யாவண்ணம் எனக்குதவி செய்யலாகாதா?"

என்று பிரார்த்தித்தார். அவர் துதிசெய் திருக்கையில் ஓர் அதிசயமான சம்பவம் நேர்ந்தது. கிழக்கு முகமாக இருந்த சிவாலயம் திரும்பி மேற்கு முகமாயிற்று. கோயிலுக்குப்பின் புறத்தில் நிறுத்தப்பட்ட நாமதேவர், தாம் கோயிலுக்கு முன்பாக நிற்பதைக் கண்டார். அவருடன் நின்றிருந்த சிலர், இம் மாய்கையைக் கண்டு, விட்டுப்போன மற்றவர்களையு மழைத்துக் கண்ணனைப் புகழ்ந்து பாடித் துதி செய்தார். மறு நாட்காலையில் பிராமணர்கள் வீட்டைவிட்டு வந்ததும், அதிக கோபங்கொண்டு, நாமதேவரைத் தங்கள் உத்தரவின்படி ஏன் நடக்கவில்லையென்று கேட்கப் போனார்கள். காலையில் சூரியனைப்பார்த்திருந்த அக்கோயிலை சூரிய னுக்குப் பின் புறமாகத்திரும்பி இருப்பதைக் கண்டார்கள். முதலில் அவர்கள், திசைதெரியாமல் பேசுகிறோமென் றெண்ணினார்கள். ஆனல், சூரியனைக்கண்டதும் கோயில் திரும்பித் தானிருக்கிறதென்று அறிந்து, நாமதேவரை அவ்விந்தை நேர்ந்ததன் காரண மென்ன வென்று கேட்டார்கள். அவர் நடந்ததை நடந்தவாறே கூறினர். அவர்கள், அதைக் கேட்டு நடுநடுங்கி, அவருக்குத் தெண்டனிட்டுத் தாங்கள் செய்த அபசாரத்தை மன்னிக்கும்படி வேண்டி, அவருடன் சேர்ந்து கண்ணனைப் புகழ்ந்து பாடலானர்கள்.

---

## 36. ஜயபாலன்.

சௌராஷ்டிர தேசத்திற் கதிபதியாய் ஜயபாலனென்னும் அரச னொருவனிருந்தான். அவன் குலாசார தர்மங்களுக்குக் குறைவு நேரிடாதபடி செங்கோல் செலுத்தி வந்தான். ஒரு நாள் அவன் புராணத்தை வாசித்துக்கொண் டிருக்கையில் சகல சாதனங்களைச் செய்தாலும் சற்குரு கடாக்ஷ

மின்றிப்பவதானமாகாதென்று அறிந்துகொண்டான். அவன் ஓர் ஆசாரியரை அடைய விரும்பி, தனக்கு ஆசாரியராக வருபவர்களுக்குத் தானதர்மங்கள் விசேஷமாகக் கொடுப்பதாகப் பறையறைவித்தான்.

இதைக் கேட்டு, அநேகர் வெகுமானத்திற்காக ஆசை கொண்டு, அரச சமுகத்திற்கு வந்தனர். அவர்கள், ஞானத்தைச் சொல்லுகிறோமென, அரசன் அவர்களுக்குத் தெண்டனிட்டு, "நான் அநுபவ ஞானமடையும்படி கிருபை செய்ய வேண்டும். வாசா ஞானம் வேண்டியதில்லை," என்றான். அவர்கள் தத்தமக்குத் தோன்றியவாறு, பழமையான சாஸ்திர லக்ஷணங்களும், தெய்வமந்திரங்களும் உசிதமென்று கூறி, சுருதிகளுக் கர்த்தங்களை விவரிக்க, அரசன் அவைகள் செம்மையல்ல வென்று மறுத்தனன். அரசன், அவர்களை ஒவ்வொன்றிலும் அனுபவத்தைக் காட்டுமென்று வினவ, அவர்கள், சக்தியற்றவர்களாய்த் திகைத்தனர். அரசன், அவர்கள் யாவரும் அனுபவமில்லாக் கசடர்களென்றெண்ணி, அவர்கள் யாவரையும் சிறையிலிட்டான். பிறகு, அவர்களைக் கொண்டு ஓர் ஏரி கட்ட ஆரம்பஞ் செய்தான்; பண்டிதர்களான அவர்கள், மண்வெட்டிகளையும் கூடைகளையு மேந்தி, மண் வெட்டி, ஏரிகட்ட ஆரம்பித்தனர். அவர்கள், தம் வருத்தத்தைப் பொறுத்து, அரசன் கட்டளைக்குப் பயந்திருந்தார்கள்.

அரசன், தன் காரியங்களில் கவனம் செலுத்தாது, கண்ணனைத் துதித்துத் தனக்குச் சதாசாரியா ரொருவரை ஏற்பாடு செய்யும்படி வேண்டி நிஷ்டையிலிருந்தான். சிறைச்சாலையிலுள்ள பண்டிதர்கள், "ஸ்ரீஹரியே! எங்களைக் காப்பாற்றலாகாதா! பண ஆசை கொண்டு நாங்கள் இவ்விடம் வந்தோம். அரசன் எங்களைச்சிறையிலிட்டு மண்தோண்டும்படி

செய்தான். எங்கள் வீடுகள் எக்கதியாயினவோ! மனைவி மக்கள் எவ்விதம் கலங்குகிறார்களோ! உம்மையே நாங்கள் நம்பி இருக்கிறோம்! எங்களை ரட்சிக்கலாகாதா?" என்று துதி செய்திருந்தனர்.

பகவான், இருதரத்தாருடைய பிரார்த்தனைக் கிணங்கி, ஒரு பிராமண பிரம்மசாரியாக உருவெடுத்து, முகுந்தராஜரென்னும் நாமங் கொண்டு, பண்டிதர்கள் வேலை செய்திருந்த ஏரியினருகில் சென்றார். அவர் பண்டிதர்களை நோக்கி, "கல்வி யறிவுடையநீங்கள் மண்ணெடுக்கக் காரண மென்ன?" என்று வினவ, அவர்கள், "ஐயா! நாங்கள் உபதேசம் செய்ய அரசனிடம் வந்தோம். எங்கள் உபதேசங்கள் வியர்த்த மென்று எங்களைச் சிறையிலிட்டு மண்ணெடுக்கச் செய்தான். உம்மை அவன் கண்டானாயின் உமக்கும் எங்கள் கதி நேரிடும்," என்றார்கள். அதைக் கேட்ட முகுந்தர், "நான் உங்கள் யாவரையும் விடுதலை செய்கிறேன். நீங்கள் என்னோடு வாருங்கள்," என்றழைக்க, அவர்கள் யாவரும் பிரயாணப் பட்டனர். இதைக் கண்ட சேவகர்கள், அவர்களைப் போகவொட்டாமல் தடுக்க, முகுந்தராஜர் சேவகர்களை நோக்கி, "உங்கள் வேலைக்கு ஒரு கெடுதல் நேரிடாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்," என்றுரைத்தார். உடனே மண் வெட்டி கூடை முதலானவை, தாமே வேலை செய்ய ஆரம்பித்தன. இதைக் கண்ட சேவகர் வியந்து, அரசனிடத்திற்கு ஓடி, அவ்வரிய விஷயத்தைத் தெரிவித்தனர். அரசன் வியப்புற்று, அங்கு ஓடிவந்து, முகுந்தருடைய பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து, அவரைத் தன் அரண்மனைக் கழைத்துச் சென்றான். அவர், பண்டிதர்களை விடுதலை செய்யும்படி கூற, அரசன், அவ்வாறே அவர்களைச் சிறையிலிருந்து விடுவித்துத் திரவியங்கொடுத் தனுப்பினான்.

அரசன், முகுந்தரை நோக்கி, "ஸ்வாமி! நான் குதிரை

யேறு முன்னர்க் குருபோதனை அநுபவமாகும்படி செய்ய வேண்டும்,'' என்று கேட்டார். முகுந்தர் ஒரு குதிரையை வரவழைத்து, அரசனை அதன் மீதேறும்படி சொன்னார். அவனேறும்போது முகுந்தர், குதிரையை 52 அடி சவுக்காலடிக்க, அரசன் தன் தேகத்தை மறந்து விட்டான். குதிரையும் கீழே விழுந்திறந்தது. அக்குதிரை, முன் ஜன்மத்தில் கந்தர்வ ராஜனாகவிருந்து, சாபத்தால் குதிரையாகப் பிறந்து, முகுந்தராஜரால் சாபவிமோசனம் பெற்றது. பின்பு முகுந்தராஜர், அரசனுக்குத் தத்துவத்தைச் சொன்னார். அரசன், அந்தக் குதிரையும் ஹரிமயமென்பதை அரை க்ஷணத்தில் அநுபவத்தில் கண்டான்.

---

## 37. நாமதேவரும் பிராமணர்களும்.

நாமதேவர், ஞானதேவருடன் யாத்திரை செய்து திரும்பினதும் பாண்டுரங்கனுடைய சன்னதிக்குச் செல்ல, கண்ண பிரான் நாமதேவரைக் கண்டு, பிராமணர்களுக்குத் ததியாராதனை செய்யும்படி சொன்னார். அவர், "நீ பிராமணருக்குத் ததியாராதனை செய்யாவிடில் தீர்த்த யாத்திரை செய்ததன் பலனில்லாமல் போகும். புராணங்களைக் கேட்டு, அவற்றின் அர்த்தங்களை மனனம் செய்யாதவன் போலும், மருந்து சாப்பிட்டுப் பத்தியமில்லாதவன் போலுமாவாய்,'' என்று கூறினார். நாமதேவரிடம் அவ்வாறு ததியாராதனை செய்யத் திரவிய மில்லாததால் கிருஷ்ண மூர்த்தி ஒரு பிராமண வியாபாரி போல மாறுவேடம் பூண்டார். முதலில் அவர் புண்ணிய க்ஷேத்திரமாகிய பண்டரிபுரத்தை வலம் வந்தார். பிறகு ஆற்றங்கரையிலுள்ள சில பிராமணர்களிடஞ் சென்று, அவர்களை வணங்கினார். அவர்கள் மிகுந்த ஆச்சரியத்

துடன், அவரை உற்று நோக்கினார்கள். அவர் மானிட உருவ மெடுத்த போதிலும், தங்கத்தை எப்படிப் பித்தளை யென்று சொல்ல முடியாதோ, கங்கை நதி எப்படி மற்ற நதிகளாக மாறாதோ, எப்படிச் சந்திரன் மற்றக்கிரகங்களினின்றும் வித்தியாசப் படுகிறதோ அதைப்போல் அவருடைய தெய்வஸ்வரூபம் முழுதும் மறைந்துபோகவில்லை. பிராமணர்கள் அவரை வணங்கி, அவருடைய நாமதேயமென்ன வென்று கேட்டு, "ஸ்வாமி! உங்கள் முகத்தைப் பார்த்த போதே பாவங்கள் எங்களை விட்டொழிந்ததாக உணர்கிறோம்," என்றார்கள். கண்ணபிரான் அதற்கு, "என்பெயர் ஆநந்தன் என்பது. நான் நாமதேவருடைய ஆத்ம நண்பன். நான் கோயிலில் குடியிருக்கிறேன். என் வீட்டில் நடக்கும் அதிதியாராதனைக்குத் தாங்கள் எல்லோரும் வந்திருந்து, என்னைக் கௌரவப் படுத்தவேண்டும்," என்று சொன்னார். அந்தப் பிராமணர்கள், இதைக் கேட்டுச் சந்தோஷமடைந்து, அப்படியே வருகிறோமென்று கூறி, ஸ்நாநம் செய்யப் புறப்பட்டுச் சென்றார்கள்.

கிருஷ்ணபிரான், கோயிலுக்குத் திரும்பி வந்து, ருக்குமணி தேவியைப் பார்த்து, "பெண்ணே! அவர்களிடம் நான் என் பெயர் ஆநந்தனென்று சொன்னேன். அவர்கள் என் முகக் காந்தியைக் கண்டார்கள். கர்வமும் அகம்பாவமும் குடிகொண் டிருந்தமையால், மாறுவேடம் பூண்ட என்னை இன்னானென்று அவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை," என்றார். இதைக் கேட்டு ருக்குமணி, "அப்படிப்பட்ட மனிதர்கள் எவ்விதம் தங்கள் சுயரூபத்தைக் காணமுடியும்? காமாலையுள்ள மனிதனுக்குச் சந்திரனும் மஞ்சளாகவே தோற்றுகிறது. சுரத்தில் வருந்துகிறவனுக்கு எவ்வித உணவும் ருசியற்றே இருக்கிறது," என்று கூறினாள். கிருஷ்ணபகவான் வரவழைத்த விருந்தினருக்கு விருந்து தயார் செய்ய

வைகுண்டத்தினின்றும் ருக்குமணியின் வேலைக்காரர்கள் யாவரும் வந்து சேர்ந்தனர். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் பிராமணர்கள் கோயிலின் கோபுரத்தருகில் வந்தார்கள். கிருஷ்ணபிரான், அவர்களை உபசரித்து வரவேற்று, உள்ளே அழைத்து வந்து, ஆசனத்திலமர்த்தினர். கண்ணபிரானே அவர்களுக்கெல்லாம் அன்னமளித்து, ஒவ்வொருவரிடமும் சென்று திருப்தியாகப் போஜனம் செய்யும்படி கேட்டுக் கொண்டார். அவ்விருந்து, ஒருவிதக் குறைவு மேற்படாமல் நடந்தேறியது. ருக்குமணியே அவ்விருந்தைத் தயாரித்தமையால் அதில் குறைகள் எவ்வாறிருக்க முடியும்? பிராமணர்கள் திருப்தியாகப் போஜன மருந்தியதும் கண்ணனைப் பார்த்து, "எங்களுக்கு நீர் வட்டித்தமையால்களைப்புற்றிருக்கிறீர். நீரும் போய்ச் சாப்பிட வேண்டும்," என்று கூறி, மந்திரங்களை ஜபித்து, "நீர் எப்போதும் தனவந்தராயும் சந்தோஷசித்தராயும் இருக்கக் கடவீர். இன்று எங்கள்மேல் அன்பு வைத்ததுபோல் என்றும் அன்புடையவராக இருக்க வேண்டும்," என்று அவரை வாழ்த்தினர்கள்.

கிருஷ்ணபிரான், நாமதேவருடன் உட்கார்ந்தனர். ருக்குமணி அவர்களுக்குப் போஜனமளித்தாள். அவர்கள் இருவரும் சாப்பிடும்போது கிருஷ்ண பகவான் நாமதேவருடைய இலையிலிருந்து சிறிது சாத மெடுத்து உட்கொண்டார். இதைக் கண்ணுற்ற பிராமணர்கள் யாவரும் ஆச்சரிய முற்று எழுந்து நின்று, நாங்கள் இனி என்ன செய்யப்போகிறோமென்று கூவி, "இவன் எந்த ஜாதியைச் சேர்ந்தவனே, அறியோம். இவன் பிராமண னென்று சொல்லிக் கொள்ளுகிறான். ஆனால் தையற்காரனுடைய எச்சிலைச் சாப்பிடுகிறானே! இவன் தோற்றமும் நமக்குப் புதிதாகவே இருக்கிறது. நமக்குத் தெரிந்த நான்கு ஜாதிகளில் எந்த ஜாதியைச் சேர்ந்தவனாக-

வும் தெரியவில்லையே! இவன் மனைவியும் நமக்குப் போஜன மிட்டாள். இவன் தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்தவனுயின் நாமெல்லோரும் கெட்டோம். நாம் இதுவரையில் செய்த புண்ணியத்தை இழந்தோம்," என்றார்கள். இவர்களில் ஒரு வன், "நாம் இதைப்பற்றி ஒருவரிடமும் ஒன்றும் சொல்லக் கூடாது. பஞ்ச காலத்தில் தாழ்ந்த ஜாதியான் வீட்டில் அன் னம் வாங்கி உண்டாலும், பிராமணர்களுக்காகத் தயாரித்த உணவை நாய் உண்ணக் கண்டாலும், அதைப் பிறரிடம் சொல்லாமலிருக்கிறதுதான் மிகவும் சிறந்தது," என்றான்.

அவர்கள், இவ்வாறு மனம் வருந்திப் பேசிக்கொண் டிருக்கையில் கிருஷ்ணபிரான் அவர்களைப்பார்த்து, "நீங்கள் ஏன் வருத்தப் படுகிறீர்கள்? நான் கொடுக்கும் வெகுமானத் தைப் பெற்றுக் கொள்ளுங்கள்," என்று கூறி, ஒவ்வொரு வருக்கும் விலையுயர்ந்த ஒரு மாணிக்கத்தைத் துளசி தளத் துடன் சேர்த்துக் கொடுத்தார். பிராமணர்கள், வெகுமானத் தைப் பெற்றுச் சந்தோஷங் கொண்டு, தங்கள் மனக்குறை களைக் கிருஷ்ணனிடம் எடுத்துரைத்தார்கள். அவர்கள் கிருஷ்ணனை நோக்கி, "ஐயா, நாங்கள் உம்மைப் பிராமண ரென்றெண்ணி இருந்தோம். நீர் தையற்காரனுடைய எச்சி லைச் சாப்பிட்டீரே! இஃது என்ன செய்கை?" என்றார்கள். கிருஷ்ணபகவான், தாம் அதற்காக என்ன செய்யவேண்டு மென்று கேட்டார். பிராமணர்கள், "உம்மை அதற்காகப் பிராயச்சித்தம் செய்யவேண்டும்," என்றார்கள். கிருஷ்ணனும் அதற்குச் சம்மதித்தார். அவர் முதலில் பண்டரிபுரத்தை வலம் வந்தார். பிறகு பீமா நதியின் கரைக்குச் சென் றார்; அங்கே நின்றிருந்த பிராமணர்களைச் சுற்றி வந்து நமஸ் காரம் செய்தார். அவர்கள் மந்திரங்களோதிக் கொண்டிருக்க அவர் புண்ணிய நதியில் ஸ்நானம் செய்தார். பிறகு அவர்

தேக முழுமையும் விபூதியைப் பூசி, நெற்றியில் புதிய திலக மொன்றிட்டுக் கொண்டார். பிராயச்சித்த விதிகள் பூர்த்தியானவுடன் அவர் பிராமணர்களைப் பார்த்து, அடுத்த நாளும் விருந்திற்கு வரும்படி அழைத்துக் கோயிலுக்குத் திரும்பி வந்து, ருக்குமணி சத்தியபாமாவிடம் நடந்த விருத்தாந்தங்களைக் கூறினர்.

அடுத்த நாள் பிராமணர்கள், இரண்டாம் நாள் விருந்திற்காக அவசர அவசரமாய்க் குறிப்பிட்ட வேளைக்கு முன்பாக வந்து சேர்ந்தார்கள். அவர்கள், கிருஷ்ண பகவானை அங்குக் காணவில்லை. அதனல் அவர்கள் முணு முணுத்து, "நேற்று அவர் நம்மை விருந்துக் கழைத்தது உண்மை. இன்று விருந்திற்காக இங்குவர, அவரைக் காணோமே!" என்று கவலைகொண் டிருந்தார்கள். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் கிருஷ்ணபிரான், அவ்விடம் வந்து, பிராமணர்களின் கால்களில் வீழ்ந்து நமஸ்கரித்தார். பிறகு அவர், பிராமணர்களை அதிவினயத்துடன் அமரச் செய்து, விருந்தளித்தார். அவ்விருந்து முன்னளிடப் பட்டதைக்காட்டிலும் மிகவும் சிறந்ததாகவும், மேன்மையாகவு மிருந்தமையால், பிராமணர்கள் சம்பூர்ணமாகப் போஜனம் செய்தார்கள்.

அவர்கள், போஜன முடித்தெழுந்ததும், ஆகாயத்தினின்று பூமாரி பொழியக் கண்டார்கள். அவர்கள் ஆகாயத்தை அண்ணாந்து பார்க்கையில் தேவேந்திரன் முதலான தேவர்கள் புஷ்ப விமானங்களிலிருந்து, ஆகாய முழுதும் பிரகாசிக்கக் கண்டு மிகுந்த ஆச்சரிய முற்றுக் கண்ணனைப் பார்த்தார்கள். அவரும் தம் சுயரூபத்துடன் அவர்கள் முன் நின்ருர். அவர்கள், அவருடைய நான்கு கரங்களையும், சிரசில் தரித்திருந்த இரத்தின மகுடத்தையும், தாமரைமலர் போன்ற கண்களையும், கைகளில் சங்கு சக்கரங்கள் ஜொலிப்பதையும்,

பக்கத்தில் கருடன் நிற்பதையும் கண்டார்கள். கண்டு, அவர்கள் பிரம்மை கொண்டு நிற்கையில் அவருடைய காந்தியால் ஆகாயமும் இப்பூமியும் தெய்வ ஸ்வரூபத்தை யடைந்ததவை போல் காணப் பட்டன. பிராமணர்கள் எல்லோரும் அக்கடவுளுக்கு முன்பாகச் சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டுத் தங்களை மன்னிக்குமாறு வேண்டிக் கொண்டனர். கிருஷ்ண பகவான், அவர்கள் எல்லோரையு மெழுப்பி, நாமதேவரை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படி ஆக்ஞாபித்து வைகுண்டத்திற்கு எழுந்தருளினர்.

---

## 38. கமலாகரர் சரித்திரம்.

பண்டரிபுரத்தில் கமலாகரரென்னும் தாசரொருவர், தம் மனைவியான சுமதி என்பவளோடு கூடி, இல்லறத்தை இனிது நடத்திவந்தார். அவர்களுக்குப் பதுமாகரர் என்னும் ஒரு புத்திரன் இருந்தான். கமலாகரர், தினந்தோறுங் காலையிலெழுந்திருந்து, நீராடி நித்திய கர்மங்களைச் செய்து முடித்து, தம் புத்திரனையழைத்துக் கொண்டு, வீடுதோறும் பிச்சையெடுத்து, அதனால் கிடைக்கும் அரிசியைச் சமைத்துச் சாதுக்களுக்களித்துச் சாப்பிடுவது வழக்கம். ஒரு நாள் அவர், தம் புத்திரனோடு பிச்சைக்குப் போகும்போது, நாமதேவர், ஞானதேவர், சாங்கதேவர், கபீர்தாசர் முதலானவர்கள், ஸ்ரீ ஹரி பஜனை செய்துகொண் டிருப்பதைக் கண்டார். உடனே அவர், அந்தச சாதுக்களுடைய திருவடிகளில் விழுந்து, "ஸ்வாமிகளே! நீங்கள் அடியேனுடைய வீட்டிற்கெழுந்தருளவேண்டும். அடியேன் அளிக்கும் உணவை அங்கீகாரம் செய்து என்னை இரட்சிக்க வேண்டும்," என்று வேண்டினர்.

அவர்கள், அதைக்கேட்டு, "ஐயா! நீர் சிறந்தபக்தராயிருப்பினும், மிகவும் எளியவர் போலக் காணப்படுகிறீர். நாங்களும் பலராயிருக்கிறோம். இத்தனை பேரையும் நீர் திருப்திசெய்விப்பது உமக்கு கஷ்டமாயிருக்கும். நீர் கூறிய உபசாரவார்த்தைகளே எங்களை ஆநந்தமடையும்படி செய்தன. அதுவே போதுமானது," என்றார்கள். கமலாகரர், "கண்ணபிரானும் ருக்குமணி தேவியும் எனக்குத் தாய் தந்தைகளாயிருக்கும் வரையில் எனக்கொருகஷ்டமும் உண்டாகாது. அடியேனுடைய வீட்டைத் தங்களுடையதாகப் பாவித்து, எழுந்தருள வேண்டும்," என்று வேண்டினர். அவர்கள், கமலாகரர் வேண்டுகோளை மறுக்க முடியாமல், நீராடி வருவதாகக் கூறி, கமலாகரரை அனுப்பினார்கள். கமலாகரர், சந்தோஷத்துடன் வீட்டிற்குச் சென்று, தம் மனையாளையழைத்து, "பெண்ணே! இன்று அநேக பக்தர்கள் நம் வீட்டிற்கு வருவார்கள். அவர்களுக்குச் சிறந்த விருந்தளிக்க வேண்டும்," என்று கூறி, சாதுக்களையழைத்துவரச் சென்றார். கமலாகரர், வீடு திரும்புமுன்னமே சுமதிதேவி அயல் வீட்டில் வேண்டிய பொருள்களைக் கடனாக வாங்கிவந்து, சமையல் செய்து முடித்துப் பாயசம் செய்துகொண்டிருந்தாள். அப்போது விறகு எரியாமலிருக்க, அவள் தனது புதல்வனையழைத்து, எருமுட்டைகளிற் சிலவற்றை எடுத்து வரும்படி அனுப்பினாள். அவன் போய் எடுக்கையில், எருமுட்டையில் பதுங்கி இருந்த ஒரு சர்ப்பமானது அவனைத் தீண்டிற்று. அவன் கூக்குரலிட்டு மனங்கலங்கி நிற்க, சுமதிதேவி அங்கு ஓடிச் சங்கதியறிந்து, ஒன்றுந்தோன்றாதவளாய்த் திகைத்து நின்றாள். அச்சிறுவன் விஷந்தலைக்கேறி, கிறுகிறுத்துக் கீழே விழுந்தான். சுமதிதேவி, ஆற்றொணாத கவலையை யடைந்தாளெனினும், சாது பூஜைக்கு விரோதமுண்டாகாமல் தனது பாலனைத்

தொட்டிலில் வளர்த்திப் பாயச வேலையைக் கவனித்திருந்தாள்.

இப்படியிருக்கையில் கமலாகரர், சாதுக்களையழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்து, அவர்களுக்கு ஆசனம் தந்து, இலை போட்டுக் காய் கறிகளைப்பரிமாறி, அமுது செய்யுமாறு வேண்டினர். நாமதேவர், வழக்கப்படி கண்ணனைப் பிரார்த்திக்க, அவர் அன்று எழுந்தருள வில்லை. நாமதேவர், அதற்குக் காரணமின்னதென்று தோன்றாதவராய்க் கமலாகரரை யழைத்து, "உங்கள் குமாரனை எங்களோடு போஜனம் செய்யும்படி கூப்பிடுங்கள்," என்றார். சுமதிதேவி தன்குமாரன் நித்திரை செய்வதாகக் கூற, அவர்கள், "பாலனைவிட்டுப் போஜனமருந்த மாட்டோம்," என்றார்கள். சுமதிதேவி, அவர்களை நோக்கி, "ஸ்வாமிகளே! குழந்தை நித்திரை செய்கிறான். அவனை எழுப்பினாலும் எழுந்திருக்கவில்லை. நீங்கள் போஜனம் செய்யுங்கள்," என்றாள். உடனே நாவதேவர், கையில் வீணையையேந்தி, ஹரி தோத்திரம் செய்து, "பாண்டுரங்கரே! நீர் எழுந்தருளாவிடில் நாங்கள் உண்ணோம்," என்று பிரார்த்தித்தார். கண்ணபிரான், அவர் பிரார்த்தனையைக்கேட்டு, உடனே பிரசன்னராகி, நாமதேவரைக் கட்டி அணைத்து, "உம் கோரிக்கையென்ன?" என்று கேட்டார். நாமதேவர், "ஸ்வாமி! சுமதிதேவியாருடைய மைந்தன் நித்திரை தெளிந்து எங்களோடு உண்ணும்படி செய்ய வேண்டும்," என்றார். அப்போது பகவானுடைய கிருபையினால் அப்பாலகன் விழித்துத் தன் தாயையழைத்தான். சுமதிதேவி, புதல்வனிடம் சென்று, அவனை மார்போடணைத்துப் பக்தர்கள் முன்பாகக்கொண்டு வந்துவிட்டு, "ஸ்வாமிகளே! உங்கள் கிருபையால் எங்களுக்குப் பரமானந்தமுண்டாயிற்று," என்றாள். அதைக்கேட்ட சாதுக்கள், அப்புதல்வனுக்கு நேர்ந்த

ஆபத்தை விசாரித்தறிந்து, கண்ணனைப் புகழ்ந்தார்கள். பிறகு, அப்புதல்வனோடு சாதுக்கள்யாவரும் விருந்துண்டு, தாம்பூலாதிகளைப் பெற்று, அவர்களை ஆசீர்வதித்துச் சென்றனர். கமலாகரரும், அவர் மனையாளான சுமதி தேவியும், அவர்கள் புதல்வனும் ஹரி பஜனை செய்து, சுகமாக வாழ்ந்திருந்தனர்.

---

## 39. நாமதேவரும் பொற்கல்லும்.

பின்பு சில நாட்கள் சழித்து, நாமதேவருடைய தந்தையான தமாஜி அவரை வியாபாரம் செய்யும்படி ஆக்ஞாபித்து ஒரு தையற்கடை வைப்பதற்குப் போதுமான திரவியத்தை அவரிடம் கொடுத்தார். நாமதேவர், அப்பணத்தைக்கொண்டு சில துணிகளை வாங்கிச் சந்தை கூடும் தினத்தில் கடையை வைத்தனர். அவருடைய மனம், கிருஷ்ண பிரானையே நாடியிருந்தமையால், அவர் வியாபாரம் செய்ய வந்தவர்கள் கேட்ட கேள்விகளுக்குத் தகுந்த விடையளிக்காமலிருந்தனர். அதனால், அவர்கள், அவர் கடையை விட்டு மற்றக் கடைகளில் துணிகளை வாங்கிக்கொண்டு போனார்கள்.

மாலைப்பொழுதானதும், மற்ற வியாபாரிகள், கடைகளை மூடி, நாமதேவரைச் சுற்றி நின்று கேலி செய்தார்கள். அவர்கள், நாமதேவரைப் பார்த்து, "அடே, மூடா ! சூரியன் அஸ்தமனமாய்விட்டது. இனி வியாபாரம் நடக்காது. வீட்டிற்குப்போ," என்றார்கள். நாமதேவர், திடீரென விழித்துச்கொண்டு, துணி ஒன்றும் விற்கவில்லையென்றுணர்ந்தார். தம் பிதா தம்மை நிந்திப்பாரெனநினைத்து, அவர்வீட்டிற்குப் போகப் பயப்பட்டார். அவர், அன்றிரவு ஒரு சத்திரத்தில் தங்கியிருந்தார். அடுத்தநாட் காலையில், சில கற்கள் சில்

லென்றிருப்பதைக் கண்டு, அவர் அவைகளின் மீது துணி களைப் போர்த்து விட்டு வீட்டிற்குப் போனார். அவர், தம் தந்தையைச் சந்தித்தபோது, வஸ்திரத்தை ஞானோபா என்னும் ஒருவனுக்கு விற்றுவிட்ட தாகவும், அவன் அடுத்த நாள் அதன் கிரயத்தைக் கொடுப்பதாகச் சொன்னதாகவும், தாண்டோபா என்பவர் ஒருவர் அக்கடனுக்கு ஜாமீன் கொடுத்ததாகவும் கூறினார்.

அடுத்த சந்தை கூடுந்தினத்தில், நாமதேவர் அக்கற்க ளிருக்கும் வயலுக்குச்சென்று, அக்கற்களில் ஒன்றைப் பார்த்து, "ஞானோபா! நீர் வாங்கிய கடனைக் கொடும்," என்று கேட்டார். அது ஒருவிதபதிலு மளிக்காமலிருக்க, அவர் மற்றொரு கல்லைப் பார்த்து, "தாண்டோபா! நீர் ஜாமீன் கொடுத்தமையால் நீர்தான் அக்கடனைக் கொடுக்க வேண் டும்," என்று சொன்னார். இதற்கு அதுவும் ஒன்றும் பதிலுரைக்காமலிருக்க, நாமதேவர் இரண்டாவது கல்லைத் தம் தந்தையின் வீட்டிற்குப் புரட்டிக்கொண்டுபோய் ஓர றையில் போட்டுக் கதவை மூடிப் பூட்டி விட்டார். அப் போது தாமாஜி வெளியே சென்றிருந்தமையால், அவர் வந் ததும் இராஜாயி தன் புருஷன் ஒரு கல்லைக் கொண்டு வந்து அறையில் பூட்டி வைத்திருப்பதாகக் கூறினாள். தாமாஜி நாமதேவரை என்ன காரணமென்று கேட்க, அவர், "கடனுக் காக ஜாமீன் கொடுத்த தாண்டோபா என்பவர்தான் அக்கல்," என்றார். தாமாஜி மிகவும் கோபங் கொண்டார். நாமதேவர் அவ்வறைக்குட் சென்று கல்லைப்புரட்டி வந்து, தம் தந்தைக் கும் மனைவிக்கும் முன்பாக வைத்தார். அவர்கள், அது தங்கக் கட்டியாக இருக்கக்கண்டு ஆச்சரியமடைந்தார்கள். நாமதேவர் அவர்களைப் பார்த்து, "துணியின் கிரயத்தை அதினின்றும் எடுத்துக் கொள்ளுங்கள். மீதியை நான் வய

லுக்கெடுத்துக் கொண்டு போய்ப் போட்டு விடுகிறேன்," என்றார் தாமாஜிக்கும் இராஜாயிக்கும் அவ்வாறு செய்யச் சம்மதமில்லை. அவர் மனைவி அதிலிருந்து பல ஆபரணங்கள் செய்துகொள்ள வேண்டுமென் றெண்ணினள். அவர் தந்தையோ, வியாபாரத்தை விருத்தி செய்யலாமென்றெண்ணினர். அதனால் அவர்கள், தாம் வேண்டியபோது அதை உபயோகிக்கலாமென்று கருதி, அப்பொறகல்லை அடக்கம் செய்து வைத்தார்கள்.

இவ்வாச்சரியமான விஷயம் எங்கும் பரவ, அக்கற்களிருந்த வயலின் சொந்தக்காரன் அங்கு வந்து அக்கல்லைக் கொடுக்குமாறு கேட்டான். நாமதேவர் தம் தந்தையைப் பார்த்து, அவன் துணியின் கிரயத்தைக் கொடுத்து விட்டால் அக்கல்லைக் கொடுத்து விடும்படி சொன்னர். இதற்குத் தாமாஜியும், வயலின் சொந்தக்காரனும் சம்மதித்தார்கள். வயலுக்குரியவன் துணியின் விலையைக் கொடுத்து விட்டு அக்கல்லை வாங்கிக்கொண்டு தலைப்பாகையால் அதை ஜாக்கிரதையாகச் சுற்றி வீட்டிற்கெடுத்துக்கொண்டு போனன். அங்கே தான்கொணர்ந்த ஐஸ்வரியத்தை மனைவியிடம் காட்ட மூட்டையை அவிழ்த்தான். அவன் துணியைத் தள்ளினவுடன் அது பொற்கல்லாகக் காணப்படவில்லை. நாமதேவர் வயலினின்றும் எடுத்துச் சென்றது போலவே கருங்கல்லாயிருந்தது.

---

## 40. சஜ்ஜனகசாருகர்.

ஒரூரில் சஜ்ஜனகரென்ற சாருகர் ஒருவர் இருந்தார். அவர் சாருகராய்ப் பிறந்திருந்தும் கொலை புரியும் தொழிலை விட்டு, மாமிசம் விலைக்கு வாங்கி, அதை விற்று, அதனல்

கிடைக்கும் ஊதியத்தினல் இல்லறத்தை இனிது நடத்தி வந்தார். அவர், பெருமாள் பேரில் அதிக பிரீதி வைத்தவராய்த் தினந்தோறும் ஹரி பஜனை செய்து சாதுக்களுக்குப் பூஜை செய்து வந்தார். அவர், கண்ணபிரானுடைய வடிவமாகிய சாளக்ராமமொன்றை மாமிசம் நிறுக்கும் கல்லாக உபயோகப்படுத்தி வந்தார். இதைக் கண்ட ஒரு வேதியன், அவர் கடைக்கு வந்து, "பிராமணர் பூஜை செய்யத் தகுந்த இந்தச் சாளக்கிராமத்தை நீ பூஜிக்கலாமா? இதை நிறுக்கும் கல்லாக உபயோகிக்கலாமா? இதை என்னிடம் கொடுத்து விடு," என்று கேட்டான். அவரும் அவ்வேதியனுக்குச் சாளக்கிராமத்தைக் கொடுக்க, அவன் அதை வீட்டிற்குக் கொண்டு போய், வெகு சிறப்பாகப் பூஜைசெய்து வைத்திருந்தான்.

அன்றிரவு கண்ணபிரான் வேதியனுடைய கனவில் தோன்றி, "சஜ்ஜனகசாருகன் வீட்டில் சுகமாயிருந்த என்னை நீ கொண்டு வந்தாய். எனக்கு உன்னிடமிருக்கப் பிரியமில்லை. பொழுது விடியுமுன் என்னை அவன் வீட்டிற்கொண்டு போய் விடாவிடில் நீ அழிவதோடு உன் குலமும் நாசமாய் விடும்," என்று கூறினர். உடனே வேதியன் விழித்துக் கொண்டு, சாளக்கிராமத்தைத் தாசரிடத்தில் கொடுத்துத்தான் செய்த குற்றத்தை மன்னிக்குமாறு வேண்டித் திரும்பினன். சாளக்கிராமத்தைப் பிரிந்தது முதல் ஜலமுமருந்தாதிருந்த அப்பக்தர், அதிக சந்தோஷங்கொண்டு அதற்குப் பூஜை செய்து, தம் மனைவியுடன் உண்டு களித்திருந்தார்.

இப்படி இருக்கையில் ஒரு நாள் அவர் ஜகந்நாதத்திற்கு யாத்திரை செய்ய விரும்பி, அங்குப் போகிறவர்களுடன் கூடியாத்திரை செய்தார். அவர்கள் போகும் வழியில் ஒரு

கிராமத்தில் தங்கவேண்டி யிருந்தது. அவர்கள் தங்கின இடத்திலிருந்த ஒரு விபசாரியானவள், சஜ்ஜனகசாருகரைக் கண்டு, அவர் மீது மோகங்கொண்டு, அவரை வணங்கிச்சமையலுக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்து, அன்றிரவு அங்குத் தங்கிப் போகும்படி கேட்டாள். அவளது கருத்தையறியாத பக்தர், அவ்வாறே செய்யச் சம்மதித்தனர். அன்றிரவு அவர் சாப்பிட்டு நித்திரை செய்திருக்கையில் அவள் எழுந்து வந்து, அவர் பக்கத்திலுட்கார்ந்து, அவரை எழுப்பித்தன் கருத்தைத் தெரிவித்தாள். பக்தர், அதற்குடன்படாமல், "அம்மா! உன் புருடன் அதோ சயனித்திருக்கிறான். நீ அவனிடம் சென்று உன் மனோபீஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்," என்றார். உடனே அவள் ஒரு கத்தியை எடுத்துத்தன் புருடனுடைய சிரத்தைத் துண்டித்து, பக்தரிடம் வந்து, "என் நாதன் இறந்து விட்டான். இனியாகிலும் என் கருத்துப்படி நடக்க வேண்டும்," என்றாள். பக்தர் அவள் கொடிய பாதகி எனக்கருதி, வெளியே புறப்பட்டுப் போக அவள் ஓலமிட்டு அழ ஆரம்பித்தாள். அங்குத்தங்கி இருந்தவர்கள், விழித்துக்கொண்டு, அவளை என்ன நேர்ந்ததென்று கேட்க, அவள், "இம்மனிதனுக்கு வேண்டிய பொருளைக் கொடுத்தேன். இவன் சமையல் செய்து சாப்பிட்டு என் வீட்டில் நித்திரை செய்து, நடு ராத்திரியில் என் புருடனைக் கொன்று விட்டான்," என்று கூறினாள். உடனே அவர்கள் பக்தரைப் பிடித்துக் கொண்டு போய், அரசன் முன்விட்டுச் சங்கதி யறிவித்தனர். அவளும் அலறியழ ஆரம்பித்தாள். அரசன், பக்தருடைய இரு கரங்களையும் ஒரு வாளினால் வெட்டி விட்டான்.

சஜ்ஜனகசாருகர், அதிக மனவருத்தமடைந்து ஜகந்நாதத்தின் அருகில் சென்று, ஹரி பஜனை செய்திருந்தார்.

ஜகந்நாதப் பெருமாள், அர்ச்சகருடைய கனவில் தோன்றி, "நம் பக்தன் ஊரின் வெளியே வந்து தங்கி இருக்கிறான். அவனுக்குத் தகுந்த மரியாதைகள் செய்து பல்லக்கிலேற்றி வாருங்கள்," என்று கட்டளையிட்டார். அவர்களும் அவ்வாறே பல்லக்குடன் சென்று பக்தரை வணங்கி, பெருமாள் கட்டளையைக் கூறிப் பல்லக்கில் ஏறும்படி வேண்டினர். அப்போது தாசர் கண்களில் நீர் ததும்ப, "ஹே! சர்வேஸ்வரா! பக்தவத்சலா! நான் ஒரு குற்றத்தையும் செய்யாமலிருக்கையில் அரசன் என் கரங்களைச் சேதிக்கும்படி ஏன் செய்தீர்? இத்தருணம் என்னைக் காப்பாற்ற வேண்டும்," எனப் பலவாறு பிரார்த்தனை செய்து நின்றார். பகவான் அவர் மீது கிருபை கொண்டு சங்கு சக்கரத்தோடு பீதாம்பரதாரியாய் அவர்முன் தோன்றினர். உடனே சேதிக்கப்பட்ட இரண்டுகரங்களும் பழையபடி வளர்ந்திருப்பதைத் தாசர் கண்டுமகிழ்ந்தார். பகவான், தாசரை மார்போடணைத்து அபயம் தந்தார். தாசர், பகவானை நோக்கி, "ஒரு குற்றமும் செய்யாத என் கரங்கள் ஏன் வெட்டப்பட்டன? என்று கேட்டார். அதற்குப் பகவான், "முன்பிறப்பில் நீ பிராமணனாயிருந்தாய். ஒரு நாள் கங்கை நதிக்கரையில் நீ ஸ்நானம் செய்து நின்று, என்னைத் துதித்திருக்கையில் கொலை செய்வதற்காகக் கட்டப்பட்டிருந்த பசுவொன்று அறுத்துக் கொண்டு உன் பக்கத்தில் சென்றது. கொலைஞன் அதைத் தேடி வந்து உன்னை, 'பசு எங்கே?' என்று கேட்டபோது அது போன வழியைச் சுட்டிக் காட்டினாய். அவனும் அவ்வழியே சென்று அதைப் பிடித்துக் கொன்றான். அந்தப்பசு மறு ஜென்மத்தில் ஒரு பெண்ணாய்ப் பிறந்து, ஒரு சாருகனை மணந்து வாழ்ந்திருக்கையில் நீ அவள் வீட்டிற்குச் சென்றாய். அவள் உன்னைக் கண்டு

மோஹித்துத் தன் புருஷனைக் கொன்றாள். உன் கரங்களை யும் அரசனைக் கொண்டு வெட்டுவித்தாள். என்னைத் துதி செய்யும்போது கசாருகனைக் கண்டதால் இப்போது நீ கசாரு கனாய்ப் பிறந்தாய். ஆனாலும் உன் பக்தியினால் கட்டுண்டு உனக்குக் காட்சி கொடுத்தேன்,'' என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார்.

பக்தரோடு நின்றிருந்தவர்களெல்லாம் அவர் கைகள் வளர்ந்திருப்பதைக் கண்டு ஆச்சரியமுற்றுப் பகவானுடைய கிருபையினால் அவ்வாறாயினவென்று பக்தரைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். பிறகு அவர் ஜகந்நாதத்தில் நான்கு மாதகாலம் வரையிலிருந்து பெருமாளைச் சேவித்துத் தம் ஊருக்குத் திரும்பிவந்து பகவானை இனிது புகழ்ந்திருந்தார்.

---

## 41. கோராகுயவர்.

முன்னொரு காலத்தில் தேரடோகி என்னும் கிராமத்தில் கோரா என்னும் குயவர் ஒருவர் வசித்திருந்தார். அவர் சதா கிருஷ்ணபகவானையே சிந்தனை செய்திருந்தமையால் அவரைத்தவிர வேறொரு எண்ணமுமின்றி இருந்தார். ஒரு நாள் கோராவினுடைய மனைவி வெளியே சென்றிருந்த போது, அவர் பாண்டம் வனையக் களிமண்ணை மிதித்துக் கொண்டிருக்கையில் அவருடைய குழந்தை தவழ்ந்து கொண்டு அவரிடம் வந்தது. அவர் தேகத்தை மறந்து பரமாத்மாவினுடைய பக்கலிலேயே தம் சித்தத்தைச் செலுத் தி இருந்தமையால் தம்மிடம் தவழ்ந்து வந்த தமது குழந் தையைப் பார்க்காமல் அதை மண்ணுடன் சேர்த்து மிதித்து விட்டார். அவருடைய மனைவி வீட்டிற்குத் திரும்பி வந்த போது, "நம்முடைய குழந்தை எங்கே? அதை உம்மிடம்

விட்டுப் போனேனே! இப்போது அதைக் காணேமே!'' என்று அவரைக் கேட்டாள். கோராகுயவர் அவள் கேட்ட கேள்வியையும் கவனிக்காது, ஒன்றின்மேலும் சிந்தனையின்றி ஹரிநாமத்தை மனனஞ் செய்துகொண்டே இருந்தார். அப்போதவள் அம்மண்ணில் மிதிபட்டகுழந்தையின் தேகத்தைக் கண்டாள். அதைக் கண்டு அவள் மனந்தாளாதவளாய்க் கண்ணீர் விட்டுத்தன் கணவரைப்பார்த்து, ''நம் குழந்தையைக் கொன்று விட்டீரே! நீர் உம்மையும் மறந்திருப்பதாலல்லவா இக்கேடு விளைந்தது? நான் இனி உம்முடன் கூடி வாழமாட்டேன். இப்போதே சென்று என் உயிரை மாய்த்துக் கொள்ளுகிறேன்,'' என்று கதறிக் கூச்சலிட்டாள்.

கோராகுபவர், தம் மனைவி பகவானைச் சிந்தனை செய்திருப்பதைக் கெடுத்து விட்டாளென்று அவள் மீது மிகவும் கோபங்கொண்டார். அவர் அவளைப்பார்த்து ''ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி என் முன்னின்று காட்சி கொடுத்திருந்தாரே! நீ அவரை ஓட்டி விட்டாயே!'' என்று சொல்லி ஒரு தடியைக் கையிலேந்தி, அவளைத் துரத்தி அடித்தார். அதனால் அவள் தன் கணவர் மீது மிகவும் கோபங்கொண்டு, ''நீர் வழிபடும் பாண்டுரங்கர் மேல் ஆணை! நீர் என்னை இனித் தீண்ட வேண்டாம்,'' என்று கூறினாள். கோராகுபவர் இவ்வார்த்தைகளைக் கேட்டதும் கோபம் நீங்கிச் சாந்தமடைந்தனர். அவர் இவ்வுலக பந்தபாசம் தம்மை விட்டுவிட்டதென்றும் இனிமேல் தாம் பகவத் சிந்தனை செய்வதற்கு ஒருவித இடையூறுமேற்படாதென்றும் எண்ணினர். அக்கிராமத்தார்கள் கோராகுபவர் தம்குழந்தையை மிதித்துச் சாகடித்தாரென்று கேள்விப்பட்டு அவரைப் பலவாறாக நிந்தித்துக் கேலி செய்து, 'அப்பா! நீ பக்தி செய்து நல்ல பலனைப் பெற்றாய்,'' என்றார்கள். கோராகுபவர் அவ்வார்த்

தைகளைச் சிறிதும் கவனிபாது, அகஸ்தியர் பொங்கும் கடலைச் சட்டை செய்யாததைப் போலும், பண்டிதர் மூடர்களை அலட்சியம் பண்ணுவது போலும் அவர்களைலட்சியம் செய்யாமல் இருந்தார்.

சில நாட்கள் வரையில் கோராகுயவருடைய மனைவி அவருடன் பேசாமலிருந்தாள். ஒருநாள் அவள் தனக்குள்ளே, "என் கணவரைத் தண்டிக்க நான் பாத்திரியல்ல. அரசன் கொடுமை செய்தபோதிலும் குடிகள் அரசனை மன்னிக்க வேண்டும்," என்றெண்ணி, ஒரு நாள் மாலை அவரிடம் சென்று அவருடைய காலையலம்பத் தொடங்கினாள். கோரா பக்தர் அவளை விலக்கி, "உன்னை நான் தொடக்கூடாதென்று பாண்டுரங்கர் மேல் ஆணை வைத்திருக்கிறாய்," என்றார். அவள் இதைக்கேட்டு, "நாதா! நான் கோபத்தால் ஆணை வைத்து விட்டேன். நீர் என்னை மன்னித்தருள வேண்டும். சூளையில் அடுக்கின பானைகள் ஒன்றின்மேலொன்று அடிக்கடி இடித்துக்கொண்ட போதிலும் ஒருபோதும் உடைந்து விடுகிறதில்லையே? அதைப்போல் சதிபதிகள் ஒருவிதக்கெட்ட எண்ணமுமின்றி அடிக்கடி சண்டையிடுவது சகஜந்தானே?" என்றாள். கோராகுயவர் மிகவும் கோபங் கொண்டு, "சூரியன் மேற்கே உதயமாகுங் காலத்திலும், மேகங்களைக் கண்டு வாயு பகவான் நடுக்கமுறுங் காலத்திலுந்தான் உன்னை நான் தீண்டுவேன்," என்று பதிலுரைத்தார். கோராவின் மனைவி தான் என்ன சொல்லியும் புருடர் கேளாததைக் கண்டு, அவரைத் தனியே விட்டு விலகி, "என்னொரு குழந்தையையும் இழந்தேன். என் கணவர் இவ்வாறு விலக்குவாரானால் வேறு குழந்தை எனக்குண்டாகும் மார்க்கமும் இல்லை," என்றெண்ணி வருந்தினாள். கடைசியில் அவள் தன் புருடர் மறுவிவாகம் செய்து கொண்டால் இரண்டாவது

மனைவியாலாவது புத்திர சந்தானமுண்டாகலா மென்று நினைத்தாள். உடனே அவள், தன் பெற்றோரகத்திற்குச் சென்று நடந்த விருத்தாந்தங்களை அவர்களிடம் கூறினாள். அவள் தன்தாயார் மடிமேல் உட்கார்ந்து, தனது தங்கையைக் கோராகுயவருக்கு விவாகம் செய்து கொடுக்கும்படி வேண்டிக்கொண்டாள்.

அவளுடைய பெற்றோர்களும் அதற்குச் சம்மதித்துப் பிராமணர்களுக்கு ஆட்கள் அனுப்பிக் கலியாணத்திற்காக வேண்டியவைகளைத் தயாரித்தார்கள். அவர்கள், தங்கள் பந்துமித்திரர்களை வரவழைத்துக் கொண்டு மேளவாத்தியங் களுடன் புறப்பட்டார்கள். கலியாணத்திற்காகக் குறிப்பிட் ட நாளில் பிராமணர்கள் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் மத்தியில் ஒரு திரையைப்பிடித்து மந்திரங்களை உச்சரித்தார் கள். பிறகு அவர்கள், "சாவதான" (இனி ஜாக்கிரதையாக இரு) என்று கூறித் திரையை எடுத்து விட்டார்கள். பின்பு நான்கு நாட்கள் வரையில் கலியாணத்திற்கு வந்தவர்கள் யாவரும் விருந்துண்டு மகிழ்ந்து கலியாணப் பெண்ணைக் கோராவின் வீட்டிற்கழைத்துப் போக ஊர்வலம் புறப் பட்டனர். பெற்றோர்கள் பெண்ணை விட்டுப் பிரியுங்கால், பெண்ணின் தாயாருடைய மனத்தில் ஒருசந்தேகம் தோன்றி யது. அவள் தன் கணவரை நோக்கி, "மாப்பிள்ளை நம் இளைய மகளைச் சீராக வைத்திருப்பாரென்றே எண்ணுகிறேன். அவர் அப்படிச்செய்யாவிடில் கிராமத்தார் நம்மைக் கேலி செய்வார்கள்," என்று கூறினாள். பெண்ணின் தந்தை கோராவைத் தன்னிடமழைத்து, "ஐயா, நீர் எங்கள் பெண் களின்மேல் பக்ஷமாயிரும். நீர் இருவரையும் பட்ச பாத மின்றி நடத்தவேண்டும். அப்படி நடத்தாவிடில் பாண்டு ரங்கர் உம்மைத்தண்டிப்பார்," என்று சொன்னார். இதைக்

கேட்டுக் கோராகுயவர், "சத்தியமாய் அப்படியே நடந்து கொள்ளுகிறேன்," என்று கூறித் தம் வீட்டிற்குப் போகப் புறப்பட்டார். போகும்போது அவர், கலியாணத்தால் ஏற்படும் கவலைகளினின்றும் கண்ணபிரான் தம்மை மீட்பித்தனரென்றெண்ணிச் சந்தோஷங்கொண்டார். கோரா தம் இரு மனைவியருடன் வீட்டிற்குச் சென்றதும் அவர்களிருவருக்கும் நல்ல ஆடை ஆபாணங்களைக் கொடுத்தார். ஆனால் அவர் அவர்களிருவரையும் ஓரறையில் படுக்க வைத்துத் தாம் ஓர் அறையில் சயனித்திருந்தார். இதைக் கண்ட மூத்தாள் அவரைப்பார்த்து, "நாதா! ஏன் என் தங்கையைத் தங்களுடன் சேர்த்துக் கொள்ள மாட்டேனென்கிறீர்கள்?" என்று வினவினாள். கோராகுயவர், "நான் உன் தந்தையிடம் உங்களிருவரையும் பட்ச பாதமின்றி நடத்துவதாகச் சத்தியம் செய்து கொடுத்தேன். நான் உன்னைத் தொடக்கூடாதென்று ஆணை இருப்பதால் உன் தங்கையையும் தொடக்கூடாதல்லவா?" என்று பதிலுரைத்தார்.

இதைக்கேட்ட இரண்டு மனைவியரும் விம்மி விம்மி அழ ஆரம்பித்தனர். மூத்தவள் இளையாளைப் பார்த்து, "தங்காய்! நாம் பொறுத்துக்கொண் டிருப்போம். என்றாவ தொருநாள் அவர் நம்மீது இரக்கங் கொள்ளும்படி கண்ணன் அருள் புரிவார்," என்றனள். அன்றிரவு கோரா படுத்துச் சயனித்திருக்கையில் இரண்டு சகோதரிகளும் சந்தடி செய்யாமல் அவ்வறைக்குள் சென்று அவருக்கு இரண்டு பக்கங்களிலும் படுத்துக்கொண்டு, ஒவ்வொருவரும் அவரது கரத்தை யெடுத்துத் தங்கள் கழுத்தின் மேல் வைத்துக் கொண்டனர். கோரா விழித்ததும் தம் மனைவியரிருவரும் தம் கைகளைக் கழுத்தின்மேல் வைத்துக் கொண்டு பக்கத்தில் சயனித்திருப்பதைக் கண்டு, "ஐயோ! என் கைகள் என் சத்

தியத்தைக் கெடுத்தனவே! அவை என் மனைவியரைத் தொடும்படி செய்தனவே!" என்று வருந்தினர்.

பின்பு அவர் படுக்கையைவிட் டெழுந்திருந்து, ஒரு கத்தியைக் கட்டிலின் காலில் கட்டித் தமது இருகரங்களும் அறுபடும் வரையில் அவற்றை அதன்மேல் மோதினர். சகோதரிகளிருவரும் எழுந்திருந்தபோது தம் கணவர் கைக ளின்றி இரத்தம் சோர இருப்பதைக்கண்டு, ஓவென்றலறி அழுது அவரைப் பார்த்து, "ஐயோ! நாங்கள் இனி என் செய்வோம்? உங்களுக்குக் கைகளில்லையே! நீங்கள் இனி எவ்வாறு சம்பாதித்து எங்களைச் காப்பாற்றுவீர்கள்? எங்க ளைக் கண்டு எல்லோரும் நகைக்க, நாங்கள் உண்ண உண வின்றி இறந்து போகவா காலம் நேர்ந்தது !" என்று பின் னும் கூக்குரலிட்டு அழுதார்கள். கோரா, கல்லான மனத்தை யும் கரையச்செய்யும் இவ்வார்த்தைகளைக் கேட்டு, அவர்களுக் குச் சமாதானம் சொல்லி, "பெண்களே! வருந்தாதீர்கள். கண்ணன் நமது மித்திரராயிருக்கையில் நாம் உணவின்றி இறக்க நேரிடுமா? பரிசவேதிக் கல்லையுடையவன் தரித்திரத் திற்கஞ்சுவதில்லை. தேவாமிர்தத்தை உண்டவன் எமனுக்கஞ் சுவதில்லை." என்றார். நாளடைவில் அவர் மனைவியர் இரு வரும் விசனமற்று மௌனமாயிருந்தனர்.

கார்த்திகை மாதத்தில், ஏகாதசியன்று பாண்டுரங்கனைத் தரிசிக்க அவர் தம் பத்தினியர் இருவருடன் பண்டரிபுரத்திற் குச் சென்றனர். அவர், பீமா நதியில் ஸ்நாநம் செய்து, புண்டரீகனுடைய விக்கிரகத்தை வலம் வந்து, சன்னதிக்குட் சென்றனர். அவரும் அவர் மனைவிகளிருவ ரும் சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டு ஸ்வாமியின் பாதங் களைத் தழுவிக் கண்களில் ஒற்றிக் கொண்டார்கள். அப் போது நாமதேவர், கிருஷ்ணனைப் புகழ்ந்து கீர்த்தனைகள்

பாட, ஞானதேவர், நிவிருத்தி, சோபன முதலானோர் அரு கில் நின்று கேட்டுக்கொண் டிருந்தனர். நாமதேவர் பாடும் போது காவிக் கொடியைத் தலைமேல் உயர்த்தி ஆட்டிக் கொண்டு மற்றவர்களையும் அவ்விதம் செய்யும்படி சொன் னார். கோரா பக்தர், கரங்களில்லாமையால் அவ்வாறு செய்ய முடியாமல் அதிக விசனமுற்றுக் கண்ணீர் வடித்துத் தாம் ஒரு கொடியை ஆட்டவேண்டுமென்னும் ஆவலுடன் கண்ணனைத் தியானம் செய்தார். கண்ணபிரான் அவர்மீது இரக்கம் வைத்து அப்பொழுதே கைகள் வளரும்படி செய் தார். கோரா பக்தர், மிகுந்த சந்தோஷத்துடன் ஆரவாரம் செய்தார். மூத்தமனைவி இவ்வாச்சரியமான நிகழ்ச்சியைக் கண்டதும் தானும் கிருஷ்ணனைப் பிரார்த்தித்து, "கிருஷ்ணா! என் கணவர் இழந்த கைகளை மீண்டும் வளரச் செய்த கரு ணாகரக்கடவுளாகிய உமக்கு மண்ணிடைப்பட்டு மாய்ந்த என் குழந்தையை மீண்டும் கொடுத்தருளுதல் கூடாத காரியமோ? உம்மால் தானே நான் அதை இழக்கும்படி நேர்ந்தது? உமது காட்சியை என் கணவர் காணாதிருந்திருப்பாரானால் என் குழந்தையை மண்ணுடன் மாயும்படி மிதித்திருக்க மாட்டாரே?" என்றாள். இவ்வார்த்தைகளை அவள் சொல்லி முடியுமுன்னர், கூட்டத்தினின்றும் ஒரு சிறு குழந்தை தன்னிடம் தவழ்ந்து வருவதை அவள் கண்டாள். உடனே அவள், அக்குழந்தையிடம் சென்று, அதைக் கைகளாலெடுத் து மார்போடணைத்து முத்தமிட்டாள். அது இறந்து போன அவள் குழந்தையே. உயிரிழந்து ஒழிந்த தன் குழ ந்தையை மீண்டும் பெற்ற அவள், பிறவிக்குருடன் கண்களைப் பெற்றாற் போலப் பெருமகிழ்ச்சியடைந்தாள். பின்பு ருக்குமணி தேவியார் கோரா பக்தரைப் பார்த்து, "அன்பா! நீ வீடு சென்று முன்போல இனி மூடத்தனமாயிராமல், நீ

செய்த சத்தியத்தையொழித்து உன் மனைவிகளைப் பட்சமாய் நடத்திக்கொண்டுவா," என்று திருவாய் மலர்ந்தருளினர்.

---

## 42. மஹாஜனர் சரித்திரம்

குவாலியரென்னும் தேசத்தில் மஹாஜனரென்னும் வைசியரொருவர் வசித்திருந்தார். அவர் செல்வச் சீமானாகவிருந்தும் சாது பூஜை செய்து, குண தோஷமின்றிக் குடும்பத்தை நடத்தி வந்தார். வைஷ்ணவ சின்னங்களையுடையவர்களாய்ச் சாதுவேஷம் பூண்ட கபடதாரிகளையும் அவர் ஒரு வித விகற்பமின்றி எதிர்கொண்டழைதது‍த் தெண்டனிட்டு அவர்களுடைய தோஷங்களைக் கவனிக்காமல் சேவை செய்து வருவார். அவர் பாகவதாகளைக் கண்ட மாத்திரத்தில் அவர்கள் திருவடியில் வீழ்ந்து தெண்டனிட்டு, அவர்கள் கால்களை அலம்பி, அத்தீர்த்தத்தை ஸ்வீகரித்து, அறுசுவையுண்டியளித்து ஆநந்தங்கொள்வார்.

ஒரு நாள் கண்ணபிரான் ஒரு பித்தனைப் போல் வேடம் பூண்டு வைஷ்ணவ வேஷத்துடன் மஹாஜனர் இருக்குமிடத்திற்கு வந்தார். மஹாஜனர் பாவுளாவென்னும் நாமம் பூண்டுவந்த அந்தத் தாசரையும வழக்கப்படி வணங்கித் துதி செய்து அன்னமிட்டு உபசரித்து வந்தார். பாவுளா பக்தரும் அவர் வீட்டில் பலநாட்கள் தங்கி இருந்தார். ஜனங்கள் யாவரும் மஹாஜனரை நோக்கிப் பித்தம் பிடித்த மனிதனை வீட்டில் சேர்த்துக்கொண்டு பூஜை செய்து வருவதில் பயனொன்றுமில்லையெனக் கூறினர். மஹாஜனர் அவர்கள் வார்த்தைகளைச் சிறிதும் கவனித்தாரில்லை. இப்படி இருக்க ஒருநாள் மஹாஜனர் தம் குழந்தைக்குப்பிரீதியாய் ஆபரணங்களநேகமாகப் பூட்டினர். பாவுளா சாது, அக்குழந்தையை

எடுத்துக் கொண்டு ஊருக்கு வெளியே போய் நகைகள் யாவற்றையும் கழற்றிக் கொண்டு குழந்தையைக் கொன்று ஒரு பள்ளந் தோண்டிப் புதைத்து விட்டார். அதற்கருகிலுள்ள ஒரு குன்றின் மீது வசித்திருந்த யதீஸ்வரரொருவர் அச்செய்கையைப் பார்த்துக்கொண் டிருந்தார்.

பாவுளா சாது வீட்டிற்குத் திரும்பினவுடன் ஜனங்கள் யாவரும் அவரைக் குழந்தை யெங்கே யென்று கேட்டார்கள். அவர் தமக்கொன்றும் தெரியாதெனக்கூற அனைவரும் வருத்தமடைந்து ஊரெங்கும் தேடினார்கள். மஹாராஜனர் மனைவி அதிக துயருற்றுப் பாவுளா சாதுவைக் கேட்க அவர் குழந்தையைக கொன்றேனென்று சொன்னார். மஹாராஜனர், சாது புருஷர்கள் அவ்வாறு செய்ய மாட்டார்களென்று கூறி அவர்மீது சந்தேகங் கொள்ளாதிருந்தார். அவ்வூர் அரசன், இச்செய்தியைக் கேட்டுக்குழந்தையைக்கொன்றவன் யாரென்றறியப் பறையறைவிக்க, யதீஸ்வரர் அரசன் முன் வந்து பாவுளா சாது அப்பிள்ளையைக் கொன்றாரெனக்கூறி, அதைப் புதைத்த இடத்தைக் காட்டினார். அந்த இடத்தில் மண்ணை யெடுத்துப்பார்க்கக் குழந்தையின் தேகம் காணப் பட்டது. அப்போதும் மஹாராஜனர், "பாவுளா சாது விஷ்ணுதாசர்; அவர் இக்காரியத்தைச் செய்யார். அவர் மனம் நோகாதபடி நடந்தால்தான் ஹரி கிருபையுண்டாகும்", என்று அரசனிடம் கூறிக் குழந்தையைத் தகனம் செய்து வீடு திரும்பினர்.

அவ்வூரிலுள்ள பிரஜைகள் யாவரும், "பாவுளா சாது நகைக்காக ஆசைப்பட்டுக்குழந்தையைக் கொன்றான். சுகமாகச் சாப்பிட்டுச் சௌக்கியமாக நித்திரை செய்திருந்த இடத்தில் துரோகம் செய்த கொடிய பாவியாவான்," என்று கூறினர். பாவுளா சாது இவ்வார்த்தைகளைக் கேட்டு, "மஹாராஜனரே!

இவ்விடத்தில் என்மேல் நிந்தை வந்தது. நான் இனி இங்கேயிருக்க மாட்டேன்,'' என்றார். மஹாஜனர் அவரை நோக்கி, "ஸ்வாமி! துர்ஜனர் கூறும் வார்த்தைகளுக்கு நீர் ஏன் காது கொடுக்கவேண்டும்? என்மேற் கிருபை வைத்து நீர் இங்குத் தங்கியிருக்க வேண்டும். எனக்கோர் விருப்பமிருக்கின்றது. நீர் அதனை அங்கீகரிக்க வேண்டும். என் மகளை உமக்கு விவாகம் செய்து கொடுக்க வேண்டுமென விரும்புகிறேன்,'' என்று கூறி விவாகத்திற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்து வந்தார்.

பகவானனவர் மஹாஜனரைப் பரீக்ஷித்துச் சந்தோஷமடைந்து, அவருடைய ஆசாரியரான தேவகுருவினுடைய சொப்பனத்தில் தோன்றிக் குழந்தைனபத் தகனம் செய்த இடத்தில் நின்று ஹரி நாமத்தைப் பஜித்தால் குழந்தை திரும்பிவருவானெனத் திருவாய் மலர்ந்தனர். அவ்வாசாரியர் மஹாஜனரிடம் தாம் கண்ட கனவைக்கூறி அவரை அழைத்துக்கொண்டு மயானத்திற்குச் சென்று வீணை மிருதங்கத்துடன் பஜனை செய்து, 'கண்ணா! முகுந்தா! கேசவா! மாதவா! வாரும்: பாலனைத் தந்து ரட்சிக்க வேண்டும்! சீக்கிரம் வாரும்,'' என்று துதி செய்து நிர்தனஞ் செய்திருந்தனர். அப்படி இருக்கையில் அவர்கள், சகல ஆபரணங்களையும் பூண்டு அப்பாலகன் தம்முடன் ஆடிக்கொண்டிருப்பதைக் கண்டு களித்தார்கள். அவர்கள் பாலனையழைத்துக்கொண்டு வீடு திரும்பினதும், பாவுளா சாது மறைந்தருளினர். அவ்வூரிலுள்ள ஜனங்களனைவரும் கண்ணபிரானே அவ்விதமாக வேடம் பூண்டு மஹாஜனரைப் பரீக்ஷித்தாரென்று சொன்னார்கள். மஹாஜனர் சாது பூஜையைச் சரிவரச்செய்து சகலரும் தம்மைப்போற்றக் குடும்பத்தை நடத்தி இனிது வாழ்ந்திருந்தார்.

## 43. நாமதேவரும் விசோபாகேசரும்.

கோராக்குயவருக்குக் கரங்களுண்டானதும் அவர் தமக்குத் தெரிந்த பாகவத கோஷ்டிகளை விருந்திற்கு வர வழைத்தனர். ஞானதேவரும், நாமதேவரும், சோபனுவும், முக்தாபாயும், சாவதமாலி என்னுந்தோட்டக்காரரும் அவ்விருந்திற்கு வரச்சம்மதித்து அவருடன் வந்தனர். அவர்கள் யாவரும் ஆசனத்திலமர்ந்திருக்கையில், ஞானதேவர் கோராவைப்பார்த்து, "நீ இங்கு வட்டமாகப் பரப்பிய பானைகளில் எதுசரியாகச் சுடப்படவில்லையென்பதைக்காண்பி," என்றார்.

கோராபக்தர் ஞானதேவர் கூறிய வார்த்தைகளின் உட்பொருளை யுணர்ந்து, பானைகளைத் தட்டுங்கட்டையைக் கையிலேந்திவந்தார். அவர் அங்கு வந்திருந்த விருந்தினர் ஒவ்வொருவரிடமும் சென்று அக்கட்டையால் அவர்கள் தலையைத்தட்டினார். முதலில் தட்டிய தலைகளில் ஒன்றும் சப்திக்கவில்லை. கோரா நாமதேவருடைய தலையைத்தட்டின போது, "இங்கே நன்றாக வேகாத பானையொன்றிருக்கிறது," என்று கூறினார். இதைக்கண்டு முக்தாபாய் நகைத்து, "குயவர் ஒரு விநாடியில் வேகாத பானையிதுவென்று சொல்லிவிடுகிறார். தட்டான் வெகுவிரைவில் ரவைகல்லென்றும் ஸ்படிகமென்றும் கண்டு பிடித்துவிடுகிறான். வைத்தியனால் நோயாளியின் நோய் இன்னதென்று சொல்ல முடிகிறது," என்று சொன்னார்.

அதைக்கேட்டு அங்கு வந்திருந்த விருந்தினர் யாவரும் நாமதேவரைப் பார்த்து நகைத்தனர். நாமதேவர் அதனால் மிகவும் அவமானமடைந்து, எழுந்திருந்து பாண்டுரங்கர் சந்நிதிக்கு விரைந்தோடினார்.

நாமதேவர் கண்ணனிடம் சென்று தமது குறைகளைக் கூறி, "சுவாமி! நீர் தான் எனக்காதாரம்; உம்மைத்தவிர எனக்கு வேறு திக்கில்லை. நீர் எனக்கு ஆதரவு கூறும். நிலமே பயிரை வெறுத்தால் பயிர் எங்குச்சென் றடையும்? அரசனே குடிகளை வருத்தினல் குடிகள் யாரிடம் நியாயம் பெறுவர்?" என்றார். கிருஷ்ணபகவான் அவரை நோக்கி, "ஞானதேவர் கூறிய வார்த்தையின் உட்கருத்தென்னவெனில் ஒருவர்எவ்வளவு சிறந்தபக்தராயிருந்தாலும் ஒரு குருவினிடம் சென்று ஞானேபதேசம் பெறவேண்டுமென்பதே. இல்லாவிடில் அவர் ஞானம் முற்றுப்பெறாது. ஸ்ரீராமாவதாரத்தில் நான் அகஸ்தியரிடம் பயின்றேன்; கிருஷ்ணாவதாரத்தில் சாந்திபமுனிவர் என்னும் ஆசிரியரிடம் பயின்றேன். நீரும் என்னைப்போல் ஒரு குருவை அடுத்து உபதேசம் பெற்றால் உம்மை எல்லோரும் மேன்மைப்படுத்துவார்கள்," என்றார்.

நாமதேவர் இதைக்கேட்டு, "சுவாமி! நான் தங்கள் பாதாரவிந்தங்களைச் சேவை செய்திருந்தால் போதும்.எனக்கு அதிக ஞானம் ஒன்றும் வேண்டியதில்லை," என்று சொன்னார். கிருஷ்ணன் அவரை நோக்கி,"அப்படியல்ல: நான்கூறியபடியே நீர் அவசியம் செய்யவேண்டும். நான் உமக்குமட்டில் ஒன்று சொல்லுகிறேன் கேளும்: உம்மை நான் பரிசோதனை செய்கிறேன்.நான் மாறுவேடம் பூண்டுவருகையில் நீர் என்னைக்கண்டுபிடித்து விடுவீராகில் உமக்குக் குருபதேசம் வேண்டியதில்லை, அப்படி நீர் கண்டுபிடிக்காவிடில் ஒரு குருவிடஞ்சென்று உம்முடைய ஞானத்தை விருத்திசெய்து கொள்ளவேண்டிய தவசியம்," என்று கூறினர்.

சில நாட்கள் கழிந்தன. பிறகு ஒருநாள் நாமதேவர் வருணுதி கிராமத்தில் வசித்திருந்த சாவதமாலி என்னும்

பக்தரைப் பார்க்கச் சென்றார். அவர்களிருவரும் ஒருநாள் வெளியே உலாவிக்கொண் டிருக்கையில் உயர்ந்த விகார மான உருவமுடைய பகீர் ஒருவன் ஒருநாயுடன் அவர்களி டம் வந்தான். அவன் ஒரு கம்பளியையும் ஒரு நெருப்புச் சட் டியையும் ஒரு பையையும் வைத்திருந்தான். அவனுடைய தோற்றம் மிகவும் பயங்கரமா யிருந்தமையால் நாமதேவர் அவன் எமனாகத்தா னிருக்கவேண்டுமென் றெண்ணினர். அவன் அவர்கள் வைத்திருந்த உணவைத் தன்னிடம் கொடுக்கும்படி கேட்டான். பிறகு அவன் அவர்களைத் தன் னுடன் உட்கார்ந்து உணவருந்தும்படி கட்டளையிட்டான். சாவதமாலி சிரித்துக்கொண்டு அவ்வாறு செய்யச் சம்மதித் தார். நாமதேவரோ ஜாதி கெட்டுவிடுமென் றெண்ணி அதற் குச் சம்மதியாமல் கிருஷ்ணபிரான் சந்நிதிக்கு ஓட, அந்தப் பகீரும் அவரைப் பின்பற்றிச் சென்றனன். அங்கே நாம தேவர் ஓடிவந்ததால் களைப்புற்று நடுநடுங்கி, நடந்ததைத் தாம் வழிபடும் கண்ணனிடம் கூறினர். கண்ணபிரான் அவர் ஆச்சரியப்படும்படி பயங்கரமான அந்தப் பகீரைப்போல் தோன்றிப் பிறகு தம் சுபரூபத்தைக் காட்டினர். அவர் நடு நடுங்கிய நாமதேவரைச்கண்டு சிரித்து அவரைப் பரிசோதிக் குமாறு தாம் பகீர் வேடம் பூண்டு வந்ததாகத் தெரிவித்தார். சாவதமாலி குருனுபதேசம் பெற்றமையால் பகவானைத் தெரிந்து கொண்டார். நாமதேவர் அவ்வித உபதேசம் பெருமையால் கண்ணனைக் கண்டுபிடிக்க முடியாமல் போயிற்று.

நாம தேவர் அப்போதும் குருபதேசம்பெறச் சம்ம திக்காமல் தம்மை மறுபடியும் பரிசோதிக்குமாறு கிருஷ்ண பிரானை வேண்டிக்கொண்டனர். கிருஷ்ணபகவானும் அதற் குச் சம்மதித்தார். நாமதேவர் வருணதியிலேயே சாவதமாலி

புடன் வசித்துவந்தார். சிலநாட்கள் சென்றபிறகு பெரிய கோரமான ஆப்கானியன் ஒருவன் கையில் நீண்டகத்தியைப் பிடித்துக்கொண்டு குதிரை மீதேறி, "நாமதேவனென்னும் தையற்காரனைப் பிடியுங்கள்," என்று கத்திக்கொண்டே அவர்களிருக்குமிடத்திற்குவந்தான். நாமதேவர், அந்த ஆப்கானியன் தம்மை அடிமைவேலை செய்யும்படி தொந்திரவு செய்ய எண்ணங்கொண்டிருக்கிறானென்று நினைத்துக்கொண்டு சாவதமாலியைத் தம்முடன் ஓடிவரும்படி சொல்லி, அதிவேகமாய் ஓட ஆரம்பித்தார். சாவதமாலி அவருக்குப் பின் 'எனக்குவயதானபடியால் ஓடமுடியவில்லை,' என்று கத்திக் கொண்டேவந்தார். நாமதேவரோ பாண்டுரங்கர் சந்நிதிக்குப் போகிறவரையில் ஓடுவதை நிறுத்தினாரில்லை. அங்கே சென்றதும் அவர் திரும்பிப்பார்க்க ஆப்கானியன் சாவதமாலியின் பக்கத்தில் நிற்பதைக்கண்டார். அவர்பகவானை நோக்கிச்சாவதமாலியைக்காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்தித்தார். பகவான் சிரித்து நாமதேவரை நோக்கி,'நாமதேவரே!இப்போது திரும்பிப்பாரும்,'என்றார்.நாமதேவர் கோயிலின்கதவினருகில் சென்று பார்க்கையில் சாவதமாலி மட்டில் வந்துகொண்டிருந்தார்.நாமதேவர், 'அந்தப் பயங்கரமான ஆப்கானியன் எங்கே?' என்று அவரைக்கேட்டார். இதைக்கேட்டுச் சாவதமாலி நகைத்து, "நீ இப்பரிசோதனையிலும் தவறிப்போனாய். கண்ணன்தான் அந்த ஆப்கானியனாக வேடம் பூண்டு வந்தார்," என்று சொன்னார். நாமதேவர் மிகவும் வெட்கமடைந்தவராய்க் கிருஷ்ணபிரானை நோக்கித் தம்மை இன்னுமொருதரம் பரிசோதனை செய்யவேண்டுமென்றும்,அவ்வாறு பரீட்சிக்கும்போது உலக மாதாவாகிய ருக்குமணி பிராட்டியையும் அவர் தம்முடன் அழைத்து வரவேண்டுமென்றும் கூறினார்.

கிருஷ்ணபிரானும் அதற்குச்சம்மதித்தார். அடுத்தமாதம் பௌர்ணமிகழித்ததும் ஏகாதசியன்று நாமதேவர் எருமைக் கடாகட்டிய ஒருவண்டியைக்கண்டார். அவ்வண்டியில் இரண்டு சிறிய குழந்தைகள் இருந்தன. வண்டியின் பக்கத்தில் கந்தையுடுத்திய ஓர் ஏழை மகம்மதியனும் கிழிந்த ஆடையுடுத்துத் தலைமேல் பானையொன்றைவைத்திருந்த விகாரயான ஒருமகம்மதியஸ்திரீயும் நடந்துவந்தனர். பண்டரிபுரத்தை நோக்கிப் போவதற்குப்பதிலாக அவ்வண்டி பண்டரிபுரத்திலிருந்து போய்க்கொண்டிருப்பதை நாமதேவர் கண்டு, அவர்கள் ஏன் பண்டரிபுரத்திலிருந்து திரும்பிவந்தார்களென்று அவர்களைக் கேட்டார். அம்மகம்மதியன் கோபித்து, "அதைப்பற்றி நீர் கேட்கவேண்டியது அநாவசியம்," என்றான் நாமதேவர் அந்த ஸ்திரீயைப்பார்த்து அதேகேள்வியைக் கேட்டார். அவள் பண்டரிபுரத்தைப்பற்றித் தனக்கு ஒன்றும் தெரியாதென்று சொன்னாள்.

அவள் வேண்டியதெல்லாம் நல்ல உணவே ஆகையால் இவ்வார்த்தைகளைக் கூறினதும் அவள் அங்கு ஓர் அடுப்பு மூட்டி அம்மனிதனை என்ன சூப்புவைத்தால் தனக்குப் பிடிக்குமென்று கேட்டாள். அவன் ஒரு கோழியைப் பொரிக்கும்படி சொன்னான். அவள் ஒரு கோழியைப் பானையிற் போட்டு இன்னும் அதிகமாமிசம் வேண்டுமென்றாள். மற்றொரு கோழியை அதில் போடும்படி அத்துருக்கன் கூறினான். அவள் அவ்வாறே செய்தும் பானை நிரம்பவில்லை யென்றாள். வண்டியில் பூட்டப்பட்டிருந்த எருமைக்கடாவை எடுத்து அதில் போடும்படி அவன் சொன்னான். அந்த நிமிஷமே அவள் கடாவையிழுத்துப் பானைக்குள் போட்டாள். அதைப் போட்டபிறகும் பானை நிரம்பவில்லை. மறுபடியும் அவள் அவ்வாறே முறையிட்டாள். பிறகு அங்குவந்திருந்த

நாமதேவரைப்பிடித்து அதற்குள் போடும்படி அம்மனிதன் பயமுறுத்தும் குரலுடன் கத்தவே, நாமதேவர் பயந்து தம் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளப் பாண்டுரங்கன் சந்நிதியை நோக்கி ஓடினர். அங்குப்போய் அவர் விம்மிவிம்மி அழுது கொண்டு மூச்சுத்தடுமாறி நடந்த விருத்தாந்தங்களைக் கண்ணனிடம் எடுத்துரைத்தார். இதைக்கேட்டு அவர் புன்னகை செய்து, " நாமதேவரே! நான் உம்மை மும்முறையும் பரிசோதித்தேன். நீர் மூன்று தடவையும் தவறிவிட்டீர் நான் தான் அந்த ஏழைத் துருக்கனுகவந்தேன். ருக்குமணிதான் அந்தப் பிச்சைக்காரி. நீர் இப்போது அவுண்டியா நாகநாதத்திற்குச் சென்று, விசோபாகேசரை உம்முடைய குருவாகக் கொள்ளும்," என்று சொன்னுர்.

நாமதேவர் கடைசியில் பகவான் கூறியது உண்மையென உணர்ந்து விசோபாகேசரைக்காணுமாறு அவுண்டியா நாகநாதத்திற்குச் சென்றுர். அவர் கோயிலுக்குட் போனதும், விசோபாகேசர் தம்முடைய பாதங்களைச் சிவலிங்கத்தின்மேல் வைத்துப் படுத்துக்கொண் டிருக்கக் கண்டார். உடனே நாமதேவர் மிகவும் கோபங் கொண்டவராய் அவரைப் பார்த்து, "நீர் சிறந்த பக்தரென்று சொல்லிக் கொள்ளுகிறீர், உமது பாதங்களைச்சிவன் வடிவமாகிய அந்த லிங்கத்தின்மேல்வைக்கலாமா? இதனுலேயே உமதுபக்திஇன்னதென விளங்குகிறது!" என்றுர். விசோபாகேசர் தாழ்ந்தகுரலுடன், "நீர் சொல்லுவது உண்மையே: நான் செய்தது குற்றந் தான். நீர் தயவுசெய்து என்பாதங்களை எடுத்து வேறிடத்தில் வையும். நான் அசௌக்கியமாயிருப்பதால் பாதங்களை எடுக்க அசக்தனுயிருக்கிறேன்," என்றுர். இதைக் கேட்டு நாமதேவர் விசோபாகேசருடைய பாதங்களை அந்த லிங்கத்தின்மேலிருந்து தூக்கினுர். பிறகு அவர் அவைகளை எங்கே

வைக்கப் போனாலும் அங்கு ஒரு சிவலிங்கமிருக்கக் கண்டார். கடைசியில் விசோபாகேசர், "என்கால்களை விட்டுவிடும். கால் வலிக்கின்றமையால் அவைகளைக் கீழே வைத்து விடும்," என்று கூறினர். நாமதேவர் பலவாறு முயன்றும் பயன்படவில்லை. அவர் விசோபாகேசருடைய பக்தியையும் தவத்தின் மகிமையையும் கண்டு, அவரைத்தம் குருவாயிருக்கும்படி வேண்டிக் கொண்டார். விசோபாகேசரும் அதற்குச் சம்மதிக்க, நாமதேவர் அநேக மாதங்கள் வரையில் அவுண்டியா நாகநாதத்தில் தங்கி இருந்து குருவால் உபதேசிக்கப்பட்ட பல ஞானங்களையு முணர்ந்தார். விசோபாகேசர் தமக்குத் தெரிந்தவரையில் நாமதேவருக்குப் போதித்தவுடன் அவரைப் பண்டரி புரத்திற்குப் போகும்படி ஆக்ஞாபித்தார்.

வருடத்தின் கடைசிமாத முதலில் அநேகயாத்திரிகர்கள் பீமாநதிக்கரையில் போஜனம் செய்துகொண் டிருந்தார்கள். அப்பொழுது ஒரு கறுப்பு நாய் அங்குவந்து, அவர்களிடமிருந்து கொஞ்சம் உணவைக் களவ முயன்று, அவர்கள் இலையினின்றும் கொஞ்சம் ஆகாரத்தை எடுத்துக்கொண்டோடிற்று. அது சிலர் முதுகையும் நக்கிற்று. யாத்திரிகர்கள் யாவரும் அந்த நாயைப்பார்த்துக் கூச்சலிட்டு, அதைப் பண்டரி புரத்தினின்றும் அடித்துத் துரத்திவிட வேண்டுமென்று உறுதி செய்தனர். அந்நாய் அங்கிருந்து நாமதேவர் சாப்பிட்டுக்கொண் டிருந்த இடத்திற்குச் சென்று, திடீரென்று அவர் கையிலிருந்த அடையைப் பற்றிக் கொண்டு ஓடிவிட்டது. அதைப்பற்றி நாமதேவர் சிறிதும் கவலைகொண்டாரில்லை. அவர், கையில்வெண்ணெயை எடுத்துக் கொண்டு அதன் பின்னே ஓடிப்போய், " நீ வெறும் அடையை ஏன் தின்னவேண்டும்?" என்று சொல்லி, அதைப் பிடித்து, அதன் பக்கத்தி லுட்கார்ந்து தட்டிக் கொடுத்து,

அடையை வெண்ணெயில் தோய்த்து ஊட்ட ஆரம்பித்தனர். இதைக்கண்டு யாத்திரிகர்கள் நகைத்து, "நாமதேவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. இல்லாவிடில் அவர் நாயைத் தம்முடன் வைத்து உண்பாரா? சுத்தமானவர்களிடத்திலும், அசுத்தமானவர்களிடத்திலும் பேதம் பாராட்டாத சூரியன்போலானுர் அவர்," என்று கூறினர். அந்த நாய் சிரித்து மனிதக் குரலுடன், "நாமதேவரே! நீர் என்னை இப்போது எவ்வாறு அறிந்தீர்?" என்று கேட்டது. நாமதேவர், "கிருஷ்ண மூர்த்தியே! நான் விசோபா கேசரிடம் சென்று ஞானோபதேசம் பெற்று வந்ததால் உம்மை அறிந்தேன்," என்று சொன்னுர். உடனே அந்த நாய் கிருஷ்ண பகவானுக மாறி மறைந்து போயிற்று.

77414

## 44. முற்கலபட்டர்.

ஓரூரில் முற்கலரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் வேத சாஸ்திர புராணங்களை நன்கறிந்தவர். அவர் அகங்காரம் சிறிதுமின்றி, விசேஷ பண்டிதர்கள் வியாஜ்ய வாதம் செய்யாமல் அன்புடன் வரவேற்றுப்பொறுமையுடனிருந்து ஸ்ரீ ராம பூஜையைச் செய்து வருவார். அவர் ஸ்ரீராம நவமியில் பத்துநாள் உற்சவம் மிகவும் சிறப்பாக நடத்திவருவார். ஜனங்கள் யாவரும் அவர் நல்லொழுக்கத்தைக் கண்டு திரவிய சகாயம் செய்ய முன்வந்தனர்.

இப்படி நடந்து வருகையில் ஒரு நாள் முற்கலர் குடும்ப சஹிதராய் யாத்திரை செய்யத் தொடங்கினுர். அவர் தம்முடன் எருதுகளையும் குதிரைகளையும் மனிதர்களையும் அழைத்துக்கொண்டு சென்றுர். அவர் காசிக்குச் சென்று விஸ்வேஸ்வரரைத் தரிசித்து, அதற்கருகிலுள்ள பல திவ்விய க்ஷேத்திரங்களையும் கண்டு களித்து, ஸ்ரீராம நவமி உற்

சவத்தை நடத்துமாறு வீடு திரும்பினர். அவரது வருகையைக் கண்ட ஜனங்கள் அவரைப் புகழ்ந்து, திரண்ட திரவிய சகாயம் செய்தனர். அவர் இராமோற்சவத்திற்குத் திரண்ட ஐஸ்வரியம் கிடைத்ததென்றெண்ணி அதிக சந்தோஷத்துடன் பஜனை செய்துகொண்டு சென்றார்.

பக்தர் அதிக திரவியத்துடன் திரும்புகிறாரென்பதையறிந்த சில திருடர்கள், அத்தனத்தை அபகரிக்க எண்ணங்கொண்டு, அவரைப் பின்தொடர்ந்து எப்போது சமயம் வாய்க்குமென எதிர்ப்பார்த்திருந்தனர். முற்கலர் அத்திருடர்களைக் கவனியாது, ஸ்ரீ ராமனைத் தியானம் செய்துகொண்டு போனார். நான்கு சேவகர்கள் முற்கலர் பின்நடந்து செல்வதை அத்திருடர்கள் கண்டார்கள். அவர்கள் கொள்ளையடிக்கச்சமயம்வாய்க்காமல் அச்சேவகர்களைநோக்கி, 'நீங்கள் யார்?' என்று கேட்டார்கள். சேவகர்கள், "நாங்கள் அயோத்தியிலிருந்து வந்து இவருடைய சேவகத்திலமர்ந்தோம்," என்று பதிலளித்து, முற்கலருடைய கண்ணிற்படாமல் அவர் பின்னே சென்றனர். முற்கலர் தம்முடைய வீட்டையடைந்ததும் அச்சேவகர்கள் மறைந்து போயினர். அத்திருடர்கள் பக்தர் வீட்டிற்குச் சென்று, "உம்முடன்வந்த சேவகர்கள் எங்கே?" என்று கேட்க, அவர், "சேவகர் ஒருவரும் என்னுடைய ஊழியத்திலில்லை," என்று சொன்னார். திருடர்கள் அவரை நோக்கி, "ஐயா! உம் பின்னால் நான்கு சேவகர்கள் வந்தார்கள். அவர்கள் அயோத்தியினின்று வந்து, உம்முடைய சேவகத்தில் அமர்ந்ததாகக் கூறினார்கள். நாங்கள் உம்முடைய திரவியத்தைத் திருட உத்தேசித்து உம்பின்னால் வந்தோம். அவர்கள் உம்முடனிருந்ததால் எங்களுக்குச் சமயம்வாய்க்கவில்லை," என்றார்கள். பக்தர் அதிக விசனமுற்று, "சேவகர்

களாகவந்தவர்கள், இராமர், இலட்சுமணர், பரதர், சத்துருக்கனராவரன்றே? அவர்கள் உங்களுக்குத் தரிசனம் கொடுத்தார்கள். நீங்கள் புண்ணியபுருடர்கள்,” என்று கூறி, அவர்களுக்கு நமஸ்காரஞ்செய்தார். அவர்களும் அன்று முதல் திருடுவதைவிட்டு ஹரி தாசர்களானர்கள்.

முற்கலர் பூஜா கிருகத்திற்குட்சென்று, இராம மூர்த்தியைத்துதிசெய்து, “சீதாரமணு! தசரதபுத்திரா! ஜானகிமணுளா! நீர் வில்லம்புகளைக் கையிலேந்தித் திருடர்களுக்குத் தரிசனம் கொடுத்தீர். என்கண்களுக்குமுன் புலப்படாமற் போனீர், நான் என்ன கொடியபாவம் செய்தேன்?” என்று பலவாறு தோத்திரம் செய்து, நூறு சுலோகங்களைச் சொல்லி நின்றிருந்தார். அவைகளின் மதுர ரசத்தால் மனமகிழ்ந்த ஸ்ரீராமபிரான், லக்ஷ்மணர் பரதர் சத்ருக்னர் முதலானோர் சூழத் தரிசனந்தந்து மறைந்தார். முற்கலர் பரமானந்தமடைந்திருந்தனர். சிலநாட்கள் சென்றதும் ஸ்ரீராமநவமி உற்சவம் நடத்தும்படி நேரிட்டது. உற்சவம் நடந்தபோது ஒருநாள் விளக்கெரிய எண்ணெய் இல்லாமலிருந்தது. அவ்வூர் அரசன் நடு இரவில் வீதிகளில் ஜனங்கள் திரியக்கூடாதென்று கட்டளையிட்டிருந்தான். முற்கலர் எண்ணெய் இல்லாமல் சங்கடப்பட்டுக்கொண்டிருந்தார். ஸ்ரீராமபிரான் முற்கலருடைய சேவகனைப்போல் வேடம் பூண்டு, ஒரு கோமுட்டியினுடைய கடைக்குச் சென்று, இரண்டு இராம முத்திரைகளைக் கொடுத்து, ஒரு பானை எண்ணெயை வாங்கிக்கொண்டுவந்தார். இரவு முழுவதும் விளக்குகளெரிய ஹரிபஜனை குறைவின்றி நடந்தேறியது. மறுநாட்காலையில் கோமுட்டி இராமமுத்திரைகளைக்கொண்டு வந்து முற்கலரிடம் கொடுத்து, “நேற்றிரவு உங்கள் சீடன் இவைகளைக் கொடுத்து எண்ணெய் வாங்கிக்கொண்டு வந்

தான். இவைகளை நீரே எடுத்துக்கொண்டு எனக்கு அதன் விலையைக் கொடுங்கள்," என்றான். முற்கலர் தன் சிஷ்யர்களை யழைத்துக் கேட்க, அவர்கள் ஒருவரும் வாங்கி வரவில்லை யென்று கூறினர்கள். முற்கலர் ஸ்ரீராமபிரான் செய்கையே யது வெனக்கருதிக் கோமுட்டிச்குப் பணங்கொடுத் தனுப்பி இராமமுத்திரைகளைப் பகவான் திருவடிகளில் வைத்துப் பூஜை செய்து இனிது வாழ்ந்திருந்தார்.

---

## 45. பரிசவேதி பகவத்.

பகவத் என்னும் பிராமணரொருவர் ருக்குமணியின் விக்கிரகத்திற்குச் சதாகாலம் அபிஷேகம் பூசை முதலியன செய்து, அம்மணியின் கடாக்ஷம் பெற்றார்.

ஒருநாள் ருக்குமணி அவர் பக்திக்கு மெச்சி, அவர் முன் பிரசன்னமாகி, வேண்டிய வரத்தைக் கேட்கும்படி சொன்னாள். பகவத் அம்மணியை நோக்கி, "உங்களை எப்போதும் நான் சிந்தனை செய்யுமாறு எனக்கு வரந்தரவேண்டும்," என்று கேட்டார். ருக்குமணி அவரிடம் ஒரு பரிச வேதியைக் கொடுத்து, "நீ இதனால் எந்த இரும்பைத் தொட்டாலும் அது உடனே தங்கமாக மாறும். இதை வைத்திருக்கிற வரையில் என்னை மறக்கமாட்டாய்," என்றாள். பகவத் ருக்குமணி தேவியை வணங்கி, பரிசவேதியை எடுத்துக்கொண்டுபோய்த் தம் மனையாளான சமாஜ்ஜாவிடம் கொடுத்துப் பத்திரமாய் வைத்திருக்கும்படி சொன்னார். பிறகு அவர் ஓர் இரும்புத்துண்டைக் கொண்டுவந்து அதை அந்தப்பரிச வேதியால் தொட்ட மாத்திரத்தில் அது தங்கமாயிற்று. தம்பதிகளிருவரும் ருக்குமணி தேவியைப் பஜித்து, "ஏழைகளின்மீது இரக்கம் வைத்துக் கடாக்ஷிப்பதில் உம்

மைப்போல் ஒரு தெய்வமுமில்லை. ஏழையாயிருந்த எங்களை மிகவும் தனவந்தர்களாக்கினீர்கள்,'' என்று கூறினர்.

அவர்கள் ருக்குமணி தேவியைத் துதி செய்து முடிந்ததும், பகவத் தம் மனைவியைப் பார்த்து, "நீ இதைப் பற்றி ஒருவரிடமும் ஒன்றுஞ் சொல்லாதே. மற்றப் பக்தர்கள் இதைப்பற்றிக் கேள்விப்பட்டால் என்ன ஏளனஞ் செய்வார்கள்,'' என்று சொன்னர். அதற்குக் கமால்ஜாவும் சம்மதித்தனள்.

அவர்கள் தம் வீட்டிற்குள்ளே சிறந்த உணவருந்தி, மிகுந்த ஐஸ்வரியத்தைச் சேகரித்து வைத்திருந்தபோதிலும் வெளிக்கு மிகவும் ஏழைகளாகவே காணப்பட்டார்கள். ஒரு நாள் கமால்ஜா ஜலம் கொண்டுவரப் பீமா நதிக்குச் சென்றாள். அவள் திரும்பி வருகையில் நாமதேவருடைய மனைவியான இராஜாயியைக் கண்டாள். இராஜாயி அவளைப்பார்த்து, "அம்மா! நீ கொஞ்சநேரம் இங்குக் காத்திரு. நான் போய் ஜலம் கொண்டு வந்தபின் இருவரும் சேர்ந்து போகலாம்,'' என்றாள். கமால்ஜா அவள் வருகிறவரையில் காத்துக்கொண்டிருந்தாள். அவர்கள் திரும்பி வருகையில் இராஜாயி கமால்ஜாவிடம் தன் வீட்டில் நடப்பதைக் கூறினாள்: "என் புருஷர் மானமென்பதே சிறிதுமில்லாமலிருக்கிறார். என்னைக் கந்தையுடுத்து வெளியே போகும்படி சொல்லுகிறார். மற்றவர்கள் தம்மைக் கௌரவப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் அவருக்குச் சிறிதுமில்லை. அவர் வேலை செய்வதுமில்லை. நாள் முழுவதும் துதிசெய்வதிலும் கீர்த்தனைகள் பாடுவதிலும் காலங்கழிக்கிறார். நானும் என் மக்களும் பட்டினியாகச் சாகிறோம்,'' என்றாள். கமால்ஜா இதைக்கேட்டு, "நாமதேவருடைய கடவுளைப் பூஜிப்பது வீணேயொழிய ஒருவிதப் பலனுமில்லை.ஒரு மரம் பூப்பூத்துக் காய் காய்க்கா

விட்டால் அதற்குத் தண்ணீர் ஊற்றுவதால் என்னபலன்? தண்ணீர் சுரக்காத கிணற்றை ஆழ வெட்டுவதால் வேலைக் கழிவேதவிரப் பலனொன்றுமில்லை. என் புருஷர் ருக்குமணி தேவியைப் பூஜித்து வந்தமையால் அந்த அம்மணி ஒரு பரிச வேதியைக் கொடுத்தாள். அதனால் எந்த இரும்பைத் தொட்டாலும் அது பொன்னாக மாறிவிடுகிறது. நாங்கள் இப்படிச் செய்து வீட்டில்திரண்டபொன் வைத்திருக்கிறோம்," என்று சொன்னாள். இராஜாயி அவளை நோக்கிப் பரிசவேதியென்றாலென்னவென்று கேட்டாள். கமால்ஜா, "என் வீட்டிற்குவா. நான் அதைக் காண்பிக்கிறேன்," என்று கூறி, இராஜாயியைத் தன்னுடன் அழைத்துச் சென்றாள்.

அவர்கள் வீட்டிற்குப்போனதும் கமால்ஜா இராஜாயிக்குப் பரிசவேதியைக் காண்பித்து அதைஅவள் வீட்டிற்கெடுத்துக் கொண்டுபோகும்படி சொல்லி, "உன் வீட்டிலிருக்கும் இரும்புகளையெல்லாம் தங்கமாக்கிக்கொண்டு இதை என்னிடம் திருப்பிக்கொடுத்துவிடு. ஆனால் இவ்விஷயத்தைப் பற்றி உன் புருஷரிடமாவது என் புருஷரிடமாவது ஒன்றுஞ் சொல்லாதே," என்று கூறினாள். இராஜாயி பரிச வேதியைத் தன் வீட்டிற்குக் கொண்டுபோய், கத்தரிக்கோல், ஊசி முதலான இரும்புகளைத் தங்கமாகமாற்றி, கிராமத்திற்குச் சென்று தனக்கு வேண்டிய ஆடை ஆபரணங்களையும் உயர்ந்த ஆகாராதிகளையும் வாங்கிக்கொண்டு வீட்டிற்குத் திரும்பிவந்து அதிக சந்தோஷம் கொண்டிருந்தாள். நாமதேவர் பகல் சாப்பாட்டிற்கு வீட்டிற்கு வந்தவுடன் அவ்வளவு சிறந்த உணவைத் தயாரிக்க அவளுக்குப் பணமெங்கிருந்து கிடைத்தது என்று கேட்டார். இராஜாயி புருஷரிடம், "நீர் அதைப்பற்றி ஏன் கேட்கிறீர்? இவ்வுலக விஷயங்களைத்தான் நீர் எப்போதும் கவனிக்கிறதில்லை

யென்று சொல்லுகிறீரே !" என்று பதிலுரைத்தாள். நாம தேவர், உண்மையைச் சொன்னாலன்றி உணவருந்தமாட்டே னென்றார். பிறகு இராஜாயி, "ருக்குமணி தேவி பகவதிடம் கொடுத்த பரிசவேதிக்கல்லைக் கமால்ஜா என்னிடம் கொடுத் தாள். நீங்கள் ஏன் ருக்குமணி தேவியைத் தொழக்கூடாது ? ஒருவருக்கும் ஒன்றும் கொடுக்காத கிருஷ்ணனை நீர் வீணில் ஏன் துதிசெய்ய வேண்டும்?" என்று கேட்டாள். நாமதேவர், "அந்தப் பரிசவேதியை எனக்குக் காண்பி," என்று கூறினார். இராஜாயி தன்னறைக்குச் சென்று அதைக்கொண்டு வந்தாள். நாமதேவர் அதைக்கண்டதும் அவளிடமிருந்து பிடுங்கிப் பீமாநதிக்கரைக்கு விரைந்தோடிச் சென்று அதை ஜலத்தில் எறிந்துவிட்டார். பிறகு அவர் பீமாநதிக்கரையில் உட்கார்ந்து கண்ணனைத் தியானித்துக் கொண்டிருந்தார். இராஜாயி வீட்டிலுட்கார்ந்து அழுதுகொண் டிருந்தாள். அப்போது பகவத், வீட்டிற்குவந்து பரிசவேதிக்கல்லைத் தேடிப்பார்க்க அதைக்காணவில்லை. அவர் மிகுந்த கோபங் கொண்டு தம்மனைவியைப்பார்த்து, "அதைநீ எவ்விடம்வைத் தாய்? என் விலையுயர்ந்த பொருளை ஒழித்துவிட்டாயே!" என்று கூவினார். கமால்ஜா தன்நாதரைப் பார்த்து, "நாதா! நான் அதைத் தொலைத்து விடவில்லை. இராஜாயி மிகவும் ஏழை யாயிருந்தமையால் நான் அவள்மீது இரக்கங் கொண்டு அதை அவளிடம் கொடுத்தேன். அவளும் அதை இப்போது திருப் பிக் கொண்டுவருவாள்", என்று சொன்னாள். பகவத் அதிக கோபமும் பயமும் கொண்டவராய், "அதைப்பற்றி ஒருவரி டமும் சொல்ல வேண்டாமென்று சொன்னேனே! நீ போய் அதைச்சீக்கிரம் வாங்கிவா," என்றார். கமால்ஜா இராஜாயி வீட்டிற்குச்சென்று தன்பரிசவேதியைக் கேட்டாள். இரா ஜாயி, "நான் என்ன செய்யப் போகிறேன்! என்புருடர்

வீட்டிற்கு வந்தபோது அதை என்னிடமிருந்து வாங்கிக் கொண்டார். அவர் ஆற்றில் ஸ்நாநம் செய்து திரும்புகையில் அதை அவசியம் கொண்டு வருவார்,'' என்று சொன்னாள். கமால்ஜா பகவதைப் போலவே அதிக பயமும் விசனமு முற்றவளாய்ப் பரிசவேதியைச் சீக்கிரம் கொண்டுவந்து தரும்படி கேட்டாள். இராஜாயி ஆற்றங்கரைக்குச்சென்று, நாமதேவர் கண்களை மூடி உட்கார்ந்து ராம நாமங்களை உச்சரித்துத் துதிசெய்திருப்பதைக் கண்டாள். அவள், "நாதா! பரிசவேதியை எவ்விடம் வைத்திருக்கிறீர்கள்? கமால்ஜா வந்து அதைக் கேட்கிறாள். நான் அதை அவளி டம் திருப்பிக் கொடுத்து விடவேண்டும்,'' என்று கூறினாள். நாமதேவர், "நான் அதை ஜலத்தில் எறிந்துவிட்டேன்,'' என்று பதிலுரைத்தார். அச்சமையம் கமால்ஜா அங்குவந்து அவர் சொன்னபதிலைக் கேட்டிருந்தாள். அவள் மார்பிலடித் துக்கொண்டு வீட்டிற்குச் சென்று நாமதேவர் தன்னைத்து ரோகம் செய்ததாக எல்லோரிடமும் கூறினாள். இந்தச் சமாசாரம் பகவத் செவிக்கெட்டியது. அவரும் மார்பிலடித் துக்கொண்டு, நாமதேவர் உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்து தம்முடைய பரிசவேதிக்கல்லை அவர் திருடிக்கொண்டு வந்ததாகக் குற்றஞ்சாட்டினார். நாமதேவர் அவரைக்கண்டு, "நான் அதைஆற்றில் எறிந்துவிட்டேன். நீர்பக்தரானமையால் பொன்னை ஒரு பொருட்டாக மதிக்கமாட்டீரென்றும், உமக் குப் பொன் வேண்டியதில்லை யென்றும் எண்ணிக் கொண் டேன். நீர் என்னை நம்பாவிடில் இப்போது உமது பரிசவேதி யைக் கொண்டுவந்து தருகிறேன்,'' என்றார். உடனே அவர் ஆற்றில்முழுகிக் கைநிறையப்பரிசவேதிகளைக்கொண்டுவந்து, "இவைகளில் உம்முடைய பரிசவேதிஎது?'' என்றுகேட்டார். பகவத் தம்முடைய பரிசவேதி இதுதான் என்று சொல்ல

முடியாமல் விழிக்க, அங்குவந்து கூடிய ஜனங்கள் அவர்களி ருவரையும் பார்த்து நகைத்து, "இவ்விருவரும் பரிசவேதிக் காசைப்பட்ட நல்லபக்தர்கள்!" என்று கூறினார்கள். பகவத் அவர்கள் கூறியதைச்சற்றும் கவனித்தாரில்லை. பகவத், நாமதேவர் செய்த மாய்கையைக்கண்டு ஆச்சரியமுற்று, அவர் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தார். பகவத், " நான் இப்போது என் தப்பிதத்தை உணர்ந்தேன். பரிசவேதியின்மீ தாசை வைத்து என் வாழ்நாளை வீணாக்கப் பார்த்தேன். எனக்கு அதுவேண்டியதில்லை. அதற்குப்பதிலாகத் தங்களுடைய ஆசிர்வாதம் கிடைத்தால் போதுமானது," என்று சொன்னார்.

---

## 46 மண்டலீகன்.

முன்னொரு காலத்தில் ஹிந்துஸ்தான் தேசத்தில் மண்டலீகனென்னும் ஓர் அரசன் ராஜ்ஜிய பரிபாலனம் செய்து வந்தான். அவனுடைய மனைவி விஷ்ணு பக்தியிற் சிறந்தவளாய்ப் பெருமாள் பூஜையை மிகவும் அன்புடன் செய்து வந்தாள். அவள் ஏகாதசி விரதத்தை மிகவும் பிரீதியுடன் அநுஷ்டித்து, ஸ்ரீராமஜயந்தி, ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி தினங்களில் விசேஷ உற்சவங்களைச் செய்து வருவாள். அவள் சாதுக்களை வரவேற்று, பூஜைசெய்து அன்னமிட்டுச் சதாகாலங்களிலும் சாதுசேவை செய்து வருவாள். அவளுடைய புருஷனான மண்டலீகன் உலகத்தார் காணாதபடி ஸ்ரீஹரி பூஜையும் நாம ஜெபங்களும் செய்துவருவான். அக்காரணத்தால் உலகத்தார் அனைவரும் அரசன் பக்தியில்லாதவனென்றும், அரசன் மனைவி விஷ்ணு பக்தியிற்

கண்ணப்பா! நீ நமது வலப்பக்கத்திலே என்றும் நின்றிருப்பாயாக,'' என்று திருவாய்மலர்ந்தருளினர். திண்ணனர், ஆறு நாட்களுக்குள்ளாக அன்பு மேலீட்டினுல் அருந்தவஞ் செய்யும் யோகிகளும் பெறுதற்கரிய பேறும் பேற்றைப் பெற்றார்.

## 8. திருநாவுக்கரசு நாயனர் சரித்திரம்.

திருவாமூரில் புகழனர் என்னும் வேளாளர் ஒருவர் இருந்தார். அவர், தம் மனேவியாரான மாதினியார் என்பவருடன் இருந்து இல்லறத்தை இனிது நடத்தி வரும் நாளில் திலகவதியார் என்னும் பெண்மணியையும், மருணீக்கியார் என்னும் புத்திரரையும் பெற்றெடுத்தார். மருணீக்கியார் பலகலைகளையும் கிரமமாகக் கற்று வல்லவராயினர். திலகவதியாருக்குப் பன்னிரண்டு வயதானபோது, புகழனர், அவ்வம்மையைக் கலிப்பகையார் என்பவருக்கு விவாகம் செய்து கொடுத்தார். கலிப்பகையார் இராஜாவிடம் சேனதிபதியாயிருந்தார். அவர் வடதேசத்திற்குப் படையெடுத்துப்போயிருக்கையில் புகழனர் தேகவியோகமடைய, அவர் மனேவியார் மாதினியாரும் உடனே இறந்தார். திலகவதியாரும் மருணீக்கியாரும் அதிக கவலேகொண்டு சுற்றத்தார்களால் ஒருவாறு தேறிச் செய்யவேண்டிய அந்தியகருமங்களைச்செய்து முடித்தனர்.

சில நாட்களுக்குப் பிறகு, கலிப்பகையார் யுத்தத்தில் இறந்தார். இந்தச் செய்தியைக் கேட்ட திலகவதியார், அவருக்குப் பின்னர் உயிர்தரிக்க மனமில்லாதவராய் உடன் கட்டையேறத் தீர்மானித்தார். மருணீக்கியார், தம் சகோதரியின் காலில் வீழ்ந்து, ''நான் நம் தந்தைதாய் இறந்த பின்னர்

உம்மையே மாதாபிதாவென எண்ணியிருக்கிறேன். நீர் இறக்கத் துணிவீராயின் உமக்கு முன்னமே நான் இறந்து விடுவேன்,'' என்றார். திலகவதியார், தம்பியார் உயிருடனிருக்கவேண்டுமென்ற ஆசையால், உயிருடனிருக்கத் தீர்மானித்தார்.

மருணீக்கியார், பிரபஞ்ச வாழ்வினது அநித்தியத்தையறிந்து, இல்லறத்தி லீடுபடாமல் பாடலிபுரம் என்னும் நகரத்திற்குச் சென்று, பல தர்மகைங்கரியங்களைச் செய்து வந்தார்; அங்கே சமணர்களுடைய போதனைசக்தியால் சமண மதமே முத்தியடைவதற்கேதுவானதென்றுணர்ந்து சமணரானார்; அச்சமயத்தின் நூல்களைக் கற்றுத் தெளிவடைந்து தமது சாமர்த்தியத்தினால் சமணர்களுக்குட் சிரேஷ்டராக விளங்கினார்.

திருவாமூரில் திலகவதியார், சிவபெருமானிடத்தில் அதிக அன்பு கொண்டு, திருவீரட்டானம் என்னும் திருப்பதியை யடைந்து, பரமசிவனை வணங்கித் திருத்தொண்டு செய்து வந்தார். இவ்வாறு நடந்து வருகையில், தமது தம்பியார் சமணமதத்தில் பிரவேசித்ததைக் குறித்து மனங்கலங்கி, "பரமசிவமே! என் தம்பியைச் சமணமதத்தினின்றும் தப்புவிக்கும் மார்க்கமில்லையோ?'' என்று கதறி அழுதார். சிவபிரான் திலகவதியாரின் கனவில் தோன்றி, "அம்மணி! உன் கவலையை ஒழி; உன் தம்பி முன் ஜன்மத்தில் செய்த தவத்தால் நம்மையே யடைவன்! அவனைச் சூலைநோயால் வருத்தி ஆட்கொள்வோம்,'' என்று கூறி மறைந்தருளினார்.

சிவபிரான் கூறியபடியே மருணீக்கியாருக்குச் சூலைநோயுண்டாயிற்று. அதைக்கண்ட சமணர்கள் பலவித சிகிச்சைகள் செய்தும் குணப்படவில்லை. சமணர்கள், நோய் தீரா

தது கண்டு கவலையுற்று அவரைக் கைவிட்டார்கள். மருணீக்கியார், தமது சகோதரியாராகிய திலகவதியாரை நினைத்து, அவரே நம் நோயைத் தீர்க்கத் தகுந்தவரெனக் கருதித் திருவாமூருக்கு வந்து, திலகவதியாரின்காலில் வீழ்ந்து வணங்கினார். திலகவதியார், தம்பியை எழுப்பி, உபசரித்துச் சமண மதத்தை விட்டுச் சைவமதத்தில் பிரவேசிக்கும்படி கூறி விபூதி கொடுக்க, அதை மருணீக்கியார் தரித்துத் தம் சகோதரியாருடன் சிவாலயத்திற்குச் சென்று, சிவபிரானை வணங்கினார். உடனே சூலை நோய் நீங்கிற்று. உடனே மருணீக்கியார், தாம் அறியாமற்செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டுமெனப் பரமனைப் பாடித்துதித்தார். அப்போது ஆகாயத்தினின்றும், 'நீ இன்று முதல் திருநாவுக்கரசு என அழைக்கப்படுவாய்' என்று ஓர் அசரீரிவாக்கெழுந்தது.

இந்தச் செய்தியைப் பாடலிபுரத்திலுள்ள சமணர்கள் கேள்வியுற்று, மாறுபட்ட பலமதங்களையும் வாதில் வென்று சமணமதத்தை நிலை நிறுத்திய மருணீக்கியார் மறுபடியும் சைவமதத்தில் பிரவேசித்ததற்காக வருந்தி, தமது மதத்தில் நீங்காத சூலைநோய் சைவமதத்தினரானவுடன் நீங்கினதேயென்று பொறாமை கொண்டனர். இவ்விஷயத்தை அரசன் உணர்ந்தால் அவனும் சைவமதத்தினனாவானெனக் கருதி, அரசனிடம் சென்று, "அரசே! மருணீக்கியார் நம் மதத்தினின்றும் தப்பித்துச் சைவமதத்தினராகும் பொருட்டுச் சூலைநோய் வந்ததென்று பொய்யுரைத்துப் போயினர்! அவரைநீர் தண்டிக்கவேண்டும்," என்று விண்ணப்பித்தனர். அவ்வரசன், தன் தூதர்களை விட்டுத் திருநாவுக்கரசு சுவாமிகளை அழைத்து வரச்செய்தான். திருநாவுக்கரசு சுவாமிகள், எம்பெருமானைத் தியானித்து, அரசன் முன்வந்து நின்றார். அரசன், அவரை நீற்றறையில் இடும்படி ஆக்ஞாபிக்கத்தூதர்

கள் அவரை நீற்றறையில் விட்டுக் கதவைச் சாத்தினார்கள். சிவபெருமானுடைய திருவருளினால் அவ்வறை சந்திரனும் தென்றலும் இளவேனிலும் பொய்கையும்போலக் குளிர்ந்திருந்தது.

ஏழுநாட்கள் சென்ற பிறகு அவ்வரசன் நீற்றறையைத் திறந்துபார்க்க நாயனார் யாதொரு தீங்கின்றி உள்ளிருந்தார். இதைக்கண்ட சமணர்கள் ஆச்சரியமுற்று, அரசனிடம், "இவன் நம் சமயத்தில் கற்றுக்கொண்ட மந்திர வலிமையினால் உயிருடன் இருந்தான்," என்று கூறி, அவருக்கு விஷங்கொடுத்துக் கொல்லும்படி வேண்டினர். அரசன், அவ்வாறு விஷம் கொடுத்தும் நாயனார் உயிருடன் இருந்தார். பிறகு அரசன், தன் யானையை விட்டு அவரை மிதிக்கும்படி செய்தான். அந்த யானையானது நாயனாரை வலம் வந்து, அவர் பாதங்களில் நமஸ்கரித்துச் சமணர்களை யெல்லாம் துதிக்கையால் பிடித்துத் தரையில் மோதிக் கொன்றது. இவைகளைக் கண்ணுற்ற சமணர்கள் அரசனிடஞ் சென்று, "அரசே! இவன் மந்திர வலிமையால் தப்பித்துக் கொள்ளுகிறான். இவனைப் பாறையுடன் கட்டிக் கடலில் தள்ளிவிட வேண்டும்." என்றனர். அரசன் அதற்குட்படச் சமணர்கள் நாயனாரைக் கடலில் தள்ளி விட்டார்கள்.

கடலில் தள்ளப்பட்ட நாயனார், பரமசிவன் மீது ஒரு பதிகம்பாட அக்கல்லானது மிதந்து, நாயனாரைத் தாங்கிக் கொண்டு, திருப்பாதிரிப்புலியூர் என்னும் சிவஸ்தலத்தின் அருகே கொண்டு வந்து சேர்த்தது. நாயனார், அங்கிருக்கும் கடவுளைத் தரிசித்துத் திருவதிகை வீரட்டானத்திற்குச் சென்றார். அந்நகரவாசிகள் அவரை வரவேற்று, உபசரித்தனர். நாயனார், வீரட்டானேசுரர்மேல் அநேக திருப்பதிகங்கள் பாடித் திருத்தொண்டு செய்து வந்தார். அப்போது

அவருக்குப் பல இடையூறுகள் செய்த அரசன் அங்கு வந்து நாயனரை வணங்கிச் சைவ சமயத்திலே பிரவேசித்தான்.

பிறகு நாயனர், பல சிவக்ஷேத்திரங்களைத் தரிசிக்க விருப்பமுடையவராய்ப் புறப்பட்டுத் திருவெண்ணெய்நல்லூர், திருவாமாத்தூர், திருக்கோயிலூர், சிதம்பரம் முதலான சிவக்ஷேத்திரங்களுக்குச் சென்றார். போகும் வழியில் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனரைக் கண்டு தரிசித்து, அவருடன் சில கோயில்களுக்குச் சென்றார். இருவரும் சேர்ந்து வேதாரணியம் என்னும் சிவதலத்தினருகே வந்தனர். அங்குக் கோயிலின் கதவு சாத்தப்பட்டிருந்தது. திருநாவுக்கரசு நாயனர், ஒரு திருப்பதிகம்பாட அக்கதவு திறந்து கொண்டது. இருவரும் சுவாமி தரிசனம்செய்து களிப்படைந்தனர். பிறகு திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் ஒரு திருப்பதிகம் பாட மறுபடியும் மூடிக்கொண்டது. இதைக்கண்ட அவ்வூர் வாசிகள் அதிக சந்தோஷங்கொண்டார்கள். திருஞான சம்பந்தர் மதுரைக்குப் புறப்படத் திருநாவுக்கரசு நாயனர் தனியே சென்றார்.

அவர் உத்தர கைலாயமென்று கூறப்படும் திருக்காளத்தி மலையைத் தரிசித்து, பிறகு கைலாசத்தில் வீற்றிருக்கும் பரமசிவனைக் காணவேண்டி வடபுறமாக யாத்திரைசெய்தார். போகும் வழியில் அவர் காசியை வணங்கிக்கொண்டு, இரு கரங்களையும் சிரத்தின்மேல் குவித்தவராய் இராப்பகல் விடாது நடந்தனர். அவருடைய பாதம் தேய்ந்து போய் விட்டது. அவர் மணிக்கட்டுகளெல்லாம் தளர்ந்து சிதைந்தன. நாயனர் அவைகளையும் கவனியாது பருக்கைக் கற்கள் நிறைந்த மார்க்கத்தில் மார்பினல் நகர்ந்து சென்றார். மார்பின் தசைகளும் தேய்ந்து எலும்புகளும் முறிந்து போயின. அவர் திருக்கைலாயத்தைக் காணவேண்டுமென்று

கொய்துகொண் டிருக்கும்போது அங்கு மலர்பறிக்க வந்திருந்த பார்வதியம்மையின் சேடியர்களாகிய அனிந்திதை கமலினி என்னும் இரு பெண்களைக் கண்டார். கண்டதும் அவர்கள்மீது காதல் கொண்டார். அவர்களும் சுந்தரரை இச்சித்தனர். பிறகு அவர்கள் மலர்பறித்துக்கொண்டு தத்தம் இடத்திற்குப் போயினர். இந்த நிகழ்ச்சியை யறிந்த சிவபெருமான் ஆலால சுந்தரரைப் பார்த்து, "நீ தட்சண தேசத்தில் மானிடனாய்ப் பிறந்து, நீ காதலித்த இரு பெண்களையும் மணந்து இன்புற்றுப் பின்பு இங்கு வரக்கடவாய்," என்றார். ஆலாலசுந்தரர் துக்கித்து, 'சுவாமி! தங்களைப் பிரிவதற்கு ஏதுவாகிய பாபத்தைச் செய்த நான் பிரபஞ்ச வாழ்க்கையில் மயங்கும்போது தேவரீர் என்னைத் தடுத்தாட்கொள்ள வேண்டும்,'' என்று வேண்டிக் கொண்டார்.

இது நிற்க. திருநாவலூரென்னும் திருப்பதியில் சடையனார் என்னும் பிராமணர், தம்முடைய மனைவியாராகிய இசைஞானியார் என்பவருடன் கூடி வாழ்ந்திருந்தார். சுந்தரர், அவர்களுக்குப் புத்திரராக அவதரித்தார். சுந்தரர், நாளொருமேனி பொழுதொரு வண்ணமாக வளர்ந்து விவாகத்துக்குரிய பருவத்தை யடைந்தார். அவரது பெற்றோர்கள், புத்தூரிலிருந்த சடங்க சிவாசாரியாருடைய புதல்வியை அவருக்கு மணம் பேசி முடித்தனர். சுந்தரர், மணக்கோலங்கொண்டு, குதிரை மீதேறி, மணமகள் வீட்டிற்குச் சென்றார். அப்பொழுது அவரைத் தடுத்தாட் கொள்வதாக ஒப்புக்கொண்ட பரம்பொருள், சுந்தரரைப் பிரபஞ்ச வாழ்க்கையில் மயங்கவிடாமல் தடுத்தாட்கொள்ளும்பொருட்டு ஒரு கிழப் பிராமணராக அங்குத் தோன்றினார். அவர், சுந்தரரிடம் சென்று, சுந்தரரைப் பார்த்து, "எனக்கும் உனக்கும் ஒருவழக்கிருக்கிறது. அதைத் தீர்த்துக்கொண்டு உன் விவாகத்தை முடி,'' என்றார். இதைக்கேட்ட சுந்தரரும் மற்றவர்

களும் அவ்வழக் கென்னவென்று கேட்க, அப்பிராமணர், "இந்தத் திருநாவலூரானகிய நம்பியாரூரன் எனக்கு அடிமை. அக்காலத்தில் உன்னுடைய பாட்டன் எனக்கு எழுதித் தந்த அடிமை ஓலை இதுவே," என்று கூறி, ஓர் ஓலையைக் காட்ட, சுந்தரமூர்த்தி நாயனர் அதைப் பிடுங்கிக் கிழித்தெறிந்தார். ஐயர், சுந்தரமூர்த்தி நாயனரைத் திருவெண்ணெய் நல்லூர் பிராமண சபைக்கு வந்து சமாதானம் கூறும்படி யழைக்க, அவர் ஐயரைப் பின்தொடர்ந்தார். இருவரும் திருவெண்ணெய் நல்லூரை அடைந்து, பிராமணர்களிடம் தம் வழக்கைக் கூறினர். அவர்கள், "பிராமணர்கள் அடிமை யாதலை இதுவரையில் கேட்டிலோம்," என்று கூற, ஐயர், பேரேடென்னும் மூலஓலையை எடுத்து அவர்களுக்குக் காட்டினர். அவ்வோலையிற் குறிப்பிட்டிருந்த கையெழுத்தைச் சாக்ஷிகள் யாவரும் தம்முடைய கையெழுத்தென்றே ஒப்புக்கொண்டனர். பின்பு நாயனர், ஒன்றும் சொல்ல முடியாமல் ஐயரைப் பின்பற்றிச் செல்ல, அப்பிராமணர், அவ்வூர்க் கோயிலுக்குள் நுழைந்து மறைந்தருளினர். உடனே சிவபிரான் அவருக்குப் பிரசன்னமாய், "முன்பு நீ எமது பக்தனயிருந்தாய்; ஆகையால் நாம் உனக்கு வாக்களித்தபடி இப்பொழுது உன்னைத் தடுத்தாட் கொண்டோம்," என்று கூறினர்.

சுந்தரமூர்த்தி நாயனர், அன்று முதல் திருப்பதிகங்கள் பாடிக் கொண்டும், சிவஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டும் வந்தார். அவ்வாறு திருவாலூர் என்னும் க்ஷேத்திரத்தையடைந்து, சுவாமி தரிசனம் செய்து, அங்கேயே தங்கி இருந்தார். திருக்கைலாயத்தில் பார்வதியின் சேடியாயிருந்த கமலினி என்பவள் பரவையார் என்னும் நாமத்துடன் அவ்வூரில் கணிகையர் குலத்தில் அவதரித்து, மங்கைப் பருவம் அடைந்து, தினந்தோறும் கோயிலுக்குச் சென்று, சுவாமி

தரிசனம் செய்து வந்தாள். ஒருநாள் சுந்தரமூர்த்தி நாயனார், அம்மாதைக் கோயிலில் கண்டு, அவள் மீது காதல் கொண்டார். அவளும் இவர் மீது காதல் கொண்டாள். அன்றிரவு இருவருடைய கனவிலும் கடவுள் தோன்றி ஒருவரையொருவர் மணஞ் செய்து கொள்ளும்படி கூற, மறுநாட் காலையில் இருவரும் சந்நிதானத்தின் முன்பாக மணந்தனர். பிறகு பரவையாருடன் கூடிச் சுந்தரமூர்த்தி நாயனார் இல்லறத்தை இனிது நடத்திச் சுகமாய் வாழ்ந்து வந்தார்.

சில நாட்கள் சென்ற பின்பு சுந்தரமூர்த்தி நாயனார் தொண்டை மண்டலத்திலுள்ள ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்ய விரும்பித் திருவாரூரை விட்டுப் புறப்பட்டனர். பல க்ஷேத்திரங்களையும் தரிசித்துக்கொண்டு, திருவொற்றியூருக்கு வந்து சேர்ந்தார். இதற்கு முன் திருக்கைலாய மலையில் சுந்தரமூர்த்தி நாயனார்மீது அளப்பருங் காதல் கொண்ட அனிந்திதையார் என்பவள் ஞாயிறு என்னுமூரில் வேளாளர் குலத்தில் அவதரித்துச் சங்கிலியார் என்னும் பெயரைப் பெற்றாள். அவளுக்குத் தக்கபருவம் வந்ததும், தனக்கிசைந்த மணமகன் ஒருவனும் கிடைக்காமையால் திருவொற்றியூருக்கு வந்து பரமனுக்குத் திருத்தொண்டு செய்து வந்தாள். ஒருநாள் சுந்தரமூர்த்தி நாயனார், அவளைக் கண்டு, காதல் கொண்டு பரமனிடம் விண்ணப்பித்தார். பரமன் அவ்வூர்ப்பக்தர்களுடைய கனவில்தோன்றிச் சங்கிலியாரைச் சுந்தரருக்கு விவாகம்செய்யும்படி ஆக்ஞாபித்து, இருவருடைய கனவிலும் தோன்றித் தம் கட்டளையைக் கூறினார். மறுநாட்காலையில் சங்கிலியார், சுந்தரரை நோக்கித் தன்னை விட்டுப் பிரிவதில்லையென மகிழமரத்தின்கீழ்ச் சபதம் செய்தால் தான் அவரை மணப்பதாகக் கூறினாள். சுந்தரர், அதற்கிசைந்து, அவ்வாறே செய்து, சங்கிலியாரை மணந்து, அங்கே வாழ்ந்திருந்தார்.

சிலகாலஞ்சென்றபின், சுந்தரர், திருவாரூருக்குப் போக விரும்பித் திருவொற்றியூரை விட்டு நீங்கினார். அவர் சபதந் தவறினமையால் அவருடைய இரண்டுகண்களும் பார்வையை இழந்தன. நாயனார் திகைத்துத் தம் குற்றத்தை யறிந்து, பரமனைப்பாடிக்கொண்டே வழிநடந்தார். போகும் வழியி லுள்ள ஸ்தலங்களிலெல்லாம் தமக்குக் கண் கொடுக்கும்படி சிவபெருமானை வேண்டினார். அவர் காஞ்சீபுரத்தை யடைந்த வுடன் சிவபிரான் அவருக்கு இடக்கண் பார்வையுண்டா கும்படி திருவருள் புரிந்தார். பிறகு நாயனார், பல ஸ்தலங் களைத் தரிசித்துத் திரு மூலட்டானம் என்ற ஊர் வந்ததும், வலக்கண்பார்வையையும் பெற்றார். உடனே நாயனார், அதிக சந்தோஷங்கொண்டு, திருவாரூரை யடைந்தார்.

திருவாரூரில் பரவையார், சுந்தரமூர்த்தி நாயனார் சங்கிலி யாரை மணந்ததைக் கேட்டு, அதிக கோபமும் வருத்தமும் கொண்டிருந்தாள். இதை யறிந்த சுந்தரர், பரமனிடம் விண்ணப்பிக்கப் பரமசிவன் பிராமண உருக்கொண்டு பரவை யார் வீட்டிற்குச் சென்று, அவள் ஊடலை நீக்க முயன்றார். பரவையார் அதற்கு உடன்படாமையால், சிவபிரான் தம் முடைய சுயரூபத்துடன் மற்றொருமுறை அங்குச் சென்று, பரவையாரைக் கண்டு, சுந்தரரை வரவேற்கும்படி வேண்ட, பரவையார் தன்னிடம் வந்தவர் சிவபெருமான் என்பதை யறிந்து, நடுநடுங்கி, அவரைத்தியானித்து, அவ்வாறே செய்வ தாக ஒப்புக்கொண்டாள். பிறகு பரவையார், சுந்தரரை வரவேற்று, அவருடன் சிலகாலம் சுகமாய் வாழ்ந்திருந்தாள். சிலகாலஞ் சென்றபின் சுந்தரரும், பரவையாரும், சங்கிலி யாரும் இவ்வுலகை விட்டு நீங்கி, முன்போலவே திருக்கை லாயத்தில் சிவபெருமானுக்குத் திருத்தொண்டரானார்கள்.

———:(o):———

# 10. திருநீலகண்ட நாயனார் சரித்திரம்.

சிதம்பரத்தில் திருநீலகண்டரென்னுந் திருநாமங் கொண்ட குயவர் ஒருவர் இருந்தார். அவர், சிவபக்தியுடையவராய்ச் சிவபக்தர்களுக்குத் திருவோடு கொடுத்துத் தம் குலத்துக் கேற்ப மட்பாத்திரங்களை விற்றுத் தம்முடைய மனைவியுடன் வாழ்ந்து வந்தார். ஒருநாள் அவர், ஒரு தாசியிடம் சென்று வீட்டுக்குத் திரும்பினார். இதை யறிந்த அவர் மனைவி, அதிக கோபங்கொண்டாளாயினும் கற்பிற் சிறந்தவளாதலால் கோபத்தை யடக்கிப் புருஷருக்கு வேண்டியபணிகளெல்லாம் செய்து, தேகசம்பந்தமின்றி யிருந்தாள். அவர் ஒருநாள் மனைவியைத் தீண்டும்படிநேர, அவள், "நீர் எம்மைத் தொடுவீராயின் திருநீலகண்டத்தின்மேல் ஆணை," என்றாள்.

பரமசிவனிடம் குன்றாப் பக்தியுடைய திருநீலகண்டர், அன்று முதல் தம் மனைவியைத் தீண்டாமலும், மனைவி "எம்மை" என்று பன்மையில் கூறியமையால் அவளை யொத்த வேறு பெண்களையும் தீண்டாமலும் வாழ்ந்து வந்தார். புருஷனும் மனைவியும் இல்லறத்திற்குரிய பிறசெய்கைகளெல்லாம் செய்து, தங்கள் மனத்துன்பத்தைப் பிறரறியாதபடி வாழ்ந்து வந்தனர். இளமைப் பருவத்தையுடைய இருவரும் இவ்வாணையை உறுதியாகக் கொண்டு, ஒருவித சம்பந்தமுமின்றி முதியோரானார்கள்.

இப்படி யிருக்கையில் ஒருநாள் சிவபெருமான், அவர்கள் மகிமையை உலகத்தாருக்கு அறிவிக்க வேண்டி, ஒரு சிவபக்தர் வேடம்பூண்டு, அவ்வடியார் வீட்டுக்கு வந்தார். பக்தர் அவரை வரவேற்று உபசரிக்கச் சிவபெருமான் தம் கையிலிருந்த திருவோட்டைக் கொடுத்து, "இதை வைத்தி

ருந்து, நான் கேட்கும்போது தாரும். இது மிக்ச் சிறந்தது. ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளும்," என்று கூறி விடை பெற்றுச் சென்றார். அவர் அவ்வோட்டை அதி ஜாக்கிரதையாய்த் தம் வீட்டில் வைத்தார். சில நாட்கள் கழிந்தபின் சிவபிரான் முன்போலச் சிவயோகி உருவெடுத்து, அவ்வோடு வைக்கப்பட்ட இடத்தில் இல்லா தொழியும்படி செய்து, அவர் வீட்டிற்கு வந்தார். திருநீலகண்டர், அவரை வணங்கி எதிர் நிற்க, சிவபிரான், "நான் முன்னாளிலே உம்மிடத்திலே தந்த திருவோட்டைக் கொடும்," என்று கேட்டார். நாயனர், வீட்டிற்குள் சென்று, தாம் வைத்த இடத்தில் பார்த்து, அதை அங்குக் காணமல் மனங்கலங்கித் திரும்பி வந்து, "சுவாமி! தேவரீர் கொடுத்த திருவோட்டை வைத்த இடத்தில் காணேன். பழையதாகிய அத்திருவோட்டிற்குப் பதிலாகப் புதியதாகத் தருகிறேன்," என்று விண்ணப்பித்தார். உடனே சிவயோகியார், அவர்மீது கோபித்து, "என் மண்ணோட்டையன்றி நீர் பொன்னோட்டைக் கொடுத்தாலும் நான் வாங்கேன். நான் உம்மிடம் வைத்த பொருளைக் கவர்ந்து கொண்டு, பொய் பேசுகிறீர். என் ஓட்டைக் கொடுத்தாலன்றி நான் போகேன்," என்று உரைத்தார். நாயனர், ஒன்றும் சொல்லத் தோன்றாதவராய், "சுவாமி! நான் உங்கள் ஓட்டைக் கவர்ந்தேனல்லேன். என்ன சத்தியம் செய்யவேண்டுமானாலும் செய்கிறேன்," என்றார். அதைக்கேட்ட சிவயோகியார், "உம்மனைவியைக் கையில் பிடித்துக் கொண்டு குளத்திலே முழுகி, 'நான் கவரவில்லை,' என்று சத்தியம் பண்ணித்தாரும்," என்றார்.

நாயனர், தம் மனைவியைத் தீண்டலாகாதென்று ஆணையிட்டதை நினைத்து, மனங்கலங்கி, சிவயோகியாரைப் பார்த்து, "சுவாமி! நான் என் மனைவியைத் தீண்டமுடியாது.

எங்களுக்குள் ஓர் ஆணை ஏற்பட்டிருக்கிறது,'' என்றார். சிவயோகியார் இதைக்கேட்டு, "இதேது பெரிய மோசமாயிருக்கிறது! ஓட்டைக் கவராத துண்மையாயின் நான் கூறிய படி சத்தியம் செய்யும்,'' என்று வற்புறுத்த, நாயனார், இரு தலைக்கொள்ளி எறும்போல் திகைத்துக் கடைசியில் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டார். பிறகு அவர் தம் மனைவியுடன் குளத்திற்குச் சென்று, ஒரு மூங்கிற் கழியை எடுத்து ஒரு முனையைத் தாம் பிடித்துக் கொண்டு மற்றொரு முனையைத் தம் மனைவியிடம் கொடுத்து, இருவருமாகக் குளத்தில் இறங்கி மூழ்கினர். மூழ்கி எழுந்தவுடன் இருவரும் மூப்புப் பருவம் நீங்கி, இளமைப்பருவ முடையவர்களானார்கள். உடனே பரமசிவன், ரிடபவாகனரூடராய்ப் பிரசன்னமாகி அவர்களுக்குத் தரிசனம் கொடுத்து மறைந்தார். பின்பு திருநீலகண்ட நாயனார் தம் மனைவியுடன் சில காலம் கூடி வாழ்ந்து, சிவலோக பதவியை யடைந்தார்.

——:(o):——

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சரித்திரம்.

சோழமண்டலத்தில் சீர்காழி யென்னும் ஊரில் சிவபாத விருதயரென்னும் பிராமணர் ஒருவரிருந்தார். அவர், தம் மனைவியாரான பகவதியா ரென்பவருடன் கூடிச் சிவபக்தி யுடையவராய், இல்லறத்தை நடத்திவந்தார். அவர் புத்திரப்பேறின்றி, நெடுநாள் மனம் வருந்தி, ஒரு சற்புத்திரரைப் பெறும் பொருட்டுத் தோணியப்பரையும் பெரியநாயகியாரையும் தியானித்து வந்தார். சிவபெருமான் கருணையினால் பகவதியார் கருப்பவதியாகி, நல்ல முகூர்த்தத்தில் ஒரு சற்புத்திரரைப் பெற்றார். பின்பு அவர்கள், அப்பிள்ளைக்கு நாமகரணம் செய்து, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்கள்.

பிள்ளைக்கு மூன்று வயதாயது. ஒருநாள் சிவபாத விருதயர் ஸ்நானம் செய்வதற்காகக் கோயிலுக்குள் ளிருக்கும் தீர்த்தத்திற்குச் சென்றார். தந்தை போவதைக் கண்ட குழந்தை கால்கட்டி அழ, அவர் பிள்ளையை எடுத்துக் கொண்டு கோயிலுக்குச் சென்று, குளக்கரையில் விட்டு, ஸ்நானம் செய்யப்போனார். குழந்தை கோயில் சிகரத்தை நோக்கி, "அம்மா! அப்பா!" என்று கதறி அழ ஆரம்பித்தது. இதைக்கேட்ட தோணியப்பரும் பெரியநாயகி தேவியாரும் மனந்தாளாமல், ரிடபவாகனரூடராய்க் குழந்தைமுன் தோன்றினர். சிவபெருமான் உமாதேவியைப் பார்த்து, "உன் முலைப்பாலை இத்தங்கக் கிண்ணத்தில் கறந்து குழந்தைக்கு ஊட்டுவாயாக," என்று ஆஞ்ஞாபிக்க, தேவியார் அவ்வாறே பாலைக்கறந்து, ஞானத்தைக் குழைத்து அக்குழந்தைக்கு ஊட்டினர். இக்காரணத்தால் அச்சிறுவர் அன்று முதல் ஞானசம்பந்த மூர்த்தியென்னும் பெயரைப் பெற்றார்.

சிவபாத விருதயர், தம்முடைய நியமங்களை முடித்துக் கொண்டு கரையிலேறி, வாயில் பாலொழுக நின்று கொண்டிருக்கும் குழந்தையைப் பார்த்து, "நீ யார் தந்த பாலை உண்டாய்? உனக்கு இதைக் கொடுத்தவரைக் காட்டு," என்று கேட்டார். குழந்தை ஒரு கையால் ஆகாயத்தைச் சுட்டி இடபாரூடராய் நின்ற பரமசிவனைக்காட்டி,

"தோடு டையசெவி யன்விடை யேறியோர் தூவெண் மதிசூடி
காடு டையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடு டையமல ரான்முனை நாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடு டையபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே"

என்று பாடத் தொடங்கினர். உடனே ஆகாயத்திலிருந்து தேவர்களெல்லாம் மலர் மழை பெய்தார்கள். சிவபெருமானும் மறைந்தருளினர். இதைக்கண்ட பிள்ளையார் கோயி

லுக்குச் சென்று பதிகங்கள் பாடியும் ஆநந்தக் கூத்தாடியும் களிப்பெய்தினர். இவ்வாச்சரியத்தைக் கண்ட பக்தர்கள், பிள்ளையாரை வணங்கி,வாத்திய கோஷத்துடன் அவருடன் ஊர்வலம்வந்து, அவரை அவர் வீட்டில் கொண்டுபோய்ச் சேர்த்தனர்.

சிலநாட்கள் சென்றபின் திருஞான சம்பந்தர், ஸ்தல யாத்திரைசெய்ய இச்சைகொண்டு, சீர்காழியினின்றும் புறப் பட்டார். திருக்கோலக்கா என்னும் க்ஷேத்திரத்தில் சிவ பிரான் அவருக்குப் பொற்றாளம் கொடுத்தார். திருவறத் துறையில் வாழும் சிவபிரான் அவருக்கு முத்துச் சிவிகை யும் முத்துக்குடையும் தந்தருளினர். திருஞானசம்பந்தர் அவைகளைப் பெற்று, சிரமமின்றி முத்துச் சிவிகையிலேறி, மற்றுமுள்ள ஸ்தலங்களுக்குச் சென்றார். அவர் திருப்பாச்சி லாச்சிரமத்துக்கு வந்தபோது அங்கே முயலகன் என்னும் வியாதியால் வருந்தியிருந்த மழவன் மகளுடைய நோய்நீங்கு மாறு ஒரு திருப்பதிகம் பாடினர். இவ்வாறு திருஞான சம்பந்தர் பல ஸ்தலங்களுக்கு யாத்திரைசெய்து, தம் புகழை நிலைநாட்டி வந்தார்.

இஃதிவ்வாறிருக்கத் திருமைலாப்பூரில் வைசியர் குலத் தில் சிவநேசரென்னும் பக்தரொருவ ரிருந்தார். அவருக்கு அதிக சௌந்தரியமுள்ள புத்திரி ஒருத்தி இருந்தாள். சிவ நேசர் தம் புத்திரியைத் திருஞான சம்பந்தருக்கன்றி வே றொருவருக்கும் கொடுப்பதில்லையென உறுதி கொண்டார். அப்புத்திரியும் அதே உறுதியுடன் ஒரு கன்னி மடத்தில் வசித்துவந்தாள். ஒருநாள் அவள் நந்தவனத்தில் புஷ்பம் கொய்திருக்கையில் சர்ப்பம் தீண்டி விஷம் தலைக்கேறி உயிர் நீத்தாள். அதைக்கண்ட சிவநேசர் கவலை யடையாது, “ இவள் பிள்ளையாருக் குரியவள். பிள்ளையார் வருகிறவரை

யில் உடலைத் தகனம் செய்து எலும்பையும் சாம்பலையும் சேகரித்து வைப்பேன்," என்றுகூறி, அவ்வாறே எலும்பையும் சாம்பலையும் ஒரு குடத்தில் சேகரித்து வைத்திருந்தார். திருஞானசம்பந்தர் தற்செயலாய் அங்குவந்தபோது சிவநேசர் அவரை வணங்கி, நிகழ்ந்ததைக் கூறி, தம்மகளை உயிர்ப்பிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தார். திருஞான சம்பந்தர் அக்குடத்தைக் கோயிலுக்குள் கொண்டுபோய் வைத்துப் பரமனைக் குறித்துத் திருப்பதிகம் பாடப் பூம்பாவை யென்னும் பெயருடைய அப்பெண் குடத்தினின்றும் வெளியே வந்தாள். இதைக்கண்ட எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். சிவநேசர், அவளை விவாகம் செய்துகொள்ளும்படி திருஞானசம்பந்தரை வேண்டினார். பிள்ளையார் அதற்குடன்படாததால் பூம்பாவை கன்னிகையாகவே யிருந்து காலமாயினாள். சிலநாட்கள் சென்றபின் திருஞானசம்பந்தர் சீர்காழிக்குத் திரும்பினார்.

சிவபாதவிருதயர் தம் திருக்குமாரரான திருஞானசம்பந்தருக்குத் திருக்கலியாணம் செய்யவேண்டுமென்ற விருப்பத்தோடு திருநல்லூரி லிருக்கின்ற நம்பியாண்டார் நம்பி என்பவருடைய புத்திரியை மணம் பேசி முடிவுசெய்தார். பிறகு கலியாணத்திற்கு வேண்டிய சகல முயற்சிகளையும் செய்வித்தார். கலியாணத்திற்கு முன்னே திருஞான சம்பந்தர் சமாவர்த்தனம்பண்ணி, மறுநாட் காலையில் நித்திய கருமங்களைச்செய்து முடித்து, முத்துப்பல்லக்கி லேறினார். அவர் மேனிமுழுவதும் திருநீறு அணிந்தும், உருத்திராக்ஷத்தையே ஆபரணமாய்ப் பூண்டும், பட்டுப் பீதாம்பரந்தரித்துமிருந்தார். இவ்வளவு வைபவத்துடன் மணக்கோலம் பூண்ட பிள்ளையாரைக் கண்டவர் பலரும் களிப்பெய்தினர். திருஞானசம்பந்தர் திருக்கலியாண மண்டபத்திற்குள் சென்ற

தும் நம்பியாண்டார் நம்பி, தம்மனைவியுடன் அவர் பாதங்களை விளக்கி, அவர் திருக்கரத்தில் ஜலத்தை வார்த்து, "என் புத்திரியை உமக்குத் தந்தேன்," என்று கூறினர். விவாகத்திற்குரிய மற்றச் சடங்குகளெல்லாம் குறைவின்றி நிறைவேறின. பிறகு திருஞானசம்பந்தர் இல்லறத்தில் தாம் ஈடுபட்டதைக் குறித்து வருந்தி, "நான் என் மனைவியுடன் சிவபெருமானது திருவடியை அடைவேன்," என்றெண்ணித் திருமணக் கோலத்துடன் சுற்றத்தவர்கள் சூழத் திருநல்லூர்க் கோயிலுக்குள் பிரவேசித்தார். அங்குச் சென்று, "நல்லூர்ப் பெருமணம்," என்னுந் திருப்பதிகத்தைப்பாடி முடித்ததும் கோயிலெங்கும் ஒரே ஜோதியாய் விளங்கிற்று. மணமகனும், மணமகளும், மற்றுமுள்ள சுற்றத்தாரும், வேடிக்கை பார்க்க வந்தவர்களும் சோதியுடன் கலந்து சிவபதமடைந்தனர்.

—:(0):—

## எறிபத்த நாயனர் சரித்திரம்.

கருவூரில் எறிபத்த நாயனரென்னும் பெரியார் ஒருவர் இருந்தார். அவர் பரமசிவனை வழிபட்டு, அவருடைய அடியார்களுக்குத் திருத்தொண்டுசெய்து, சிவனடியார்களுக்குத் துன்பம் செய்தவர்களைத் தம் மழுவினுல் வெட்டி, அத்துன்பங்களைக் களைந்துவந்தார். அவ்வூரிலேயே சிவகாமியாண்டார் என்னும் ஒரு பெரியவர் இருந்தார். அவர் தினந்தோறும் காலையில் எழுந்திருந்து, ஸ்நானம் செய்து, நந்தவனத்திற்குச்சென்று, பலவித மலர்களைக் கொய்து, மாலைகட்டி, அவ்வூரின்கண் வீற்றிராநின்ற சிவபெருமானுக்குச் சாத்துவது வழக்கம். ஒருநாள் அவர் வழக்கப்படி பூக்குடலை நிறையப் புஷ்பத்தை எடுத்துக்கொண்டு கோயிலுக்குப் போய்க்கொண்

டிருந்தார். அப்பொழுது அவ்வழியே வந்துகொண் டிருந்த அவ்வூர் அரசருடைய பட்டத்து யானையானது அவர் குடலை யைத் துதிக்கையால் பிடுங்கிப் புஷ்பத்தைக் கீழே சிதறி விட்டு, அதிவேகமாய் ஓடிப்போயிற்று. சிவகாமியாண்டார் அதன் பின் ஓடினார். அவர் வயோதிகரானபடியால் அந்த யானைக்குப்பின் விரைந்து செல்லச் சக்தியற்றவராய்த் தரை யில் விழுந்து, "சிவமே! நான் என் செய்வேன்! தங்களுக் குக் கொண்டுவந்த புஷ்பத்தை இந்த யானை சிந்திவிட்டதே!" என்று கூறி அழுதார்.

அப்போது எறிபத்த நாயனார் கோயிலினின்றும் அவ் வழியாக வந்தார். அவர் சிவகாமியாண்டார் ஓலமிடுவதைக் கேட்டு, அந்த யானையை எவ்விதத்திலும் தண்டிக்கவேண்டு மென்றெண்ணி, "அந்தயானை எப்படிப் போயிற்று?" என்று கேட்டார். சிவகாமியாண்டார், அது போன வழியைக் காட்ட, எறிபத்த நாயனார் அதிக கோபங்கொண்டு, மழுவைக் கையிலேந்தி, விரைந்தோடி, அந்த யானையைக் கண்டு, அதன் துதிக்கையை வெட்டினார். உடனே அது பூமியில் விழுந் திறந்தது. பிறகு அவர் யானைப் பாகர் நால்வரையும் வெட்டிக் கொன்றார்.

இதைப் பார்த்திருந்த சிலர், அரசரான புகழ்ச்சோழ நாயனாரிடம் சென்று, எறிபத்த நாயனார் யானையையும் பாகர் களையும் கொன்றாரெனக் கூறினர். உடனே அரசர், அதிக கோபங்கொண்டு, தம் படைகளுடன் தம்முடைய யானையும் பாகர்களும் கொல்லப்பட்ட இடத்திற்கு வந்தார். அங்கு விபூதி தரித்துச் சிவவேடத்துடன் நின்ற நாயனாரைக் கண்ட தும் அவர் சாந்தமடைந்து, படைகளைத் தூரத்தி லிருத்தித் தாம் மட்டும் அவரருகில் போய், "சுவாமி! தாங்கள் என்

னுடைய யானையையும் பாகர்களையும் கொன்றதற்குக் காரணமென்னவோ?" என்று கேட்டார். அதற்கு எறிபத்த நாயனார், சிவபக்தர்களுக்குத் தீங்குசெய்த யானையையும் அதைத் தடுக்காதிருந்த பாகர்களையும் தாம் கொன்றதாகக் கூறினார். உடனே அவ்வரசர், அவரை வணங்கி, "சுவாமி! சிவனடியார்களுக்குத் தீங்கு செய்ததற்காக யானையையும் பாகனையும் கொன்றது போதாது; என்னையும் கொல்ல வேண்டும். ஆனால், தங்கள் மழுவினால் கொல்வது தருமமல்ல. ஆதலால் என் வாளினால் என்னைக் கொல்லும்," என்று கூறித் தம்முடைய வாளை அவரிடம் கொடுத்தார். எறிபத்த நாயனார் அந்த வாளைத் தம் கையில் வாங்கி, "ஆ! இவர் தம் யானையையும் பாகர்களையும் கொன்றதற்காக நம் மீது சிறிதும் கோபம் கொள்ளாமல் தம்மையுங் கொல்லும்படி கேட்கிறாரே! இவரல்லவோ சிறந்த சிவபக்தர்! இவருக்குத் துன்பம் விளைவித்த நாம் இறத்தலே நலம்," என்று வாளை ஓங்கித் தம் சிரசைத் துணித்துக்கொள்ளப் போனார். அப்போது அரசர் அவர் கையைப் பிடித்துத் தடுத்தார்.

அப்போது சிவபெருமான் அருளினால். "அடியார்களுடைய புகழை நிலைநாட்டும் பொருட்டுக் கடவுள் அந்த யானை புஷ்பத்தைச் சிதறும்படி செய்தார்," என்று ஓர் அசரீரி வாக்குண்டாயிற்று. உடனே மடிந்த யானையும் பாகர்களும் உயிர்பெற் றெழுந்ததைக்கண்டு, அரசரும் எறிபத்தநாயனாரும் அளவிலாச் சந்தோஷ மடைந்து, கடவுளைத் தொழுதனர். எறிபத்த நாயனார் இவ்வாறே அடியார்களுக்கு ... த இடையூறுகளை நீக்கிச் சிலகாலம் வசித்திருந்து பின்பு ... வலோகபதவி யடைந்தனர்.

—:(0):—

# வைஷ்ணவ ஆழ்வார்கள்.

## தொண்டரடிப்பொடி யாழ்வார்.

நீர்வளம் நிலவள மிகுந்த சோழமண்டலத்தில் திருமண்டங்குடி யென்னும் திருப்பதியில் வைணவப் பிராமணர் ஒருவர் இருந்தார். அவருக்குப் புத்திரர் ஒருவர் அவதரித்தனர். அவர் அப்புதல்வருக்கு விப்பிரநாராயணன் எனப் பெயரிட்டு, நாளொருமேனி பொழுதொரு வண்ணமாக வளர்த்து, தக்க வயதில் வித்தியாப்பியாசம் செய்து, சகல கலைகளையும் கற்பித்துவந்தார்.

விப்பிரநாராயணர் உலக விஷயத்தில் பற்றொழிந்து, மகா விரக்தராய் ஸ்ரீரங்கத்திற்குச் சென்று எம்பெருமானைத் தரிசித்து வந்தார். இவர் பெருமாளுக்கு உகப்பான துளவத் தொண்டிலே விருப்புற்று, அவ்வூரில் ஒரு நந்தவனத்தைச் செழிப்பாகப் பாதுகாத்துத் தினந்தோறும் பூமாலையும் துளசி மாலையும் கட்டிப் பகவானுக்குச் சமர்ப்பித்து வந்தார்.

இஃதிவ்வாறிருக்கத் திருக்காம்பனூரென்னும் தலத்தில் தேவதேவி யென்னும் வேசி யொருத்தி யிருந்தாள். அவள் ஸ்ரீரங்கத்திற்குப் போக நேரிட்டபோது விப்பிரநாராயணருடைய பூஞ்சோலையின் வழியாகச் சென்றாள். அந்த நந்தவனத்தின் வனப்பையும் அதில் பலவகைப் புஷ்பங்கள் நன்கு விளங்குவதையும் கண்ட அம்மாது, அங்கே உலாவிக் கொண்டிருக்கையில் விப்பிரநாராயணரைக் கண்டாள். அவர் அவளருகில் நின்றதையும் கவனியாது தமது திருத்தொண்டிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தார். தேவதேவி அவ்விடத்தைவிட்டு நீங்கித் தன் தமக்கையிடம் சென்று, மன்னுதி

மன்னர்களும் தன்எழிலில் மயங்கியிருக்க இவ்வேதியன் தன்னைக் கண்ணெடுத்தும் பாராதிருப்பதேனோ வென்று வினவினாள். அவள் அதற்கு விப்பிரநாராயணர் பகவத் கைங்கரியத்தில் மூழ்கியிருப்பதால் அவளுடைய சாகசலீலைகள் அவரை ஒன்றும் செய்யமாட்டாவென உத்தரம் கூறத் தேவதேவியானவள் தன் சகோதரியிடம் தான் எவ்விதமாவது விப்பிரநாராயணரைத் தன் வலைக்குள் சிக்கும்படி செய்வதாகக் கடுஞ் சபதம் செய்து கொண்டாள்.

பிறகு தேவதேவி தன் ஆபரணங்களை யெல்லாம் களைந்து, காவிச் சேலை தரித்து, ஆழ்வாரை யடுத்து, அவரது பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து, "சுவாமி! நான் செய்த பாவத்தால் வேசியாகப் பிறந்தேன். என் குலத் தொழிலைப் பின்பற்றி நடக்க எனக் கிஷ்டமில்லை. ஆகையினால் தங்களை யணுகிக் கடைத்தேறலா மெனக்கருதி இங்கு வந்தேன்," என்றாள். அவள் கூறியதை ஆழ்வார் மெய்யென்று நம்பி, தம்முடன் பகவானுக்குத் திருத்தொண்டு செய்து, அப்பூஞ்சோலையில் வசிக்கும்படி அவளுக்கு அநுமதி கொடுத்தார். அவளும் மிகவும் பக்தியுடையவள்போல் நடித்துவந்தாள். இவ்வாறு சில மாதங்கள் கழிய ஒரு நாள் பெருமழை பெய்ய ஆரம்பித்தது. தேவதேவி மழையில் நனைந்து விப்பிர நாராயணருடைய பர்ணசாலையின் வெளியே நின்றாள். அதைக் கண்ணுற்ற விப்பிரநாராயணர் அவளை உள்ளே அழைத்து, ஒருபுறமா யிருக்கும்படி கட்டளையிட்டார். அவள் இதுவே அவரை வசப்படுத்த ஏற்ற சமயமெனக் கருதித் தன் அழகினாலும் இனிய மொழிகளாலும் அவர் மனங்கரையும்படி செய்து, அவரோடு இன்புற்றிருந்தாள். அன்று முதல் விப்பிரர் அவள் வலையில் சிக்கித் தமது திருத்தொண்டில் கருத்தில்லாதவராய் அவளது காதலில்

மூழ்கியிருந்தார். தேவதேவி தன்னுடைய சபதம் பலித்த தென்ற கர்வங்கொண்டவளாய்ச் சில நாட்கள் கழித்து விப்பிரநாராயணருடைய பொருள்களைப் பறித்துக்கொண்டு அவரைப் புறக்கணித்தாள். அவளைப் பிரிய மனமில்லாத விப்பிரநாராயணர் வீட்டு வாயிற் புறத்தில் நின்றிருந்தார்.

இதைக் கண்ணுற்ற பெருமாள், தமது பக்தர் மீது கிருபை கூர்ந்து, முன்பு அவர் தமக்குச் செய்திருந்த திருத்தொண்டைச் செய்யும்படி அருள் புரியுமாறு மனித வேடந் தாங்கிக் கோயிலிலுள்ள பொன் வட்டிலை யெடுத்துக்கொண்டு தேவதேவியின் வீட்டிற்குச் சென்றார். அவர் அவளிடம் அப்பாத்திரத்தைக் கொடுத்துத் தாம் விப்பிரநாராயணருடைய சேவகனென்றும், விப்பிரநாராயணர் அதை அவளிடம் சேர்க்கும்படி கொடுத்தனுப்பினதாகவும் கூறி மறைந்தருளினர். உடனே தேவதேவி விப்பிர நாராயணரைத் தேடிவந்து, அவரை உள்ளே அழைத்து உபசரித்தாள். மறுநாட் காலையில் பெருமாள் சந்நிதியில் ஒரு வட்டில் காணமற் போனதைக்கண்ட அர்ச்சகர்கள், அவ்விஷயத்தை அவ்வூர் அரசனிடம் தெரிவித்தார்கள். அரசன் அக்கள வைக்கண்டு பிடிக்குமாறு தனது தூதர்களை ஏவினன். பின்பு தேவதேவியின் வேலைக்காரி யொருத்தியின் மூலமாக அவ் வட்டில் தேவதேவியின் வீட்டிலிருந்ததை ஒருவாறு அறிந்த காவலர், தேவதேவியையும் விப்பிரநாராயணரையும் கைது செய்து, அரசன் முன் கொண்டுபோய் விட்டனர். தேவதேவி அரசனிடம் நடந்த விஷயத்தை உள்ளபடி எடுத்துரைக்க, அரசன் விப்பிரநாராயணரைக் கடிந்து கேட்டான். விப்பிரநாராயணர் தமக்குத் தூதன் ஒருவனுமில்லை யென்று கூறினர். அரசன் உண்மையறியும் வரையில் இருவரையும் சிறையிலிட்டான்.

பிறகு பெருமாள் பக்தரைக் காத்தருளும் பொருட்டு அரசன் கனவில் தோன்றி, "விப்பிரநாராயணர் திருடுபவரல்லர். விலைமகள் வலையில் சிக்கியிருந்த அவர் நம்மை அடைவதற்கு நாமே இவ்வுபாயம்செய்தோம்," என்று கூறி மறைந்தருளினர். உடனே அரசன் சிறைச்சாலைக்குச் சென்று, பக்தரை விடுவித்து, அவரது பாதத்தில் வீழ்ந்து வணங்கித் தன்னை மன்னிக்கும்படி வேண்டினன். விப்பிரநாராயணர், "நாம் ஒழுக்கத்தையும் திருத்தொண்டையும் மறந்து, வேசியின் காதலில் ஈடுபட்டிருந்ததால் இத்துன்பத்தை யடைந்தோம்," என்று வருந்தி, அன்று முதல் பெரிய பெருமாளை யல்லது பிறிதொரு பொருளையுங் கருதாதவராய் எம்பெருமானுக்குத் துளவத் திருத்தொண்டு செய்துவந்தார்.

விப்பிரநாராயணர், பெரிய பெருமாளிடத்தில் அன்பு கொண்டொழுகும் தொண்டர்களைக் கண்டால் பெரிய பெருமானையே கண்டவர்போல் மனமகிழ்ந்து அவர்களை யுபசரித்து வந்ததனாலும், தாம்பாடியருளிய பிரபந்தத்தில் அரங்கநாதனுடைய தொண்டர்களைப் புகழ்ந்து பேசுவதனாலும், காளடையில் அவருடைய பிள்ளைத் திருநாமமாகிய விப்பிரநாராயணர் என்னும் பெயர் மறைந்து, தொண்டரடிப்பொடியாழ்வார் என்னும் பெயர் வழங்கலாயிற்று.

—:(o):—

## குலசேகராழ்வார்.

சேரநாட்டின்கண் திருவஞ்சைக்களமென்னும் திருப்பதியில் துருடவிரதரென்னும் அரசர் அநேக நாளாய் மக்கட்பேறின்றி வருந்தியிருந்தார். திருமாலின் திருவருட்கடாட்சத்தால் அவருக்குப் புத்திரர் ஒருவர் பிறந்தார். அரசர் அக்

குழந்தைக்குக் குலசேகரன் என்று நாமஞ்சாற்றி வளர்த்து வந்தார். குலசேகரர் நல்லாசிரியர் பால், தாம் இளமையில் கற்கவேண்டிய நூற்களைக் கற்றுத் தம் தந்தையை மகிழ்வித்தார். அரசர் தம் மைந்தரது கல்வித் திறத்தைக் கண்டு மகிழ்ந்து அவருக்கு இளவரசு பட்டஞ் சூட்டினார். சில வருடங்களுக்குப் பிறகு திருடவிரதர் தம் மைந்தரிடம் ராஜ்ய பாரத்தை விடுத்துத் தாம் உயர்கதி பெறுமாறு தவஞ் செய்ய வனஞ் சென்றார்.

குலசேகரர் தமது தந்தையாருடைய பிரிவுக்கு ஆற்றாமல் வருந்திப் பின்பு மந்திரிகள் கூறிய மொழிகளால் ஒருவாறு தேறுதலடைந்து, ஸ்ரீராமரைப்போல் செங்கோல் செலுத்தி வந்தார். அவர் தகுந்த பருவத்தில் தம்முடைய மனத்துக்கினிய மங்கையர்க்கரசி யொருத்தியை மணஞ் செய்து இளையென்னுமொரு புத்திரியையும் திருடவிரதனென்னும் புத்திரனையும் பெற்றார். அவர் வைதீக நூல்கள் பலவற்றையும்பரிசோதித்து, முடிவில் கண்ணனல்லால் உயிர்களுக்குக் கருணை புரியுந் தெய்வமில்லை என்று தெளிந்து, பெருமானுடைய கலியாண குணங்களில் ஈடுபட்டு வந்தார். அவர் ஸ்ரீமத் ராமாயணங் கேட்பதையே தம் செவிக்கினிய சொல்லாகக் கொண்டு, சத்காலக்ஷேபத்திலே காலங்கழித்துத் தினந்தோறும் ஸ்ரீராமபிரானுக்கு ஆராதனம் செய்து வந்தார்.

இவ்வாறு நடந்துவரு நாட்களில் ஒரு நாள் காலக்ஷேபம் நடக்கையில் புராணிகர், ஸ்ரீராமசரித்திரத்தில் ஆரணியகாண்டத்தில் இலங்கை மன்னனாகிய இராவணன் ஸ்ரீராமபிரானிடமிருந்து சீதையைத் தூக்கிச் சென்றபின் ஸ்ரீராமபிரான் துணையின்றிச் சீதையைத் தேடிச் சென்றனர் என்று கூறினார். இதைக்கேட்ட குலசேகரர், அச்சமயம் தாம் உலகத்தையே மறந்து இருந்ததால் ஸ்ரீராமபிரான் அப்பொழுது

தான் இலங்கைக்குச் செல்லுவதாக எண்ணி, "ஐயோ! பெருமாளுக்குத் துணை யொருவருமில்லையே!" எனவருந்தித் தம்முடைய சதுரங்க சேனையுடன் இலங்கையை நோக்கிப் புறப்பட்டார். இதைக்கண்ட மதியிலுயர்ந்த மந்திரிகள் திடுக்கிட்டு இதைத் தவிர்க்க ஓர் உபாயந்தேடிப் பெருமாள் பகைவரைக் கொன்று சீதையை மீட்டுச் சுகமாய்த் திரும்பி விட்டாரென்று குலசேகரரிடம் கூற, அவர் துன்பநீங்கி வீடு திரும்பினர். அன்று முதல் புராணஞ் சொல்பவர், குலசேகாருடைய குணத்தை யறிந்து, பகவானுக்கு நேர்ந்த துன்பங்களைச் சுருக்கியும் வெற்றியை விரித்தும் கூறி வந்தார்.

ஒருநாள் அவர் வெளியூருக்குப்போக நேரிட்டது. ஆகையால் அன்று அவர் தமக்குப்பதிலாக இராஜ சபைக்குச் சென்று காலக்ஷேபத்தை நடத்தும்படி தம்முடைய குமாரருக்குக் கட்டளையிட்டுச் சென்றனர். குலசேகரருக்கு ஸ்ரீராமபிரானிடமிருந்த உண்மையன்பு இத்தன்மையது என்றுணராத அப்புதல்வர் சபைக்குச் சென்று இராமாயணஞ் சொல்லத் தொடங்கி, இராவணன் சீதையைத் தூக்கிச்சென்ற விஷயத்தை விரித்துரைக்க, குலசேகரர் மிகவும் மனம் வருந்திச் சீறியெழுந்து, சீதையை மீட்டு வருமாறு ஆயுதபாணியாய்ச் சேனைகள் புடைசூழ இலங்கைக்குப் புறப்பட்டார். குலசேகரர் தென்கடலை யடைந்து, அதை நீந்திக் கடப்பதெனத் தீர்மானித்து, கழுத்தளவு ஜலத்தில் சென்றார். உடனே அவரது பக்தியைக் கண்டு அவரை ரக்ஷிக்கத் திருவுளங்கொண்ட ஸ்ரீ ராமபிரான் சீதாபிராட்டியுடன் அவருக்குத் தரிசனம் கொடுத்துத் தாம் வெற்றி பெற்றுச் சீதையை மீட்டு வந்ததாகக் கூறி, அவரைக் கரையேற்றினர். ஸ்ரீராமபிரானது சுகதுக்கங்களைத் தமதெனக் கருதிய காரணத்தால் அவர் "பெருமாள்" எனவும் அழைக்கப்பட்டார்.

குலசேகரர் பக்தர்களுக்கு அளித்த திரவியத்தைக் கண்டு பொறாமை கொண்ட சில உத்தியோகஸ்தர் அவ்வடியார்களைத் தொலைக்கும் பொருட்டு ஒரு சூழ்ச்சி செய்தனர். ஸ்ரீராமநவமி உற்சவ காலத்தில் மந்திரிகள் சிலர் ஆபரணப் பெட்டியிலிருந்த ஒரு நவரத்தினமாலையை மறைத்து வைத்துக்கொண்டு, அதைப் பாகவதர்கள் திருடியதாகப் பாகவதர்கள்மீது பொய்க்குற்றம் சாட்டினர். அதைக்கேட்ட குலசேகராழ்வார் மனங்கலங்கி, பாகவதர்கள் அப்பாதகம் செய்ய மாட்டார்களெனக் கருதிப் பாம்புள்ள ஒரு குடத்தைச் சபை முன் வைத்து, நிரபராதிகளான அடியார்களை நோக்கி, "நான் இக்குடத்தில் கையிடுகிறேன்; நீங்கள் அபராதம்செய்யாதவர்களாயின் இச்சர்ப்பம் என்னைத் தீண்டாதொழிக," என்று கூறி அவ்வாறே தம் கையை அக்குடத்துள் விட்டனர். அதனால் அவருக்கு எவ்வித இடையூறுமுண்டாகவில்லை. அதைக் கண்ணுற்ற அம்மந்திரிகள் நடுநடுங்கித் தாங்கள்செய்த குற்றத்தை மன்னிக்குமாறு அரசரை வேண்டிக் கொண்டார்கள். பிறகு குலசேகராழ்வார் பல திவ்விய க்ஷேத்திரங்களையும் தரிசித்து எம்பெருமான் திருவடிநீழலை யடைந்தனர்.

——:(o):——

## திருப்பாணாழ்வார் சரித்திரம்.

சோழமண்டலத்தில் உறந்தையென்னும் திருப்பதியில் திருப்பாணாழ்வார் என்பவர் ஆதிதிராவிட வருணத்திலே அவதரித்தார். பெருமாளுடைய திருவருளால் அவதரித்த அவர், உலகப் பற்றில்லாதவராகவும் ஞானவைராக்கிய சீலராகவும் இருந்து எப்போதும் பகவத் குணங்களைப்பற்றிப் பாடி மகிழ்ந்து வந்தார்.

ஒருநாள் அவர் ஸ்ரீரங்கநாதருக்குப் பாடல் திருத்தொண்டு செய்யக் கருதித் தம் ஊரைவிட்டகன்று, திவ்விய

க்ஷேத்திரத்தின் எல்லையை மிதிக்கவும் அஞ்சினவராய், திரு வரங்கநாதர் பள்ளிகொண் டிருக்கும் திசையை நோக்கித் தூரத்திலிருந்து யாழுங்கையுமாக நின்று பக்திவசப்பட்டுத் தேகம் புளகித்துக் கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகப் பாட ஆரம்பித்தனர். அப்போது ஸ்ரீ ரங்கநாத ருக்குத் திருமஞ்சனத்திற்கு வேண்டிய தீர்த்தங்கொண்டு போக வந்த லோக சாரங்கரென்னும் பிராமணர் அங்கே நின்றிருந்த பாணரை அப்பால் போகும்படி கூறினர். பாணர் உலகத்தையே மறந்திருந்தமையால் அவ்வந்தணர் கூறியதையு மறியாது வாளாவிருந்தனர். அதைக்கண்ட அப்பிராமணர் அவ்விஷயத்தைத் தம் உறவினர்களிடம் கூற ஜாதியபிமான மிகுந்த அப்பிராமணர்கள் திரண்டு வந்து பாணரை அவ்விடத்தைவிட்டகலும்படி கடிந்துரைத்தனர். அவ்வாறு செய்தும் அவர் வாளா இருந்ததைக் கண்டு அவர் கள் சிறிய கற்களால் அவரை அடிக்க ஆரம்பித்தார்கள். பரிச உணர்ச்சி சிறிதுமின்றி நின்றிருந்த பாணர் மறையவர் தம்மேல் எறிந்த கன்மழைக்குச் சற்றும் சலியாது நிலைத் திருந்தார். பாணர் சிறிதும் உணராதிருந்தாராயினும் ஸ்ரீ ரங்கநாதர் திருவுள்ளம் மிகவும் கலங்கியது. அக்காரணத் தால் அப்பெருமானுடைய தேகத்தினின்றும் இரத்தம் பெருக்கெடுத்தது. இவ்வதிசயங்கண்ட அர்ச்சகர் பயந்து அரசனிடம் இதை அறிவித்தனர். அரசன் உலகிற்கு என்ன தீங்கு நேரிடுமோ வெனப் பயந்திருந்தான்.

பெருமாள் பாணரை ஆட்கொள்ளத்திருவுளங்கொண்டு லோக சாரங்கரின் கனவில் தோன்றித் தம் பக்தரான பாண ரைத் தோளில் தூக்கிக்கொண்டு வரும்படி ஆக்ஞாபித்தார். அவ்வேதியரும் அவ்வாறே மறுநாட் காலையிலெழுந்து காவேரிக்குச் சென்று, ஸ்நாநம் செய்து, மற்றப் பிராமணர்

களையும் உடனழைத்துக்கொண்டு பாணரிடம் சென்றார். அவரும் மற்றப் பிராமணர்களும் பாணருக்கு ரங்கநாதருடைய கட்டளையைக் கூறினர். பாணர், "நான் நீசகுலத்தில் பிறந்தேன்; எல்லாக் குலங்களிலும் தாழ்ந்த குலத்தினனானேன். திருவரங்கப் பெருநகரை நான் மிதிக்கத் தகுதியுள்ளவனல்லேன்," என்றுகூறிமறுத்தனர். இதைக்கேட்ட வேதியர், "தேவரீர் அத்தலத்தை மிதிக்கவேண்டாம். நான் என் தோளின்மீது தேவரீரைத் தூக்கிச் செல்கின்றேன்," என்றார். பாணர் நடுநடுங்கி, "தாங்கள் இவ்வாறுகூற நான் என்ன பாவம் செய்தேனோ! நீசனான என்னை மேலான குலத்திலவதரித்த தாங்கள் தூக்கிச்செல்வ தழகோ?" என்று மனங் குழைந்துகூறி நின்றார். பின்பு வேதியர் பகவான் கட்டளையவ்வாறென்றும் அதைமீறி நடக்கலாகாதென்றும் நியாயங் கூற, பாணர் எம்பெருமான் கட்டளைக்குக் குறுக்கொன்றும் சொல்லாமல் பகவானுக்குத் தம்மை அர்ப்பணஞ்செய்து கை கூப்பி ஸ்தம்பித்து நின்றுவிட்டார். உடனே ஸ்ரீ லோகசாரங்கர் திருப்பாணாழ்வாரைத் தமது தோளின்மேல் தூக்கிக் கொண்டுசென்று கோயிலுக்குள் புகுந்தார். புகுதலும் பெருமாள்தமது திவ்யமங்களரூபத்தை ஆழ்வாருக்குக் காட்டியருளினர். அன்று முதல் ஆழ்வார் பகவானது அடிகளையே அன்புடன் பூஜித்து மனங்களித்து வந்தார்.

——:(0):——

## திருமங்கையாழ்வார் சரித்திரம்.

சோழமண்டலத்தில் திருமங்கை யென்னும் நாட்டில் திருக்குறையலூரிலே திருமங்கையாழ்வார் சோழராஜனது சேனைத் தலைவருக்குக் குமாரராய் அவதரித்தார். அவர் இளமைப் பருவத்திலேயே ஆயுதப்பயிற்சியில் தேர்ந்து,

சோழனிடம் சேனாதிபதி உத்தியோகம் வகித்துவந்தார். அவர் படைத் தலைமை வகித்து எதிரிகளைப் புறங்காட்டியோடுமாறு செய்ததால் அரசன் அவர் மீது அன்புகொண்டு திருமங்கை நாட்டுக்கு அரசராக்கினான். திருமங்கையாழ்வார் செங்கோல் செலுத்தி உலக இன்பங்களை அநுபவித்து வந்தார்.

திருவெள்ளக்குளம் என்னும் ஊரிலுள்ள பொய்கையில் அமரமகளிர் பலர் நீராடிச் செல்லுகையில் ஒருத்திமட்டும் மானிட வடிவங்கொண்டு மலர்கொய்து நின்றாள். அப்போது பிராமண ரொருவர் அநுஷ்டான முடித்து, அவ்வழியே சென்றார். அவர் அம்மாதை நோக்கி யாரென்று வினவ அவள், "சுவாமி ! நான் சுமங்களை என்னும் பெயரினள். நான் ஒரு சித்த புருஷனைக் கண்டு பரிகசித்ததற்காக, "நீ நீசனுக்கு மனைவியாகக்கடவாய்," என்று அவர் சாபமிட்டார். நான் மனங்கலங்கி அவரைப் பிரார்த்திக்க அவர், "நீ திருமங்கை நாட்டரசருக்கு மனைவியாகி அவரைப் பாகவதோத்தமராக மாற்றினால் சுகப்படுவாய்," எனக் கூறினார். ஆதலால் தேவரீரைத்தஞ்சமடைந்தேன்," என்றுகூறினாள். புத்திரப்பேறின்றி வருந்திய அவ்வந்தணர் அவளைத்தம்மகத்திற்கழைத்துச் சென்று, தம் புதல்வியைப்போல் வளர்த்து வந்தார்.

திருமங்கைமன்னர் அவளது அழகையும் குணத்தையும் பலர் சொல்லக் கேட்டு, அவளை மணம் புரிய விரும்பி, அவ்வந்தணர் வீட்டிற்குச் சென்றார். அவர் அவளது அழகைக் கண்டு வியந்து, அவளைத் தமக்கு மனைவியாகக் கொடுக்கும்படி அவ்வேதியரை வேண்ட, அவரும் அதற்குடன்பட்டார். ஆனால், அம்மாது, "எம்பெருமான் திருவடியைப் பூஜிப்பார்க்கல்லாது மற்றவருக்கு நான் வாழ்க்கைப்படேன்,"

# இந்து பக்த சிரோமணிகள்
# சரித்திரம்

?)14914

## 31. குணவதிபாய் சரித்திரம்.

முன்னொரு காலத்தில், புருது என்னும் ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு ஒரு புத்திரி பிறக்க, அவளுக்கு குணவதிபாய் என்று பெயரிட்டு, நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக வளர்த்துப் பெரியவளானதும், மாதவசிங்கு, என்னும் ஓர் அரசனுக்கு விவாகம் செய்து கொடுத்தான். மாதவசிங்கும் குணவதிபாயும் சமூசாரத்தைச் சௌக்கியமாக நிறைவேற்றி வரும் நாளில், ஒரு புத்திரன் அவதரித்தான். அக்குழந்தையைக் கவனிக்குமாறு அரசன் ஒரு தாசியைத் தன் மனையாளிடம் அமைத்தான். அவள் குழந்தைக்கு வேண்டிய வேலைகளைச்செய்யும்போது,வாயினுள்ளே ஹரி நாமத்தை ஜபித்துக்கொண்டிருப்பாள். அவள் உதடு எப்போதும் அசைந்துகொண் டிருப்பதைக் கண்ட குணவதிபாய், "அம்மா! உன் உதடு எப்போதும் அசைந்துகொண்டிருக்கக் காரணமென்ன?" என்று கேட்டாள். அவள், "இத்தேகம் அநித்தியம், நிமிஷத்தில் அழியக் கூடியது. நான் இத்தேகத்தோடு கூடி வாழ்கிற வாழ்வை யொழித்து மோட்சத்தை யடையுமாறு எப்போதும் ஸ்ரீ ஹரியினுடைய நாமங்களை உச்சரித்து வருகிறேன்,' என்று கூறினாள். அதைக் கேட்ட குணவதிபாய்,அத்தாதியைப் பகவத் பஜனை செய்யும் விதத்தைத் தனக்குக் கற்பிக்கும்படி வேண்டினாள். அத்தாதி, குணவதிபாயைஸ்நானம் செய்து வரும்படி கூறி, அவளிடம் கண்ணபிரானது விக்கிரகமொன்றைக் கொடுத்து, அதைப் பூஜிக்கும் வழியையும் போதித்து, ஹரி நாமத்தை உபதேசித்தாள்.

அன்று முதல் குணவதிபாய்,பெருமாளைத் தியானித்து, பூஜைசெய்து, சாதுக்களை வரவழைத்து விருந்தளித்து, காலங்கழித்து வந்தாள். அவளுக்குக் கண்ணனைக் காண

வேண்டுமென்ற பிரமை உண்டாயிற்று. அதனால் அவள் வீட்டுவேலைகளிலும், புருஷனிடத்தும், புத்திரனிடத்தும் நினைப்பில்லாதிருந்தாள். அரசன், இதைக்கண்டு, அதிக கோபங் கொண்டு, "நீ பிரபஞ்ச விவகாரத்தைக் கவனிக்காமலிருப்பதற்குக் காரணம் என்ன?" என்று அதட்டிக் கேட்க, குணவதிபாய் நடுநடுங்கிக் கண்களை மூடிக்கொண்டாள். அப்பொழுது பகவான், அவள் முன் பிரசன்னராகி, அவள் சிரசின்மீது கையை வைத்து, "நீ பயப்படாதே. உனக்கு ஒருதீங்கும் நேரிடாமல் நான் பாது காக்கிறேன்," என்று கூறி மறைந்தார். பிறகு குணவதிபாய், அதிக களிப்புக்கொண்டவளாய்ச் சற்றும் அஞ்சாமல், தன் கணவனை நோக்கி நின்றாள். பகவான் எழுந்தருளிய விஷயத்தை யறியாத அம்மன்னன், "சாதுக்கள் இங்கடிக்கடி வருவதாலன்றோ சமுசாரம் கெட்டுவிட்டது? சாதுக்கள் இனி இங்கு வாலாகாது," என்று கூறித் தனது காவலாட்களையழைத்து, 'ஒருவரையும் அரண்மனைக்குள் விடவேண்டாம்,' என்று கட்டளையிட்டான்.

அரசன் வெளியே சென்றதும், குணவதி பாய், ஸ்ரீமந்நாராயணனைத் தியானித்து, பூஜைகளைச் சரிவரச் செய்து, சாதுக்களுடைய பாததீர்த்தத்தைத் தாசியின் மூலமாய்ப்பெற்று உட்கொண்டு, சந்தோஷித்திருந்தாள். சிலநாட்கள் சென்றதும் அவள் தலைமயிரை எடுத்து, உயர்ந்த ஆடை ஆபரணங்களைக் களற்றி, ஒரு வெண்மையான ஆடையுடுத்தித் துளசிமாலை யணிந்து, சாதுக்களை யழைத்துப்பூஜை செய்து வந்தாள். இவ்விஷயங்களை, துர்ஜனனென ஒரு மந்திரி அரசனிடம் அறிவித்தான். அரசன் அதிக கோபங்கொண்டு, நான்கு தூதர்களையழைத்துத் தன் மனைவியைக் கொன்று வரும்படி ஆச்ஞாபித்தான். அவர்கள் குணவதிபாயைக்கொல்

ஹுமாறு அவள் பூஜாகிருகத்திற்கு வந்தார்கள். அப்போது அம்மையார் பெருமாளுக்குப் பூஜைசெய்து, அர்ச்சனை செய்திருந்தமையால் தூதர்கள் வந்து நின்றதைக் கண்டாளில்லை. கண்ணபிரானனவர், அவள் பூஜை செய்த விக்கிரகத்தின் மூலமாய் ஒரு புலியுருவங்கொண்டு தோன்றினர். குணவதிபாய் அதைக்கண்டு, காரணமின்னதென அறியாது, தன் பூஜையைக் குறைவின்றிச் செய்து வந்தாள். குணவதிபாய் பூஜையை முடித்து வெளியே சென்றதும், அப்புலியும் வெளிவந்து தூதர்களைக் கொன்று, அறைக்குட்சென்று மறைந்து போனதை அவள் கண்டாள். அவ்விஷயத்தைக் கேட்ட அரசன் பயமடைந்து, மனைவியிடம் வந்து, பெருமாளுக்கடி பணிந்து, வணங்கி நின்றான். அன்று முதல் அவனும் ஹரிபக்தியுடையவனாய்த் தன் மனைவியுடன் சேர்ந்து, சாது பூஜைக்காகத்திரண்ட செல்வத்தைச் செலவழித்து வந்தான். குணவதிபாய் ஹரிபஜனை செய்து, சிலநாள் வாழ்ந்திருந்து, வைகுந்த பதவியடைந்தனள்.

---

## 32. நாமதேவர்.

ஸ்ரீகிருஷ்ணபகவான், உத்தவரை மறுபடியும் பூமியில் போய், தருமத்தை நிலைநாட்டும் பொருட்டு மானிடனாய்ப் பிறக்கும்படி கட்டளையிட்டார். அத்தவ சிரேஷ்டரும் அதற்குடன்பட்டார்.

பண்டரிபுரத்தில் பீமா நதிக்கரையில், தையற்கார குலத்தில், தாமாஜி என்னுமொருவர், தம் மனைவி கோமாயி என்பவளுடன் தினந்தோறும் அப்புண்ணிய நதியில் ஸ்நானம் செய்து, இரவும் பகலும் கண்ணனைப் பாடிப் பஜித்துக் கொண்டிருந்தார். அவர்களிருவரும் பக்தி மிகுந்தவர்கள்

யிருந்தும், புத்திர சந்தானமின்றி இருந்தனர். ஒருநாள் கோமாயி தன் புருடனை நோக்கி, "கண்ணனிடம் சென்று புத்திர சந்தானம் உண்டாக வேண்டுமென்று நீங்கள் பிரார்த்தியுங்கள்," என்று கூறினாள். அவர், "அப்படிச் செய்வது முட்டாள்தனம். நாம் விருத்தாப்பியராயிருப்பதால் குழந்தை பிறக்குமென்று நம்புவதற்கிடமில்லை. பிரார்த்தனை செய்வதால் கழிந்த இளம் பருவம் மீண்டும் வருமா? குளிர்காலத்தில் மழை பெய்யுமா? எண்ணெயும் வர்த்தியுமில்லாமல் விளக்கெரியுமா?" என்று சொன்னார். இதைக்கேட்டுக் கோமாயி, "ஸ்வாமி! கடவுளுக்கு முடியாத காரியம் ஒன்றுமில்லை. பாறாங்கற்களைத் தென் சமுத்திரத்தில் மிதக்கவைத்துப் பாலங்கட்டிய எம்பிரான், விருத்தாப்பிய தசையிலும் புத்திர சந்தான முண்டாக்கவல்லவர்," என்றாள். தாமாஜி, "நான் இப்பொழுது உன்னிஷ்டப்படி கண்ணனிடம் சென்று புத்திரனையருளும்படி பிரார்த்திக்கின்றேன்," என்றார்.

தாமாஜி கோயிலுக்குச் சென்று, கோபுரத்தண்டை நின்று, கண்ணனைத் துதிசெய்து, அங்கேயே நித்திரை செய்தார். கிருஷ்ணபிரான் அவர் கனவில் தோன்றி, "நாளைக்கு நீர் பீமா நதிக்குச்சென்று, ஸ்நாநம் செய்வீராகில் உமக்குப் புத்திர சந்தானமுண்டாகும்," என்று சொன்னார். தாமாஜி எழுந்திருந்து, தம் வீட்டிற்குச் சென்று, கோமாயியினிடம் தாம் கண்ட கனவைத் தெரிவித்தார். அடுத்தநாட் காலையில் அவர் அப்புண்ணிய நதியில் ஸ்நாநம் செய்தார். அவர் ஸ்நாநம் செய்துகொண்டிருக்கையில், ஒரு பெரிய கிளிஞ்சல் வெள்ளத்திலடித்து வருவதைக் கண்டார். அவர் அதைத்தம் கைகளால் பற்றிக் கரைக்கு இழுத்துக்கொண்டு வந்து, திறந்து பார்க்கையில், அதனுள் ஓர் அழகிய ஆண் குழந்தை இருக்கக்கண்டார். அவர் அக்குழந்தையை

எடுத்து வீட்டிற்குச்சென்றதும், அவர் மனைவியின் ஸ்தனத்தில் பால் சுரக்க, அவள் அக்குழந்தைக்குப் பால் கொடுத்து வந்தாள்.

தாமாஜி அக்குழந்தைக்கு நாமர் அல்லது நாமதேவர் என்று பெயரிட்டார். நாமர் சிறுவராயிருந்தபோது, ஒரு நாள் தாமாஜி சந்தைக் கடைக்குச் சென்றிருந்தமையால் மகோாயி நாமரிடம் பிரசாதம் கொடுத்து, ஸ்ரீ கிருஷ்ணனுக்கு நைவேத்தியம் செய்துவரும்படி கோயிலுக்கனுப்பினள். அந்தச் சிறுவருக்கு விக்கிரகம் ஆகாரத்தை உட்கொள்ளாதென்பதும், தாம் மனதில் கிருஷ்ணனைத் தியானிக்கையில் அவர் ஆகாரத்தை உட்கொண்டதாகப் பாவிக்கவேண்டுமென்பதும் தெரியா. ஆகையால், நாமர் பிரசாதத்தை விக்கிரகத்திற்கு முன்பாக வைத்து, அது சாப்பிடும் வரையில் காத்துக்கொண்டிருந்தார். கல்லாலாகிய அச்சிலை, அசைவற்றிருந்தமையால், அச்சிறுவர், தமது தந்தையே பிரசாதத்தைக் கொண்டுவரவில்லையென்று அது கோபித்துக் கொண்டிருப்பதாக எண்ணிக்கொண்டார். ஆகையினலே அவர், "கண்ணபிரானே! தயவு செய்து என் தகப்பனர் மீது கோபங்கொள்ளாதீர். உண்மையாகவே அவர் கடைக்குப் போகவேண்டியிருந்தது. இல்லாவிடில் அவரே பிரசாதத்தைக் கொண்டுவந்திருப்பார். அதனல்தான் அவர் என்னை அனுப்பும்படி நேர்ந்தது," என்று கூறினர். இவ்வாறு கூறிய பிறகும், விக்கிரகம் அசைவற்றிருந்தது. அதைக் கண்ட அச்சிறுவர் அழ ஆரம்பித்து, "கிருஷ்ணபிரானே நீர் ஒரு வாய் உணவாவது உண்ணமாட்டீரா? பிரசாதத்தை நீர் சாப்பிடாமல் நான் எடுத்துச் சென்றால் என் தாயார் திட்டுவாளே! அவள், நான் தாங்கள் வருத்தமடையும்படி ஏதோ செய்துவிட்டேனென்று சொல்லுவாளே!" என்று

கதறி அழுதார். கிருஷ்ணபிரான் குழந்தை விசனமுறுவதைப் பார்த்து மனமிரங்கி,விக்கிரகத்திலுட் பிரவேசித்துத் தமக்கு முன்பாக வைத்திருந்த பிரசாதத்தைச் சாப்பிட்டுவிட்டார்.

நாமதேவருக்கு யுக்த வயது வந்தவுடன், அவர் பெற்றோர், அவருக்கு இராஜாயி என்ற ஒரு பெண்ணை விவாகஞ் செய்வித்தனர். ஒருநாள் அவள், தன் மாமியிடம், 'என் புருஷர் இவ்வுலக விஷயங்களைச் சிறிதும் கவனிக்கமாட்டேனென்கிறார்,' என்று முறையிட்டாள். அவள் கட்டி இருந்த ஆடை கந்தலாயிருந்ததும் தவிர, பசிப்பிணி அவளை விட்டு என்றும் அகலவில்லை. கிருஷ்ண பகவான் இராஜாயியினுடைய வார்த்தைகளைக் கேட்டதும், ஒரு தனவந்த வியாபாரி போல் மாறுவேடம்பூண்டு, கருடனை ஓர் எருதாக உரு எடுக்கச் செய்து, அதன் முதுகின்மேல் தங்கநாணய மூட்டைகளை ஏற்றி, இராஜாயியினுடைய வீட்டிற்குப் புறப்பட்டார். அவர் பண்டரிபுரத்தை யடைந்ததும், நாமதேவரின் வீடு எங்கே என்று விசாரித்தனர். அப்பட்டணத்திலுள்ளோர் அவருக்கு நாமதேவரின் வீட்டைக் காண்பித்து, நகைக்க ஆரம்பித்தனர். அவர்கள், "நாமதேவரிடம் அவர் உண்பதற்கே போதுமான ஆகாரமில்லையே! இவருக்கு அவர் எப்படி விருந்தளிக்கப் போகிறார் ? பார்ப்போம்," என்று பேசிக்கொண்டார்கள். கிருஷணபகவான், நாமதேவருடைய வீட்டையடைந்ததும், அவருடைய மனைவியை நோக்கி, "அம்மா! வெளியே வாருங்கள். நான் உங்களுடைய வீட்டில் தங்கலாமென்றெண்ணி வந்தேன்," என்றார். இராஜாயி, வீட்டில் ஒன்றும் ஆகாரமில்லாமையால், மிகவும் கஷ்டமடைந்தனள். தன் வீட்டிற்கு வந்த விருந்தினரைச் சும்மா அனுப்பி விடவும் அவளுக்கு மனமில்லை. ஆகாரமளிக்கச் சக்தியில்லாதபோது அவரை உள்ளே வரவழைப்பதற்குப்

பிரியமுமில்லை. அவள் கதவிற்குப் பின் நின்று, "ஐயா! நீர் யார்? நீர் எவ்விடமிருந்து வந்தீர்? உமக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டாள். இதைக் கேட்டுக் கண்ண பிரான், "அம்மா! நான் ஒரு வியாபாரி; என் பெயர் கேசவன் என்பது. நான் உம் பர்த்தாவினுடைய பழைய அருமைத் தோழன். அவருக்குப் பணம் வேண்டியிருக்கிற தெனக் கேள்விப்பட்டேன். ஆகையினால் நான் அவருக்கு ஒரு பை தங்க நாணயங்களைக் கொண்டு வந்திருக்கிறேன்," என்றார்.

அம்மொழியைக் கேட்ட இராஜாயி வெளியே ஓடிவந்து, அவரை உள்ளே வந்தமரும்படி வேண்டிக் கொண்டாள். கிருஷ்ணபகவான் புன்னகை செய்து, "அம்மா! நீர் என் பணத்தைக் கண்டபின்னன்றோ பிரிய வசனத்தைச் சொன்னீர்? வெறுங்கையுடன் ஒருவர் வீட்டிற்குப் போவதை விடப் போகாமலிருப்பதே நலமென்று சொல்லுகிறார்களே, அது உண்மையே," என்று சொன்னார். இராஜாயி மிகவும் பணிவுடன் அவரை வணங்கி, அங்கே தங்கி இருந்து நாம தேவருடன் போஜனமருந்தும்படி வேண்டிக் கொண்டாள். கிருஷ்ணபிரான் அதைக்கேட்டு, "அம்மா! நான் அதுவரையில் தங்கி இருக்கமுடியாது. நாமதேவர் வந்ததும் அவருடைய நண்பனாகிய நான் வந்ததாகவும், இப்பொருளைக் கொடுத்துப் போனதாகவும் தெரிவியுங்கள்," என்று கூறி, எருதுருக் கொண்ட கருடனுடைய முதுகின்மேலிருந்த தங்கநாணய மூட்டையை இறக்கி, இராஜாயி வீட்டில் வைத்தார். அவள் அதைத்திறந்து நாணயங்களைக் கீழே கொட்டினாள். பிறகு அவள் விருந்தினருக்கு வந்தனமளிக்குமாறு நிமிர்ந்து பார்க்கையில், அவர் மறைந்தருளினார்.

---

## 33. போதலர் சரித்திரம்.

தாமணம் என்னும் நகரில் போதலரென்ற குடியானவர் ஒருவர் இருந்தார். அவர் தர்மங்களை அதிகமாகச் செய்து பகவத் பஜனையிலேடு பட்டுக்காலங்கழித்து வந்தார். அவருக்கு மமதாயி என்ற கற்புடைய மனைவாள் ஒருத்தி இருந்தாள். அவளும் சதா பண்டரிநாதனைப் பஜித்து வந்தாள். அவள் வயிற்றில் ஏமாஜி என்ற ஒரு சற்புத்திரன் பிறந்தான். அவனுக்குத் தகுந்த வயது வந்தவுடன், தாய் தந்தையர் பகீரதி என்ற ஒரு ரூபலாவண்ணியமான பெண்ணை விவாகம் செய்து வைத்தனர். பிறகு போதலரும், மமதாயியும், ஏமாஜியும், பகீரதியும் ஹரிபஜனை செய்வதைத் தமது தொழிலாகக் கொண்டு இனிது வாழ்ந்திருந்தனர்.

ஒருநாள் அவர்கள் வீட்டின் வாயிலில் ஒரு பகீர் வந்து நின்றார். போதலர் அவரிடம் சென்று, "ஸ்வாமி! உமக்கென்ன வேண்டுமோ அதைக் கேளுங்கள். நான் கொடுக்கிறேன்," என்று சொன்னார். பகீரவரை நோக்கி, "உனது மருமகளைக் கொடுக்க வேண்டும்," என்று கேட்டார். போதலர் ஆறுத் துயருற்றுத் தமது புத்திரனை யழைத்து, "அப்பா! நம் வீட்டிற்கு வந்த அதிதியை ஆதரிக்காமற் போனால் நமக்கு ஹானி உண்டாகும். அவர் உன் மனைவியைத் தரும்படி கேட்கிறார். உன் மனதில் தோன்றியதைச் சொல்," என்று கேட்டார். ஏமாஜி, தன் தகப்பனாரிடம், "நானும் என் மனைவியும் உங்களுக்கு ஐக்கியமானோம். உங்களிஷ்டப்படியே செய்யுங்கள்," என்று சொன்னான். போதலர் அதிக சந்தோஷங் கொண்டு, தம் மருமகளையழைத்து, "அம்மா! இந்தப்பகீரின் பின்னர்ப் போக உனக்குச் சம்மதமா?" என்று கேட்டார். அவள்

பதிவிரதா சிரோன்மணியாதலால், "நீங்கள் என்னைக் கேட்க வேண்டுவதேன்? உங்களிஷ்டப்படியே செய்யுங்கள்," என்றுரைத்தாள். பகீர் அவர்களுடைய மனோபாவத்தை அறிந்தவராய், பகீரதியை ஸ்நானம் செய்வித்துப் போஜனமிட்டுத் தம்முடன் அனுப்பவேண்டுமென்று கேட்டார். போதலர், பொறுமையுடன் அவ்வாறே செய்து, புது வஸ்திரம், மஞ்சள், குங்குமம், வெற்றிலைப்பாக்கு முதலானவைகளைக் கொடுத்து, அவளைப் பகீருடன் அனுப்பினார். பகீர், அவளைத் தோளின்மேலேற்றிக்கொண்டு போய் விட்டார். ஜனங்கள் அதைக்கண்டு, போதலரைப் பலவாறு தூஷித்தார்கள்.

பகீர், பகீரதியைத் தூக்கிக்கொண்டு வெகுதூரம் சென்றதும், அவளைக் கீழே இறக்கிக் கண்ணனுடைய ரூபத்துடன் அவளுக்குத் தரிசனம் கொடுத்து, "அம்மா! உன் கர்ப்பத்தில் என்னைப்போல் ஒரு பிள்ளை தோன்றுவான்," எனத் திருவாய் மலர்ந்து மறைந்தருளினார். பகீரதி, அங்கு ஒருவரையும் காணாது பயந்து, அழுதுகொண்டிருந்தாள். அவ்வழியாகச் சென்ற சிலர், அவளழுவதைக்கண்டு, போதலரிடம் சென்று, "உன் மருமகள் தனியே நின்று அழுதுகொண்டிருக்கிறாள்," என்று சொன்னார்கள்.

போதலர், கண்ணபிரான் பகீரைப்போல் உருவெடுத்து வந்தனரென்றும், அவர் பகீரதியைத் தூக்கிச் சென்றது பெருந்த புண்ணியமென்றும் கருதித் தம் புத்திரனை யழைத்துக் கொண்டு, பகீரதி நின்றிருந்த இடத்திற்குச் சென்றார். பகீரதி, தன் மாமனார் பாதங்களில் விழுந்து வணங்கப் போதலர் அவளை எழுப்பி, "கண்ணன் நம்மைப் பரிசோதிக்குமாறு இவ்வாறு செய்தார்," என்று கூறி, ஹரி பஜனை செய்து கொண்டே அவளை அழைத்து வந்தனர்.

நாளடைவில் அவள் கர்ப்பவதியாகி, ஒரு சுந்தரமான புத்திரனைப் பெற்றாள். அப்புதல்வனுக்குப் பகவானென்று நாமமிட்டனர். அவன் ஹரிபக்தியின் மஹிமையைப் பிரஜைகளுக்கறிவித்து, இனிதுவாழ்ந்திருந்தான்.

---

## 34. ஜசுவந்தர் சரித்திரம்.

தபதியென்னும் நதிக்கரையில் ஜசுவந்தர் என்ற ஹரிதாசர் ஒருவர் இருந்தார். அவர் ஸ்ரீராமபிரானைத் தியானம் செய்து அதிதிகளுக்கன்னமிட்டு, துஷ்டசிந்தனை சிறிதுமின்றி, ஹரி கீர்த்தனைகளைப்பாடிக் காலங்கழித்து வந்தார். அவர் தினந்தோறும் அவ்வூர் ஜனங்களுக்கு ஹரி கதைகளைச் சொல்லி வருவார். ஜனங்கள், திரள் திரளாக அவருடைய கதையைக் கேட்க வருவார்கள்.

ஒரு காலத்தில் அவ்வூரில் விடாமழை பொழிய ஆரம்பித்தது. தபதி நதியில் வெள்ளம் அதிகரித்துக் கரைபுரண்டிருந்தது. அவ்வூரார் யாவரும் ஒருங்கு சேர்ந்து வெள்ளம் ஊரினுள் பிரவேசிக்காது தடுக்க உபாயமொன்றும் தோன்றாது விசனமடைந்திருந்தனர். அப்போது அவர்களிலொருவன், "நாம் ஜசுவந்தரிடம் சென்றால், அவர் ஏதாவது உபாயம் கூறுவர்," என்று கூறி, எல்லோரையு மழைத்துக் கொண்டு பக்தரிடஞ் சென்றான். அவர்கள், "ஸ்வாமி! நீங்கள் அடிக்கடி, பெருமாள் தம் பக்தர்களை ஆபத்தினின்றும் காப்பாற்றுவாரென்று சொல்லி இருக்கிறீர்கள். இப்போது தபதி நதியில் வெள்ளம் அதிகரித்து, ஊர் முழுகிவிடும்போலிருக்கிறது. கண்ணனுடைய மகிமையைக் காட்டி, எங்களைக் காப்பாற்றக்கடவீர்," எனப்பிரார்த்தித்தனர். உடனே ஜசுவந்தர் தமது பூஜாகிருகத்திற்குள் சென்று, ஸ்ரீராமனை

...வாறு கூறினள். உடனே திருமங்கையாழ்வார் வைஷ்ணவ பக்தருடைய வேடம் பூண்டு அம்மாதின் முன் வந்து நிற்க, அவள், "நீர் ஒரு வருடம் வரையில் தினந்தோறும் ஆயிரத்தெட்டு வைஷ்ணவர்களுக்கு அமுது செய்விக்கவேண்டும். அதன் பிறகுதான் நான் உம்மை என்னுடைய நாயகராக அடைவேன்," என்று கூறினள். திருமங்கையாழ்வாரும் அவ்வாறே செய்து அவளை மணம் புரிந்தார்.

பிறகு அவர் தம் பொருள்கள் எல்லாவற்றையும் பாகவதர்கள் பொருட்டே செலவு செய்து சோழராஜனுக்குப் பகுதிப்பணங் கட்டாமலிருந்தார். சோழன் தனது தூதர்களை யனுப்பிப் பகுதிப்பணங் கேட்க, நாளை நாளை யென்று பொழுது போக்கிவந்தார். அதைக்கண்ட சோழன் வெகுண்டு தனது சதுரங்க சேனையை யவரிடமனுப்பத்திருமங்கையாழ்வார் ஆடல்மாவென்னும் தம் குதிரைமீதேறிச் சென்று போர்செய்து சோழனுடைய சைனியத்தைத் தோற்கடித்தார். சோழன் அவரை நயவஞ்சகமாகச் சிறைப்படுத்த எண்ணி இனிய வார்த்தைகள் பேசி, அவரை அணுகிப்பிடித்து, ஓர் ஆலயத்தில் சிறைப்படுத்தினன். ஆழ்வார் அங்கே மூன்று நாட்கள் வரையில் பட்டினியாயிருந்ததைக் கண்ட எம்பெருமாட்டி அவருக்குத் தினந்தோறும் குழம்புப்பாலும் பிரஸாதமும் கொடுத்துவந்தாள். ஒருநாள் பகவான் அவருடைய கனவில் தோன்றி, "நீர் காஞ்சீபுரத்திற்குவாரும். உமக்கு வேண்டிய பகுதிப்பணத்தைத் தருகிறோம்," என்று திருவாய் மலர்ந்தருளினர். உடனே திருமங்கையாழ்வார் அரசனிடம் காஞ்சீபுரத்தில் தாம் சேகரித்து வைத்திருக்கும் பணத்தைக் கொடுப்பதாகக் கூறிச் சில மந்திரிகளை அழைத்துக்கொண்டு காஞ்சீபுரம் சென்றார். அங்கே வேகவதி தீரத்தினருகில் தனமிருக்குமிடத்தைத்

தேவராஜஸ்வாமி திருவருளால் அறிந்து அவர்களுக்குக் காட்ட அவர்கள் பயந்து, அவர் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து, அரசனிடம் சென்று நடந்த விஷயத்தைத் தெரிவித்தனர். அரசன் அப்பொருள் முழுவதையும் பாகவதர்களுக்கு வழங்கினன்.

திருமங்கையாழ்வார் திரவிய முழுவதும் ததியாராதனத்தின் பொருட்டே செலவிட்டுப் பின்னர்க் கையில் தனமில்லாததால் வழி பறித்துப் பொருளீட்டிக் கைங்கரியத்தை நடத்தத் தீர்மானித்தனர். அவர் அவ்வாறே சிலரைத் தம்முடன் சேர்த்துக்கொண்டு இராக்காலங்களில் வழிப்போக்கர்களை மடக்கிக் கொள்ளையடித்து வந்தார். அவரது செய்கையைக்கண்ட பகவான் அவரைத் தடுத்தாட் கொள்ள வேண்டி, பிராமணரைப்போல் வேடந்தாங்கிப்பல ஆபரணங்களைப் பூண்டு, தம் மனைவியுடன் ஆழ்வார் பதுங்கியிருக்கும் வழியே சென்றார். ஆழ்வார் அவர்களது வருகையைக் கண்டு சந்தோஷங்கொண்டு, அவர்களை வளைந்துகொண்டு, அவர்களுடைய ஆடையாபரணங்களைக் கொள்ளை யடித்து, ஒரு சுமையாகக்கட்டி, அதை எடுக்க எத்தனிக்கையில் அது நிலத்தைவிட்டுப் பெயராமலிருந்தது. ஆழ்வார் வேதியராக வேடந்தாங்கிய வித்தகரை நோக்கி, 'என்ன மாயம் செய்தாய்?' எனக்கேட்க, அவர் ஆழ்வாருடைய செவியில் அஷ்டாக்ஷர மந்திரத்தை உபதேசித்தருளிப் பிறகு தம் திவ்விய மங்களரூபத்தைக் காட்டிச் சேவை சாதித்தார்.

திருமங்கையாழ்வார் அன்று முதல் அதிவிரக்தராய் விஷ்ணு ஆலயங்களுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து வந்தார். எம்பெருமானுக்கு விமானம், மண்டபம், கோபுரம் முதலிய கைங்கரியங்களையும் செய்ய ஆரம்பித்தார். நாகப்பட்டினத்திலுள்ளதொரு பொன்மயமான புத்த விக்கிரகத்

தைக் களவாடி வந்து ஓர் ஆலயம் கட்டினர். இதைத் தவிர ஜனங்கள் உய்யுமாறு பல பிரபந்தங்களை இயற்றி எம்பெருமானது கிருபையினல் பேரின்ப வீட்டை யடைந்தார்.

——:(o):——

## ஆண்டாள் சரித்திரம்.

பாண்டி நாட்டிலே ஸ்ரீ வில்லிபுத்தூர் என்னும் க்ஷேத்திரத்தில் விஷ்ணு சித்தரென்னும் பெரியார் ஒருவர் இருந்தார். அவர் பகவத் விஷயத்திலேயே காலத்தைக் கழித்து எப்பெருமானுக்குப் பல கைங்கரியங்கள் செய்து வந்தார். ஒருநாள் அவர் திருத்துழாய்ப்பாத்தி யமைப்பதற்காக நந்தவனத்தைக் கொத்துகையில் மண்ணின் கீழே சகல லக்ஷணங்களோடுங் கூடிய ஒரு பெண் குழந்தை அகப்பட்டது. அவர் அதைத் தம் வீட்டிற்குத் தூக்கிச் சென்று, அன்புடன் வளர்த்து வந்தார். அப்பெண் கோதையென்னும் நாமம் பெற்றுச் சகலவித சாஸ்திரங்களையும் கற்றுப் பெருமாளிடம் அதிக பக்திகொண்டு எப்போதும் அவரையே துதி செய்து வந்தாள்.

விஷ்ணுசித்தர் தினந்தோறும் நந்த வனத்திலிருந்து மலர்களைக் கொணர்ந்து மாலைகட்டிப் பெருமாளுக்குச் சாத்துவது வழக்கம். அவரில்லாத சமயத்தில் கோதையானவள் அம்மாலையை எடுத்துத் தன் குழலின்மேல் தரித்து, "பகவானுக்கு நான் ஒத்திருக்கிறேனே இல்லையோ," என்று கண்ணுடியில் பார்த்துக் களிப்பாள். பிறகு அம்மாலையைக் களைந்து அதை இருந்த இடத்தில் வைத்து விடுவாள். அவள் இவ்வாறு தான் சூடிப்பழித்துவைக்கும் மலர் மாலையை விஷ்ணுசித்தர் எடுத்துச் சென்று பகவானுக்குச் சமர்ப்பித்து வருவார். இப்படி நடந்து வருகையில் ஒருநாள் விஷ்ணு

சித்தர் கோதை மாலையைச் சூடியிருக்கையில் வீட்டிற்கு வந்து அவளைக் கடிந்து, அவள் சூடிக்களைந்த மலர் மாலையைப் பகவானுக்குச் சாத்த மனமில்லாதவராய் வருந்தி இருந்தார். அன்றிரவு பெருமாள் அவருடைய கனவில் தோன்றித் தமக்கு ஏன் மாலை சூட்டவில்லையென்று கேட்டார். விஷ்ணுசித்தர் எல்லாமுணர்ந்த எம்பெருமானுக்கு நடந்ததை எடுத்துக்கூறப் பெருமாள், "கோதை யணிந்த மாலையே எமக்கு உகந்தது," என்று கூறி மறைந்தார். விஷ்ணுசித்தர், "நாம் செய்த புண்ணியத்தால் கோதையைப் பெற்றோம்!" என்று ஆநந்தித்திருந்தார்.

கன்னிகையான கோதை வளர்ந்து விவாகப் பருவத்தை படைந்தாள். விஷ்ணுசித்தர் அவளுக்கேற்ற புருஷனைக் காணப்பெருமல் வருந்தி இருநதார். அப்பெண்ணும் மானிடரை மணம் புரிவதில்லையென்றும் மாயவனையே விவாகம் செய்ய வேண்டுமென்றும் கூறினுள். விஷ்ணுசித்தர் தம் பெண்ணிடம் பல க்ஷேத்திரங்களிலும் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானது திவ்விய கலியாண குணங்களை எடுத்துரைத்து யாரை விவாகம் செய்ய விரும்புகிருயென்று வினவ அவள் ஒன்றும் சொல்லத் தோன்ருதவளாய்ப் பெருமாள் மீது காதலதிகரித்து வருந்தி இருந்தாள்.

விஷ்ணுசித்தர் தம்முடைய மகள் கோதை தான் காதலித்த மணவாளனை எப்படி யடையப் போகிருளென்று ஏங்கியிருக்கையில் திருவரங்கச் செல்வனுர் ஆழ்வாரது கனவில் தோன்றி, "உமது புத்திரியைத் திருவரங்கத்திற்கு அழைத்து வாரும். நாம் விவாகம் செய்து கொள்ளுகிறோம்," எனத் திருவாய் மலர்ந்தருளினுர். ஆழ்வார் தம் மனக்கவலையொழித்துச் சந்தோஷித்திருந்தார். அன்றிரவே பகவான்

திருவரங்கத்திலுள்ள ஜனங்களின் கனவில் தோன்றி, "நீங்கள் தக்க மரியாதையுடன் வில்லிபுத்தூர் ஆண்டாளை மணிப் பல்லக்கில் அழைத்து வாருங்கள்," என்று உரைத்து அருளி னார். அவர்கள் உடனே புறப்பட்டு, ஸ்ரீ வில்லிபுத்தூர் வந்து, ஆழ்வாரை நமஸ்கரித்துப் பெருமாள் கட்டளையை அவருக்கு அறிவிக்க, ஆழ்வார் தம்முடைய பெண்ணை மணிப்பல்லக்கி லேற்றித் திருவரங்கம் வந்து சேர்ந்தார்.

இவர்கள் எல்லோரும் திருக்கோயிலை அடைந்தவுடனே கோதையானவள் ஆடையாபரணங்களணிந்து, கஸ்தூரித் திலகமிட்டு, அன்னநடை நடந்து, அழகிய மணவாளன் முன் சென்றாள். உடனே எம்பெருமான் அவளைத் தம் திரு மேனியில் அந்தர்ப்பவித்தருளினார். இதைக்கண்ட விஷ்ணு சித்தர் முதலானோர் அதிசயித்து நின்றனர். பிறகு ஆழ்வார் வில்லிபுத்தூருக்குத் திரும்பிச் சென்று அங்கு வீற்றிருக்கும் பகவானை வழிபட்டு முடிவில் பரமபத மடைந்தனர்.

——:(0):——

## பெரியாழ்வார் சரித்திரம்.

வில்லிபுத்தூரில் வேயர் குலத்தில் முகுந்தாசாரியர் என் பவர் ஒருவர் இருந்தார். அவருக்குப் புத்திரர் ஒருவர் அவ தரிக்க, அப்பிள்ளைக்கு விஷ்ணுசித்தர் என்று பெயரிட்டு வளர்த்து வந்தார். விஷ்ணுசித்தர் எம்பெருமானுக்குப் புஷ்பமாலை சூட்ட விரும்பினவராய்த் திருநந்தவனத்தில் மலர்ச்செடிகள் வைத்து வளர்த்து மலர்கள் கொய்து திரு மாலை கட்டிச் சாத்திவந்தார்.

பாண்டிய நாட்டின் தலை நகராகிய மதுராபுரியில் அப் போது வல்லபதேவனென்னும் பாண்டியன் அரசாண்டு வந் தான். அவன் ஒருநாளிரவு நகர் சோதனை வருங்காலையில்

ஒரு திண்ணையில் அந்தணனொருவன் அயர்ந்து படுத்திருக்கக் கண்டான். அரசன் அவ்வந்தணனை யணுகி, "உமக்குத் தெரிந்த நீதிவாக்கியம் ஏதேனு முண்டோ?" என்று கேட்க, அவன் மறுமைக்கு வேண்டியவற்றை இம்மையிலே தேடிக்கொள்ள வேண்டுமென்ற கருத்தடங்கிய சுலோகமொன்றை எடுத்துரைத்தான். அரசன் அன்றிரவு முழுவதும் மறுமைக்கு வேண்டியவற்றிற்காகத் தான் என்ன செய்யவேண்டுமென எண்ணி யெண்ணி ஒன்றும் தோன்றாதவனாய் வருந்தி இருந்தான். மறுநாட்காலையில் அவன் வித்துவான்களைச் சேர்த்துத் தன் கருத்தை அவர்களுக்குத் தெரிவித்துப் பெருந்தனமுள்ள முடிப்பொன்றைத் தோரணத்தில் கட்டிப் பல தேசங்களிலுமுள்ள பண்டிதர்களை யழைக்க உத்தரவிட்டான்.

வில்லிபுத்தூரில் எழுந்தருளி யிருக்கும் எம்பிரான் விஷ்ணுசித்தரைக் கொண்டு அவ்வரசனுக்கு ஸ்ரீமந்நாராயணனே பரம்பொருளென்ற வேதாந்தத்தை உணர்த்த வேண்டி ஆழ்வாரது கனவில் தோன்றி, மதுரைக்குச்சென்று பொற்கிழியைப் பெற்றுவருமாறு ஆக்ஞாபித்தார். நூற்கலைகள் பயிலாத விஷ்ணுசித்தர் தம்மாலாகாத காரியத்தை எவ்வாறு செய்வதெனப் பயந்து பகவானிடம் விண்ணப்பித்தார். கடவுள் ஆழ்வாரை நிர்ப்பந்திக்கக் கடவுள் கட்டளையைச் சிரசாக வகித்து ஆழ்வார் இராஜ சபைக்கு எழுந்தருளினர். அரசன் அவருக்கு வந்தனம் செய்து உபசரித்து வரவேற்றான். இதைக் கண்டு பொறாமையுற்ற மற்றப் புலவர்கள் அரசனை நிந்தித்தார்கள். வேத அப்பியாசம் சிறிதுமில்லாத இவ்வாழ்வார் என்ன சொல்லப் போகிறார் என்று ஆச்சரியப் பட்டுக்கொண் டிருந்த பண்டிதர்கள்முன் விஷ்ணுசித்தர் சகல வேதங்களிலிருந்தும் தகுந்த மேற்கோள்களுடன்

ஸ்ரீமந்நாராயணனே பரதெய்வமென்று நிருபித்துக் காட்டினர். உடனே தோரணத்தில் கட்டியிருந்த தனம் அவர்முன் தானே வளைந்து நின்றது. ஆழ்வார் அக்கிழியை அறுத்தருளினர். இவ்வதிசயத்தைக் கண்ட மன்னன் ஆழ்வாரை யானைமீதேற்றிச் சகல ஆடம்பரங்களுடன் ஊர்வலம் வந்தான். அவ்வூர்வலத்தைக் கண்டு களிக்குமாறு பகவானும் பிராட்டியும் பிரமன் சிவன் முதலானோர் புடைசூழ ஆகாயத்தில் தோன்றினர். அப்போது ஆழ்வார் பகவானைத் தோத்திரம் செய்து, கலியுகத்தில் பகவான் தோன்றக் காரணமென்னவென்று பயந்து, பகவான் திருமேனிக்குத் தீங்கொன்றும்வரக் கூடாதென்று பிரார்த்தித்தார்.

பிறகு அவர் அரசனிடம் விடைபெற்று ஸ்ரீ வில்லிபுத்தூருக்குச் சென்றார். சென்றதும் தாம் பெற்ற பொருளைப் பகவான்சந்நிதியில்வைத்து, "தேவரீர் கிருபையால் கிடைத்த தனம் தேவரீருக்கே உரியது," என்று கூறி வழக்கம்போல நறுமணங்கமழும் மலர்களாலாய மாலைகளைப் பகவானுக்குச் சூட்டி மனங்களித்துவந்தார்.

——:(o):——

## திருமழிசையாழ்வார் சரித்திரம்.

மஹீஸாரமென்னும் திருமழிசையிலே அத்திரி, வசிஷ்டர், பார்க்கவர் முதலிய ரிஷிகள் உலகப்பற்றை யொழித்துக் கடுந்தவமியற்றி வந்தனர். பார்க்கவ முனிவரானவர், 'தீர்க்க ஸத்ரம்' என்னும் வேள்வியியற்றி அதிக பக்திபூண்டு கடவுளைத் தொழுது இருந்தார். அவருடைய தவக்கோலத்தைக்கண்டு பொறாமை கொண்ட இந்திராதி தேவர்கள் அவரது தவத்தைக் கலைக்கும்படி சில அரமகளிரை ஏவினர். அவர்களில் மிகவும் சாமர்த்தியம் வாய்ந்தவளான கனகாங்கி

யென்பவள் தன் லீலாம்ருதத்தால் முனிவரது மனம் வேறு படும்படி செய்ய, அவர் தவத்தைத் துறந்து அவள் வசப்பட்டிருந்தார். நாளடைவில் கனகாங்கியின் வயிற்றில் ஒரு குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு அவயவங்கள் இல்லாமலிருக்கவே பார்க்கவ முனிவரும் தேவமகளும் அதை வெறுத்து ஒருபுறம் எறிந்து சென்றனர். அக்குழந்தையானது உலக மாதாவின்னருளால் சகல அவயவங்களைப் பெற்று உயிர்த்துத் தோன்றியது. அக்குழந்தையே திருமழிசைப்பிரானவர்.

அக்குழவியானது பிரப்பந்தூற்றிலே அழுதுகொண்டிருப்பதைப் பெருமான் கண்டு மனஞ்சகியாது பிராட்டியுடன் அங்குச்சென்று தரிசனம் தந்து குழந்தையை ஆதரித்தார். குழந்தையும் பசி தாக மொழிந்து களிப்படைந்திருந்தது. பகவான் திடீரென மறையக் குழந்தை அழ ஆரம்பித்தது. அப்போது பிரம்பறுக்கவந்த திருவாளனென்னும் வேளாளன் அழுகுரல் கேட்டுக் குழந்தையைக்கண்டு மகிழ்ந்து தன்னகத்திற்கெடுத்துச்சென்றான். அக்குழந்தையானது மற்றக்குழந்தைகளைப்போல அழுதல் விளையாடுதல் முதலிய நடத்தைகளின்றிப்பகவத்தியானத்தையே கைக்கொண்டு வளர்ந்து வந்தது.

அவருக்கு ஏழுவயதானவுடன் அஷ்டாங்க யோகத்தில் கருத்துடையவராய்ப் பல சமய நூற்களையும் கற்று உண்மையை யறிய விரும்பினர். இவ்வாறு அவர் ஒவ்வொரு சமய நூலாகப்பார்த்து அதிலுள்ள குறைகளைக்கண்டு விலக்கி வேறொரு சமயத்தில் புகுந்தார். கடைசியில் அவர் சைவ சமயமேமெய்ச்சமயமெனத்துணிந்து சிவவாக்கியர் என்னும் பெயருடன் சிவதியானம் செய்துகொண்டிருந்தார்.

முதலாழ்வார்களில் ஒருவரான பேயாழ்வார் என்பவர் சிவவாக்கியரைப்பற்றிக் கேள்வியுற்று அவரைத்திருத்திப்பணி கொள்ளும் பொருட்டு அவ்விடம் வந்தார். சிவவாக்கியர் ஆசிரமத்திற் கருகில் பேயாழ்வார் ஒருதோட்டமியற்றிச்சில செடிகளைத் தலைகீழாக நட்டுச் சில்லிக்குடமொன்றில் நீர் மொண்டு ஊற்றத்தொடங்கினார். இச்செய்கையைக் கண்ட சிவவாக்கியர் அவரைப் பரிகசித்து இதென்ன பைத்திய மென்று கூறப் பேயாழ்வார், "நானல்ல பித்தன். நீரே மதி மயங்கிக்கிடக்கின்றீர். பலமதங்களையும் ஆராய்ந்து பார்த்தும் உண்மையறிந்து கொள்ளாமல் மயங்கிக்கிடப்பவர் நீரே. உலகரட்சகரான கண்ணபிரானிருக்க அவரை விட்டு நீர் வேறொரு தெய்வத்தைப் பஜித்து அடையப் போகும் பல னொன்றுமில்லை," என்று கூறினார். உடனே இருவருக்கும் பெரிய சம்வாதம் நடந்தது. பேயாழ்வார் சிவவாக்கியருக்குத் தாம் கூறியது உண்மையே என்று நிரூபிக்கச் சிவவாக்கியர் தம்வாணாள் வீணாளதே என்று வருந்தித் தாம்பூண்டிருந்த சிவச்சின்னங்களைக்களைந்து எறிந்து விட்டு வீரவைஷ்ண வரானார்.

ஒரு நாள் ஆழ்வார் பரமபதநாதனைத் தியானித்துக் கிழிந்த துணியைத் தைத்துக்கொண்டிருக்கையில் சடாதாரி யாகிய சிவபிரான் பார்வதி தேவியுடன் அவர்முன் தோன்றி னார். அவர்கள் வந்ததையுணர்ந்த ஆழ்வார் பாராதவர்போல் உதாசினம் செய்து இருந்தார். சிவபிரான் ஆழ்வாரை நோக்கித்தம்மை அலட்சியம்செய்த காரணமென்ன வென்று வினவ ஆழ்வார் தாம் சிவனைத்தியானித்து அடையப்போகும் பலனொன்று மில்லை யெனக்கூறினார். ஆழ்வார் தம்மை மதி யாது கர்வத்துடன் பேசியதைக்கேட்ட சிவபிரான் வெகுண்டு தம் நெற்றிக்கண்ணைத் திறந்து விட்டார். அக்கண்ணிலிருந்

தெழுந்த தீ உலகமெங்கும் எரிக்கத்தொடங்கியது. உடனே கண்ணபிரான் பிரளயகால மேகங்களை விளித்து அத்தீயை அணைக்கும்படி ஆக்ஞாபிக்க அவைகள் அவ்வாறே செய்தன. இதைக்கண்ட சிவபிரான் அவரது பக்தியை மெச்சிக் கைலை சென்றனர்.

பிறகு ஆழ்வார் பலஸ்தலங்களுக்குச் சென்று சுவாமியைத்தரிசித்துக் கும்பகோணம் என்னும் திருப்பதியையடைந்தார். அத்தலத்திலுள்ள பெருமான் ஆழ்வாரது சிறப்பை உலகத்தாருக்கறிவிக்க வேண்டி, ஆழ்வார் எப்பக்கமாய்த்திரும்பினாலும் அப்பக்கமாகத்தாமும் திரும்பினார். இதைக்கண்ட அர்ச்சகர் முதலானோர் அதிக ஆச்சரியமடைந்தனர். இதைக்கேட்ட புலியூரடிகள் என்ற தீக்ஷதர் திருமழிசை யாழ்வாரைத்தியானித்துத் தம்முடைய யாகசாலைக் கழைத்துச்சென்று, அக்கிர பூஜை நடத்தினார். இதைக்கண்ணுற்ற சிலர் தீக்ஷதரை நிந்திக்க, ஆழ்வார் அவர்களைத்தண்டிக்குமாறு பகவானை வேண்டினார். உடனே பெருமான் ஆழ்வாருடைய திருமேனியினின்றும் பிரசன்னமானார். இதைக்கண்டவுடன் எல்லோரும் அவர்பாதத்தில் வீழ்ந்து, தம்மை மன்னிக்கும்படி வேண்டினர். பிறகு ஆழ்வார் ஜனங்கள் உய்யுமாறு பல பிரபந்தங்களை இயற்றி வைகுண்டம் புகுந்து பேரின்பவீட்டை யடைந்தார்.

——:(0):——

## நம்மாழ்வார் சரித்திரம்.

தாமிரபரணி என்னும் ஆற்றின் கரையில் திருக்குருகூரென்னும் நகர் ஒன்றுண்டு. அங்கே வசித்திருந்த செந்தாமரைக்கண்ணருக்குப் பொற்காரியாரென்னும் புத்திரர் அவதரித்தார். பொற்காரியார் தம்குமாரரான காரியாருக்கு

விவாகம்புரிவிக்கக் கருதித் திருவாழ்மார்பர் என்னும் பாக வதருடைய புத்திரியான உடையநங்கையாரை ஏற்பாடு செய்து மணமுடித்தனர். காரியார் தம் மனைவியுடன் இல்லறம் நடத்திப் பகவானைத் துதிசெய்து வந்தார்.

சில நாள் கழித்துக்காரியார் தம்மனையாளைப் பிறந்தகத்தில் விட்டுத் திரும்புகையில் திருக்குறுங்குடி சென்று எம்பெருமானைச் சேவித்துப் புத்திரப்பேறளிக்குமாறு வேண்டிக்கொண்டார். பெருமான் தாமே வந்து புத்திரராக அவதரிப்பதாகக்கூறி மறைந்தார். உடனே உடையநங்கை யார் கர்ப்பவதியாகி நல்ல சுபதினத்தில் சகல லட்சணங்களும் பொருந்திய குமாரனைப் பெற்றாள்.

பகவான் இங்ஙனம் அவதரித்ததையுணர்ந்த திருவனந்தாழ்வார் குழந்தைக்கு வெயிலும் மழையும் படாதபடி தடுக்க ஒருபுளிய மரமாகி நின்றார். தெய்வ கிருபையால் பிறந்த அக்குழந்தை பாலுண்ணாமலும் அழாமலும் மௌனமாக இருந்தது. இதைக் கண்டு பெற்றோர் ஆச்சரிய முற்றுத் தென்கரையி லெழுந்தருளியிருக்கும் எம்பிரான்முன் எடுத்துச்சென்று குழந்தைக்கு மாறன் என்று பெயரிட்டார்கள். இவ்வாழ்வார் புளிய மரத்தினடியிலேயே பதினாறு வயதளவும் திருக்கண்ணை விழியாமல் மௌனமாய் எழுந்தருளியிருந்தார். பரமபதநாதன் சேனை முதலியாரை அனுப்பி நம்மாழ்வாருக்கு மந்திரங்களையும் திராவிட வேதத்தையும் உபதேசித்து வரும்படி செய்தார்.

அவர் இவ்வாறு மிகுந்த பிரபாவத்துடன் எழுந்தருளியிருக்கையில் மதுரகவியாழ்வார் திவ்விய தேசயாத்திரை செய்து அயோத்திக்கு எழுந்தருளினர். ஒருநாளிரவு தென் திசையை நோக்குகையில் ஓர் திவ்விய ஜோதியைக் கண்டு அதிசயித்து, அந்த ஜோதிக்குக் காரண மின்னதென்றறிய

விரும்பினர். அவர் அவ்வொளிவரும் திக்கைநோக்கிப் பல நாட்கள் வரையில் நடந்து வந்தார். திருவரங்கம் வரையில் வந்து பார்த்தும் அவ்வொளி அதற்கு மப்பால் விளங்குவது கண்டு திருக்குருகூரை அடைந்தார். அவ்வூரில் அவ்வொளி இவருக்குத் தென்படாமற் போகவே அவ்வொளிக்குக் காரணமான வஸ்து அங்கே யிருக்கவேண்டுமென்று தேடுகையில் புளியமரத்தினடியில் பத்மாசனத்தில் வீற்றிருக்கும் நம்மாழ்வாரைக் கண்டார். மதுரகவியார் அவரை வணங்கி அவர் மகா ஞானியாதலால் அவரது பாதம்பற்றி உய்வதே நலமெனக்கருதித் தம்மை ஆட்கொள்ளும்படி பிரார்த்தித்தார்.

எம்பிரான் நம்மாழ்வாருக்குச் சேவைசாதிக்க விரும்பித் தாமும் பிராட்டியுமாக நம்மாழ்வார்முன் தோன்ற, ஆழ்வார் பெருமாள் கலியாண குணங்களைக் கண்டு மனமகிழ்ந்து திருவாய்மொழி மூலமாகப் பகவானுடைய பெருமையை எடுத்துரைத்தார். இவரைக் காணும்பொருட்டுப் பல தவசிரேஷ்டர்களும் பாகவதர்களும் அங்கே வந்தார்கள். ஆழ்வார் அவர்களைக் கண்டு, அவர்கள் எல்லாரையும் சேவித்துத் தாமும் இன்புற்றிருந்தார்.

77414

## *IN THE PRESS.*

# THE STORY OF LORD BUDDHA.

**Price : 8 As. exclusive of postage**

## Stories from the History of Rome.

**Price : 8 As., exclusive of portage.**

THE ABOVE TWO BOOKS ARE WRITTEN IN TAMIL.

## *READY FOR SALE.*

# MONEY'S ORAL COMPOSITION

BOOKS V & VI

FOR THE USE OF FORMS V & VI.

**Price : 12 As., exclusive of postage.**

**Key-Price : 8 As., exclusive of postage.**

# MONEY'S LETTER-WRITER

**Price : 12 As., exclusive of postage.**

# STORIES IN VERSE.

**Price : 1 Re., exclusive of postage.**

A KEY to the above (containing the substance of each story).

**Price : 8 As., exclusive of postage.**

**Money's Handbook of Dialogues and Debates,**

**Price : 12 As., exclusive of postage.**

## Student's Handbook of Model Essays.

**Price : 12 As., exclusive of postage.**

## S.S.L.C, Guide to English Composition,

Containing Answers to S. S. L. C. Questions, &c ,

**Price : 12 As., exclusive of postage.**

## INTERMEDIATE EXAMINATION.

1. **Money's Critical Guide to the Non-Detailed English Texts for 1924,** containing Summaries, etc,

**Price : Rs 1-4-0, exclusive of postage.**

2. **Money's Critical Guide to the Non-Detailed English Texts for 1925.**

**Price : Rs. 1-4-0, exclusive of postage.**

3. **The Intermediate Guide to English Composition,** containing among other things, Answers to the University Questions.

**Price : Rs. 1-4-0, exclusive of postage.**

## Books to improve your English.

(1) The Royal Road to Happiness

Containing Essays written in eloquent and forcible English on the *Service of Man, the Man of Sincerity, etc.*

**Price : 8 As., exclusive of postage.**

(2) Money's Ready-made Speeches.

**Price : 12 As., exclusive of Postage.**

*Apply (writing legibly) to :—*

**A. S. MONEY & CO.,**

*24, Sambier St., near Shanmugam Bazaar, G. T., MADRAS.*

Printed at the Sri Radha Krishna Press, G. T., Madras.